மண்ணும் மக்களும்

பண்பாட்டு ஆய்வு மாத இதழ்

www.aatrupadai.com

ஏப்ரல் – 2024 இதழ் – 04 பங்குனி – சித்திரை



கட்டுரைகள்

மண்ணும் மக்களும் – பண்பாட்டு ஆய்வு மாத இதழ்

ஆற்றுப்படை வெளியீடு

(2024 – ஏப்ரல் – இதழ் - 04)

ஆக்கம்

வே. பார்த்திபன்

தொகுப்பு

பா. பிரபாகரன்


அ.சி. நடராஜன்


தொடர்புக்கு - 97900 76772 / 90255 16415

பொருளடக்கம்

பொருளடக்கம்

இனிய இறையன்பும் எளிய சொல்லாட்சியும்





முனைவர் **வெ.மைதிலி**
ழ கரக்கூட்டம் நிறுவனர்.
தமுஎகச கோவை மாவட்டம்.
தமிழாசிரியர்.

இவர் இந்திய ஆட்சிப் பணித் தேர்வுக்குத் தமிழை ஒரு விருப்பப் பாடமாகப் படித்து வெற்றி பெற்றார். இவர்தன் வெற்றியைக் கூட சாதனையாகக் கருதாமல் மிக எளிதில் பெற்றதாகவே கருதி அந்தப் பதவிக்கு தன்னைத் தகுதிபடுத்திக் கொள்ள வேண்டுமென்று முயற்சிகள் மேற்கொண்டதாகக் கூறுகிறார்.

முன்னுரை:

மேன்மையான மனிதர்களையும், கம்பீரமான சூழலையும் சுயநலமற்ற கடும் உழைப்பாளிகளையும் படைத்துக் காட்டுவதும், அவற்றை வாசிப்பவர்கள் மனதில் தாங்களும் அதைப்போல் ஒரளவேணும் மாற வேண்டும் என்ற உத்வேகத்தை ஏற்படுத்துவதாகவும் சமூகத்தில் இன்னும் கறைபடாமல் இயங்கிக் கொண்டிருக்கின்ற மகத்துவம் பெற்றவர்களைக் குறியீடுகளாக்கி அவற்றின் மூலம் வாழ்வில் நம்பிக்கை ஏற்படச் செய்து ஒவ்வொரு மனிதனும் தன்னிடம் இருக்கின்ற அழுக்குகளை அகற்றிவிட்டு லட்சியத்தை உருவாக்கி தீவிரமாக நடைபோட வைத்து இன்றைய மாணவச் சமுதாயத்திற்கு தமது எழுத்தாலும், பேச்சாலும் பல வழிகளில் **வெ.இறையன்பு இ.ஆ.ப**. அவர்களின் எழுத்துப்பணி மகத்துவம் மிக்கது.

இவர் 1963 செப்டம்பர் 16ம் தேதி சேலம் காட்டூரில் பிறந்தார். இவர் இந்திய ஆட்சிப் பணித் தேர்வுக்குத் தமிழை ஒரு விருப்பப் பாடமாகப் படித்து வெற்றி பெற்றார். இவர்தன் வெற்றியைக் கூட சாதனையாகக் கருதாமல் மிக எளிதில் பெற்றதாகவே கருதி அந்தப் பதவிக்கு தன்னைத் தகுதிபடுத்திக் கொள்ள வேண்டுமென்று முயற்சிகள் மேற்கொண்டதாகக் கூறுகிறார்.

நிர்வாகத்திற்கும் இலக்கியத்திற்கும் பொதுவாகத் தேவைப்படுவது ஈர இதயம் மட்டுமே அந்த இதயத்தோடு இன்று லெகுஜனப் பத்திரிக்கைகள் கூட தீவிர இலக்கியத்தை நாடுகின்ற அளவிற்குச் செறிவையும், ஆர்வத்தையும் நவீன இலக்கியங்களில் புதிய புதிய சொல்லால்களும் கட்டுரைகள், பயணக் கட்டுரைகள் ஆகியன எழுதி தமிழின் வீச்சை அடுத்த கட்டத்திற்கு அழைத்துச் செல்கின்றார்.

புதிய தலைமுறை இதழில் போர்த்தொழில் பழகு என்ற தொடரில் உத்திகள் வகுப்போரே வெற்றிகள் குவிப்பர் என்பதனை 29 வாரங்களாக மிகத் தெளிவாக நேர்மையான முறையில் தோன்ற வேண்டிய ரௌத்திரத்தை ஒவ்வொருவருக்குள்ளும் தோற்றுவிக்கிறார்.

வரலாறு என்பது வருடங்களை நினைவில் வைத்துக் கொள்வதற்காக அல்ல. நிகழ்வுகளை வருடிக்கொடுத்து வாழ்க்கையை வரவு வைத்துக் கொள்வதற்காக. சரித்திரம் திரும்ப நிகழ்வதில்லை. சம்பவங்கள்தான் வெவ்வேறு நபர்களால் மீண்டும் அரங்கேறுகின்றன. இன்றைய இளைஞர்கள் படிப்பைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டு மற்றவற்றை நழுவவிட்டு விடுகிறார்கள். வீரமும், ஈரமும் ஒருங்கே இருந்தால் தான் தீரர்களாகத் திகழ முடியும். அதற்காக போர் செய்யணும் என்பதல்ல பொருள். போர்க்குணம் எப்போதும் தேவை. குணம் புரட்சி நிகழ்த்துவதற்கு மட்டுமல்ல வறட்சியை சமாளிப்பதற்கும் துணிச்சலும், தன்னம்பிக்கையும் இருப்பவர்களே நாட்டின் தூண்களாக இருந்து செயல்பட முடியும். இன்றைய வாழ்வு சூழ்ச்சிகள் நிறைந்த போர்களம். இதில்,

"இன்று போட்டித் தேர்வும் போருக்கு ஒப்பானது

வர்த்தகக் களமும் பந்தயக்களமே!

உத்திகள் வகுப்போரே வெற்றிகள் குவிப்பர்

வியூகங்கள் வகுப்போரே சோகங்கள் தவிர்ப்பர்"

(போர் தொழில் பழகு)

என்று கூறுவதன்மூலம் சிலரது பணிவிற்குப் பின்னால் சதி வேலைகள் மறைந்திருக்கும் என்பதனையும், அவர்களின் தந்திரங்களைத் தெரிந்து கொள்ளவும் வேண்டும் என்கிறார். ஆம் ஆயுதங்களால் வென்ற யுத்தங்களைவிட உத்திகளால் வென்றவையே அதிகம்.

வீரமே உச்சம்:

துணியின்றி உடையும் துணிவின்றி படையும் சாத்தியமாகாது. அறிவற்ற வீரம் கூட அரியணை ஏறியதுண்டு வீரமற்ற அறிவு ஒரு போதும் பயன்படாது. துணிவோடு போராடுபவர்களே வெற்றியைப் பெற்று உலகிற்கு வெளிச்சத்தை விநியோகித்திருக்கிறார்கள்.

இதனையே,

"துணிவும் வீரமும் கொண்டு ஆர்வத்தெழாத

சமூகம் எத்தனை மேதைகளை தன்னகத்தே

வைத்திருந்தாலும் அடிமைகளாகவே மடிய வேண்டியதுதான"

என்று கூறுவதிலிருந்து உண்மையை உலகிற்குச் சொல்லவும், உதவாக்கரைகள் செய்யும் விமர்சனத்தை உதறித் தள்ளவும் வீரம் அவசியம் என்பது அறிந்து கொள்ள முடிகின்றது. ஆனால் இன்று வீரம், தீரம் என்பவையெல்லாம் அகராதியில் காணும் சொற்களாய்ப் போய் விட்டது. அவற்றுக்கும் இன்றுள்ள நமது வாழ்க்கைக்கும் எந்தஒரு தொடர்பும் இல்லாதது போல் ஆகிவிட்டது. ஆனால் நாடு நலம் பெற மீண்டும் பெறுதல் வேண்டும். போர் உத்திகளைப் போருக்குப் பயன் படுத்துவதோடு நிறுத்தி விடாமல் அதை வாழ்வுக்கும் விரிவாக்கம் செய்து வாழ்வாங்கு வாழவேண்டும்.

புயலெனப் புறப்படு:

போரில் வேகமும், அதிரடியான தாக்குதலுமே போக்கை நிர்ணயிருக்கின்றன. பெரிய படையையும் புயல் வேகத்தில் தாக்கும் போது, அது மிரண்டு போகிறது. மல்லுக் கட்டுவது என்று வந்துவிட்டால் அடிக்கிற ஒவ்வொரு அடியும் இடிபோல் இறங்க வேண்டும் என்றும் படைவலியை கூறுமிடத்து,

"புறப்படுகின்ற வரை அனைத்து வகைகளிலும் தயாராகி, கிளம்பும்போது

காற்றாய் வேகமெடுத்து தாக்கும்போது புயலாய் சேதமேற்படுத்தி எதிரிகளை

துவம்சம் செய்கிற படை, போரிடலாம் என்று எண்ணுகிற மற்ற எதிரிகளின்

மனதிலும் நடுக்கத்தை ஏற்படுத்துகிறது. வேகமும், விரைவும் ஒழுங்குபடுத்தப்

பட்ட இடி போன்ற தாக்குதலும் சிறிய படையையும் வலிமை வாய்ந்த அணியாக

மாற்றுகிறது"

என்று படை வலிமையை எடுத்துக் கூறுகிறார். எதிர் பார்க்காத திசையில் எதிர்பார்க்காத நேரத்தில் புறப்பட்டு வருவது போர் உத்திகளில் முக்கியமானது. இதே உத்திகள் நாம் போட்டியிட நேரிடும் இடங்களிலும் பளிச்சிட நினைக்கும் தேர்வுகளிலும் இவ்வாறு அதிரடியாக வரை முறைகளை உடைக்கும் செயல்களில் ஈடுபட்டால் எப்போதும் வெற்றியே விளையும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

நகலெடுக்காதே!

போரிலும், வாழ்விலும் நகலெடுப்பவர்கள் விரைவில் வெளுத்துப் போவார்கள். உண்மை வெளிப்படும் போது உலகம் அவர்களை ஒரேடியாகத் தூக்கி எறிந்துவிடும். என்று கூறுவதன் மூலம் புதிய உத்திகளை பயன்படுத்துபவர்களே வெற்றியை அடைய முடியும் என்கிறார்.

யாரைப் போலவும், எதைப் போலவும் செய்யாமல் சுயமான சிந்தனைகளை வென்றெடுத்து அவற்றிற்கு பயனுள்ள வடிவம் யார் தருகிறார்களோ, அவர்களே வாழ்வை பொன்னெழுத்துக்களால் பொறித்துச் செல்கின்றனர்.

இறுதியாக...

போர்க்குணம் என்பது தீக்குச்சி போல உரசும்போது பற்றுகிற ஒன்றே தவிர, கொள்ளிக்கட்டை போல எப்போதும் எரிந்து கொண்டிருப்பதல்ல, படிப்பிலும், போரிலும் புதிய ஆயுதங்களை முதல் முறையாகப் பயன்படுத்துகிறவன் வெற்றி பெறுவதைப் போல விடைத்தாளில் புதிய கருத்துகளை நேர்த்தியாகவும் அழகாகவும் அணிவகுக்கச் செய்கிறவன், நிறைய மதிப்பெண் பெறுகிறான் பணியிலும் புதிய முறைகளைப் புகுத்தி எல்லா முனைகளிலும் வர்த்தகத்தை வெற்றி பெற வைக்கிற மனிதன் சிறந்தவனாகிறான். எந்த இடத்திலும் எவ்விதத் தொய்வும் நிகழாமல் எச்சரிக்கையுடன் இருப்பவன் அனைத்திலும் முதலிடம் பெறுகிறான். மேலும்,

நம் குழந்தைகள் முட்டாள்களாகக் கூட இருக்கலாம். துரோகிகளாகவும், கோழைகளாகவும் இருக்கக் கூடாது என்பதுதான் பெற்றோர்களுடைய குறிக்கோளாக இருக்க வேண்டும். அவர்களுக்கு வைராக்கியத்தை அங்குலம் அங்குலமாக ஊட்ட வேண்டும். அவர்கள் தோல்வியடைந்தாலும், ஊக்க மளிக்க வேண்டும். அவர்களுக்கே தெரியாமல் அவர்களுக்குள் பதுங்கியிருக்கும் வீரத்தையும் ஆர்வத்தையும் சக்தியையும் வெளியே கொண்டுவர வேண்டும் என்று போர் உத்திகளை வாழ்க்கையோடு ஒப்பிட்டு இன்றைய இளைஞர்கள் மாணவர்கள் சமுதாய அக்கறையோடு தம் வாழ்வில் முழுமையாக வெற்றிபெற பல உத்திகளை இக்கட்டுரைகளில் மிக நுணுக்கமாக எடுத்துக் கூறிச் செல்கிறார்.

இந்தியர் உலக அரங்கில் தலை நிமிர்ந்து பண்பிலும், செல்வத்திலும், தொழில் நுட்பத்திலும், கல்வியிலும், வீரத்திலும், தன்னம்பிக்கையிலும் சுயசார்பிலும், மானத்திலும் பட்டொளி வீசிப் பறக்க வேண்டும். போர்த்தொழில் பழகியவன், தேவையின்றி கலவரம் செய்ய மாட்டான். அவன் கம்பீரமே போதும். எதிரிகள் காணாமல் போய்விடுவார்கள். அவன் களையெடுப்பதும் கச்சிதமாக இருக்கும். கலை கற்பதும் தீவிரமாக இருக்கும். அவன் எப்போதாவது களத்தில் இறங்கினால் அவன் புறப்பாடு புயலாகவும், சுழற்சி சூறாவளியாகவும் இருக்கும். அப்படிப் பட்டவர்கள் நாட்டின் சிறந்த சிற்பிகள்!.

"போர்க்களம் புகுவோம்!!

வெற்றிகள் குவிப்போம்!!

மேற்கோள் நூல்:

போர்த்தொழில் பழகு - **வெ. இறையன்பு.**

புதிய தலைமுறை **வெளியீடு.**



உழுதுண்டு வாழ்வார்



முனைவர் இரா.மணிமேகலை
இணைப்பேராசிரியர் தமிழ்த்துறை
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர்- 29

“உலகிலுள்ள உயிரினங்கள் தத்தமது உடலியல் அமைப்புக்குத் தகுந்தாற் போல உணவைத் தேடியும் பெற்றும் உட்கொண்டும் பசியை நிறைவு செய்து கொள்கின்றன. இத்தகைய உயிரினங்களை நீர் உறிஞ்சிகள்,பயிர் உண்ணிகள்,ஊன் உண்ணிகள் என மூவகைப்படுத்துவர் உயிரியல் ஆய்வாளர்கள். மேற்குறித்த மூவகைப்பட்ட உணவு முறைகளையும் ஒருங்கே உட்கொள்ளும் உண்ணியாகத்தான் மனித இனம் பரிணமித்திருக்கிறது. அதாவது, இந்த மூவகை உணவு முறைகளை உண்டு பரிணாமச் சுழற்சியிலும் வளர்ச்சியிலும் முன்னேறிய வளர் நிலைகளை அடைந்திருப்பது மனித இனம் மட்டும் தான்.”

*சிவம் பெருக்கும் சீலராகவும் அருள் பழுத்த நெஞ்சினராகவும் விளங்கிய தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள் கி.பி.17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிவ ஞானியாவார். பல்வேறு செந்தமிழ்ப் பனுவல்களை அளித்து **"கற்பனைக் களஞ்சியம்"** என்று போற்றப்படும் சிவப்பிரகாச சுவாமிகளை, **"நன்னெறிச் சிவப்பிரகாசர்", "துறைமங்கலம் சிவப்பிரகாசர்", "கவி சர்வ பௌமர்"** என்னும் பெயர்களிலும் அழைப்பர்.*

வீர சைவத் துறவியாக விளங்கிய சுவாமிகள் பிரமசரிய நிலையிலிருந்து நேரடியாகத் துறவறம்பூண்டவர் ஆவார். தம் தம்பியர்கள் வேலையர், கருணைப் பிரகாசர் ஆகியோர்க்கு அவர்கள் விருப்பப்படி திருமணம் செய்து வைத்தார். அவர்தம் இல்லறம் சிறக்க மணமக்களை வாழ்த்திப் பாடிய கவிதைகளாக ஐந்து பாடல்கள் அவரது வரலாற்றில் கிடைக்கின்றன.

அப்பாடல்களைப் பயில்வோர்க்கு நகை மொக்கு பூக்கும் படியாகக் களி நயமுடன் இறைவன் இறைவியின் உரையாடலாக அமைத்துள்ளார். மிகுந்த சுவையுடைய இப்பாடல்களில் ஒன்று உலகியலில் கணவன் மனைவிக்கிடையே நடைபெறுகின்ற ஆலோசனைப் பேச்சு போன்று உள்ளது. அதில் குடும்ப வாழ்க்கைத் தேவைக்குப் பொருள் தேடும் முறையைப் பற்றி மலையரசன் மகளாகிய உமையன்னை தன் கணவன் இறையவரிடம் அறிவுரை கூறுகின்றாள். இரந்து (பிச்சை எடுத்து) வாழும் வாழ்க்கையை விட்டு உழுது உண்டு வாழும் வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும் என்கிறாள்.

***“பிச்சாடனர்”** என்றும் **“பலிதேர் பிரான்”** என்றும் **“ஐயங்கொள் பெம்மான்”** என்றும் போற்றப்படுவது சிவபெருமானின் பிச்சையேற்கும் வடிவிலமைந்த திருக்கோலம் ஆகும். இது அறுபத்துநான்கு சிவமூர்த்தங்களுள் ஒன்றாகும்.*

*இக்கோலம் தாருகாவன முனிவர்கள் ஆணவத்தினை அழிப்பதற்காக சிவனார் எடுத்த மிக அழகிய கோலமாகும். இவ்வடிவில் ஈர்க்கப்பட்டு மணிவாசகப் பெருமான் **"பிச்சை தேவா"** என்று அழைக்கின்றார். சோழர் காலக் கல்வெட்டுகளும் இவரைப் **"பிச்சதேவர்"** என்கின்றன.*

ஆணவ அழுக்கடையும் ஆவியை விளக்கி அநுபூதி நிலையை எட்டுவதற்கு வணங்க வேண்டிய திருக்கோலம் பிட்சாடனார் வடிவம் ஆகும். ஆனால் உமையவளோ இப்பாடலில் பிச்சை எடுத்து வாழும் வாழ்க்கையை இத்தோடு நிறுத்திக்கொள்ளுமாறு தன் கணவர்க்கு புத்திமதி கூறி உரையாடுகின்றாள். உழுது பயிரிட்டு உணவு உற்பத்தி செய்வதற்கான வழிமுறைகளை அடுக்கி உரைக்கின்றாள். உலகிலுள்ள உயிரினங்கள் தத்தமது உடலியல் அமைப்புக்குத் தகுந்தாற் போல உணவைத் தேடியும் பெற்றும் உட்கொண்டும் பசியை நிறைவு செய்து கொள்கின்றன. இத்தகைய உயிரினங்களை நீர் உறிஞ்சிகள்,பயிர் உண்ணிகள்,ஊன் உண்ணிகள் என மூவகைப்படுத்துவர் உயிரியல் ஆய்வாளர்கள். மேற்குறித்த மூவகைப்பட்ட உணவு முறைகளையும் ஒருங்கே உட்கொள்ளும் உண்ணியாகத்தான் மனித இனம் பரிணமித்திருக்கிறது. அதாவது, இந்த மூவகை உணவு முறைகளை உண்டு பரிணாமச் சுழற்சியிலும் வளர்ச்சியிலும் முன்னேறிய வளர் நிலைகளை அடைந்திருப்பது மனித இனம் மட்டும் தான்.

இத்தகைய மனித இனத்திற்கும் மற்ற உயிரினங்களுக்கும் உள்ள மிகக் குறிப்பிடும்படியான வளர்ச்சி என்பது, உணவு உற்பத்தி நிலைதான். மனித இனம் மட்டும் தான் தமது உணவுத் தேவையைத் தாமே தேடிக் கொள்வது மட்டுமல்ல, தாமே உற்பத்தி செய்யவும் தொடங்கியது. உணவைப் பெறுவதுதான் மனிதரது முதல் தேடலாக அமைந்திருக்கிறது. இந்த உணவுத் தேடலுக்கும் உற்பத்திக்கும் பல முறைகளும் கருவிகளும் பயன்பட்டு வந்திருப்பதை வரலாற்றின் ஊடாக அறிய முடியும்.

உழவு என்ற ஒரு சொல் உழுகின்ற மனிதர், உழவுப்பகடு, உழுங் கலப்பை, உழவுநிலம் என்று ஒட்டு மொத்தமாய் ஒரு செயலை அடையாளப்படுத்தி நின்றது.

இத்தகைய உழவுத் தொழில், முதலில் முல்லை நிலத்திலேயே தொடங்கிற்று என்பார் அறிஞர் பாவாணர். காடாகிய முல்லை நிலத்திலேயே உழவு தோன்றிற்று. அது மருத நிலத்தில் சிறப்படைந்தது. முன்னதில் புன்செய் பயிரும், பின்னதில் நன் செய் பயிரும் விளைவிக்கப்பட்டன. வேட்டைச் சமூக நிலையிலிருந்து மாறி உணவு உற்பத்திக்கான இடமாக நிலத்தை அறிந்த பிறகு மனித இனத்தின் பண்பாட்டில் மாபெரும் அசைவு ஏற்பட்டது.

இனி மீண்டும் நாம் சிவப்பிரகாச சுவாமிகளின் பாடலைக் காண்போம். உழவுத்தொழில் செய்து வாழலாம் என்றவுடன் உழவுக்குத் தேவையான பொருள்களை யாரிடம் பெறலாம் என்று சிவபிரானிடம் கலந்து பேசி முடிவு செய்கிறாள் அன்னை.

"அச்சுதன் அளிப்பன் நிலம்;

உமது நேயன் வித்தை

அருளுவன் பல பத்திரன்

அலம் உதவுவன்;

எமன்பகடு ஈவன்;

நந்தமக்கு

ஆனதோர்எருதும் உண்டே

முச்சிர அயில் படையினைக் கொழுவதாக்குவோம்;

மொய்ம்புடன் இழுத்து இறுக்க

முந்திய வடக்கயிற்றுடன் மற்றும்

நமது அன்பர்

முன் போய் இரந்து கொள்வோம்

இச்சையுடன் நமது இளைய

தனையனாகிய கந்தன்

இனிமையொடு மாடு மேய்ப்பன்

இனி உழுது பயிரிடுதல் நன்று நன்று;

இதை விட்டு

இரந்து உண்பது ஈனம் எனவே

கச்சு முலை மாது உமை உரைத்திடும் புத்தியைக்

கைக்கொண்டு உளத்தில்

இது நல்

காரியம் எனக் கருதி மெத்தக்களித்திடும்

கண்ணுதல் உமைக் காக்கவே"

உழவுத்தொழிலைச் செய்து வாழ்வை நடத்தலாம் என்று முடிவு செய்தவுடன்பயிரிடத் தேவையான உழவுக்கருவிகள் குறித்து சிந்தித்தாள்.

1. நிலம்

2. விதை நெல்

3. உழு கலப்பை

4. உழுபகடு

5. உழு கலப்பையின் கொழு

6. நுகத்தடிக்கயிறு.

7. எருது மேய்க்கும் சிட்டாள்

எனும் பொருள்கள் தேவைப்பட்டன.இவற்றை யாரிடமிருந்து பெறலாம் என்றும் தங்களிடம் உள்ள பொருள்களை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைப் பட்டியலிட்டுக் கூறுகின்றாள் உலகன்னை.

அச்சுதன் அளிப்பன் நிலம்

வாமன அவதாரத்தில் மாபலி அரசனிடம் மூவடி மண் கேட்டு ஈரடியாலே அளந்தவன் திருமால். விண்ணும் மண்ணும் அளந்த திருவடி உடையவன். **"ஓங்கி உலகளந்த உத்தமன்"** என்பாள் ஆண்டாள் பிராட்டி. விண்ணளந்த திரி விக்கிரமமூர்த்தியின் திருமேனியழகைப் பாடுவது எப்போதும் நாச்சியாரது பாசுரப் பழக்கம்.போதாதற்கு இளம் பருவத்தில் மண்ணையே உண்டவன் மாயவன். **"உலகுண்ட வாயன்"** என்று தமிழ் இலக்கியம் சுட்டும். எனவே காடும் காடு சார்ந்த இடத்தையும் உடைய முல்லைத் திணைக் கடவுளாகிய திருமாலிடம் மண் கேட்பது பொருத்தம் என்று கருதுகிறாள் அம்பிகை. மேலும் அவள் தன் சகோதரனிடம் சொத்தாக நிலம் கேட்டுப் பெறுவது முறைதானே. எனவே வேளாண்மை செய்வதற்குரிய நிலத்தைத் தன் அண்ணன் அச்சுதனிடம் பெறலாம் என்கிறாள்.

குபேரனிடம் விதை நெல் பெறலாம்

இந்து தொன்மவியலின் அடிப்படையில் குபேரன் செல்வத்தின் அதிபதியாவார். இவருக்கு இராவணன், கும்பகர்ணன், விபீஷணன் என்ற ஒன்று விட்ட சகோதரர்களும், சூர்ப்பனகை என்ற சகோதரியும் இருந்தாகவும் காட்டப்படுகிறது. மேலும், இவருக்கு சித்திரலேகா என்ற மனைவியும், இத்தம்பதிகளுக்கு நளகூபன், மணிக்ரீவன் என்று இரண்டு மகன்களும் உண்டு.

சிறந்த சிவபக்தரெனவும், சிவனுடைய இனிய நண்பரெனவும் கூறப்படும் குபேரன் வடக்கு திசை அதிபதியாகவும் எண் திசைப் பாலகர்களில் ஒருவராகவும் போற்றப்படுகிறார்.

இவரது இருப்பிடத்தை அளகாபுரி என்பர். அளகை வேந்தனாகிய குபேரன் சிவபிரானின் தோழர் என்று பொருள் கொள்ளும் படியாகச் **"சிவசகா"** என்ற பெயரும் குபேரனுக்கு உண்டு. திருவிசைப்பாவும் **"தனதன் தோழா"** என்று பாடுகின்றது. சிவபெருமானைக் குறித்து 800 வருடங்கள் கடும் தவமியற்றி அவரது நட்பினைப் பெற்றதாகப்புராணங்கள் கூறுகின்றன.

சிவபக்தனான குபேரன் தன்னுடைய சிவவழிபாட்டால் வடதிசைக்கு அதிபதியானார். சிவபக்தியின் காரணமாக சிவபெருமான் சுவர்ண பைரவராக குபேரனுக்குச் செல்வத்தினை நிர்வகிக்கும் பொறுப்பினைத் தந்தார். இவரிடம் விதை நெல்லைப்பெற்று நிலத்தில் விதைப்பது பொருத்தமானது என்கிறாள் அன்னை.

விதை நெல் என்பது அடுத்த வேளாண்மைப் பயிர்க்கான கருவினைச் சேகரித்து வைப்பது போன்றது. தனித்த வளமான மண்ணில் விதைக்கான தானியத்தைச் செழிப்பாக வளர்ப்பார்கள். ஒன்றுக்கு நான்கு முறை நன்கு களை எடுத்து ரசாயனம் பயன்படுத்தாமல் வேறு இனம் கலந்துவிடாமல் ஒரே ரகமாகப் பசுங்குழந்தை போல் வளர்ப்பார்கள். பின்பு கையாலேயே கதிர் அடித்து எடுத்து வேப்பிலை இட்டுப் பத்தாயத்தில்(குதிர்) வைப்பார்கள். அடுத்த வேளாண்மைக்கான விதை நெல்லை இவ்வாறு தான் சேகரிப்பர்.

சிவராத்திரியன்றுதான் விதை நெல்லைச் சேமிப்புக்குரிய கலன்களில் முதன்முதலாக இடுவது மரபு. தனதானியங்களை நிர்வகிக்கும் அளகேசனாகிய குபேரனிடம் விதை நெல்லை வாங்கி வந்து வேளாண் நிலத்தில் விதைக்கலாம் என்கிறாள் அம்பிகை.

பலராமன் கலப்பைதருவார்

கலப்பை - மண்ணைத் தோண்டி நிலத்தை உழப் பயன்படுத்தும் வேளாண்மைக் கருவி கலப்பை ஆகும்.

இக்கருவியை நிலத்தின் மீது அழுத்திப் பிடித்துக்கொண்டு இழுக்கச் செய்தால், கீழ்மண் மேலாக வருமாறு கிளறப்படுவது மட்டுமல்லாமல், விதை முளைக்க ஏதுவாக மண் இறுக்கம் (கெட்டிப்பு) குறைவாக மாறும்படிச் செய்யவும் உதவும். கலப்பையை ஏர் அல்லது ஏர்க்கால் என்றும் கூறுவர்.

உழவுக்குத் தேவைப்படும் கலப்பையை பலராமனிடம் பெறலாம் என்கிறாள் அன்னை. பலராமன் கலப்பையைத் தாங்கி இருந்தாலும் போரில் கௌமோதகி என்ற கதாயுதத்தையே முதன்மையாகக் கொண்டார். பலராமன், பீமனுக்கும் துரியோதனனுக்கும் கதாயுத ஆசானாவார். வேளாண்மைக்கு அடிப்படையான உழு கருவியாகிய கலப்பையை ஆயுதமாகக் கொண்ட பலராமர், உறவுமுறையில் கிருஷ்ணரின் சகோதரர் ஆவார்.கிருஷ்ணரின் தந்தை வசுதேவரின் முதல் மனைவி ரோகிணியின் வயிற்றில் உதித்தவர். இவரை **'பலதேவன்', 'பலபுத்திரன்', 'கதாயுதன்'** என்று போற்றுவர். உழவுத் தொழில் செய்வதற்குத் திருமால் அளித்த வேளாண்மை நிலத்தில் உழுவதற்குத் திருமாலின் அவதாரங்களில் ஒன்றாகிய பலராமன் தன் கலப்பையைத் தந்து உதவுவார் என்கிறாள் அம்பிகை.

உழு பகடு எமனிடம் பெறலாம்

உழவுத் தொழிலைச் செய்வதற்குக் கலப்பைப் பூட்டி ஏர் ஓட்ட வேண்டும். ஏர் ஓட்டுவதற்கு உழவு மாடுகள் அல்லது எருதுகள் வேண்டும். அம்பிகை உழவுக்கான எருமையை எமனிடமிருந்து பெறலாம் என்கிறாள். சோடி எருமைகளைப் பயன்படுத்தி ஏர் பூட்டவேண்டும் என்பதால் தன் கணவன் சிவபிரான் வாகனமாகிய தரும விடையாகிய ரிஷபத்தையும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று சிந்திக்கின்றாள். சிவபிரனின் ஊர்தி, காளையாகிய நந்தியாகும்.இத் தரும விடை பக்குவம் வாய்ந்த ஆன்ம வருக்க உயிர்களைக் குறிக்கும்.

இரும்பினால் ஆன உழு கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட பின்பு, உழவை அடிப்படையாகக் கொண்ட வேளாண் தொழில் பக்குவப்படத் தொடங்கியிருக்கிறது. அதிலும் குறிப்பாக, மாடுகளைப் பழக்கப்படுத்தி வேளாண்மையில் ஈடுபடுத்திய போதுதான், மனித சமூகம் தம்மை நிலை நிறுத்திக் கொண்டது. அதனோடு, பண்பட்ட ஒரு தொழிலாக வேளாண்மை அமைந்தது. மேலும், மனித சமூகம் நாகரிக வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு மாடுகளின் பங்கேற்பும் உழைப்பும்தான் பெரிதும் துணை நின்றுள்ளன. எனவே, தன் கணவரின் விடை வாகனத்தையும் எமராசனின் எருமை வாகனத்தையும் சோடி எருதுகளாக ஏரில் பூட்டலாம் என்னும் சிறந்த அறிவுரையைத் தெரிவிக்கின்றாள்.

திரிசூலமேகொழு

கொழு என்பது கலப்பையில் பொருத்தி மண்ணைக்கீறி உழும் இரும்பு உலோகம் ஆகும். மரக்கலப்பையில் பொருத்தப்பட்டிருக்கும் கொழுவானது மண்ணைத் தங்குதடையின்றித் திருப்பிப் போடுகிறது. கலப்பை உழும் ஆழத்திற்கு ஏற்றவாறு கொழுவை மாற்றி வைக்க வேண்டும். கொழு வேண்டுமே! என்ன செய்யலாம்? என்று யோசித்த அம்பிகை இறைவனின் திருக்கரத்தில் விளங்கும் முத்தலைச் சூலம் எனப்படும் திரிசூலத்தையே பயன்படுத்திக் கொள்ளலாம் என்கிறாள்.

சிவபெருமானுக்குரிய படைக்கலங்களுள் முதன்மை பெற்றது சூலமாகும். அது தலைப்பகுதியில் மூன்று கூர்மையான பகுதிகளைக் கொண்டிருப்பதால் முத்தலைச் சூலம் என்றும் திரிசூலம் என்றும் அழைக்கப்படுகின்றது. சூலத்தை ஏந்தி நின்று அருள்புரிவதால் சிவபெருமான் **"சூலபாணி"** என்றும், **"சூலதரர்"** என்றும் அழைக்கப்படுகிறார்.

திரிசூலம், உயிர்களைப் பற்றியுள்ள ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களை நீக்கி ஞானத்தை வழங்கி மோட்சத்தை அருள்வதின் குறியீடாக உள்ளது. அஸ்திரங்களுக்கு எல்லாம் தலைவனாக இருப்பதால் அதனை அஸ்திர ராஜன் எனவும் அழைப்பர்

வடக்கயிறே நுகத்தடிக்கயிறு

மாடுகளை இணைப்பதற்காக, நுகத்தடியில் உள்ள துளைகளில் ஒரு கயிறு மாட்டப்பட்டு இருக்கும்.கலப்பை உயரத்திற்கேற்றவாறு கயிறைப் பொருத்திக்கொள்வர். இதனைப் பூட்டாங்கயிறு என்றும் நுகத்தடிக் கயிறு என்றும் அழைப்பர். இறைவன் இறைவி கொலுவீற்று திருவீதி உலா வரும் தேரின் வடக்கயிறு நல்ல வலுவுள்ளது. அன்பர்கள் தம் அன்பினால் அந்தத் தேரினை இழுத்து வருவர். அந்த வடக்கயிறினைத் தம்முடைய அடியார் பெருமக்களிடம் இரவலாக வாங்கிக் கொள்ளலாம் என்று அம்பிகை அன்புடன் செப்புகின்றாள். உழவுத் தொழிலுக்குத் தேவையான உதவிகளை தெய்வங்களிடம் மட்டுமின்றி அடியார்களிடமும் பெற விரும்புகிறாள் அன்னை.

வேலவனேபண்ணையாள்

உழவு எருதுகளை முறையாக மேய்ச்சலுக்கு அழைத்துச் செல்லவேண்டும். அவற்றுக்குப் பிடித்தமான சத்துள்ள உணவினை அன்புடன் தர வேண்டும். காலாற நடந்து வயிறாற புல் மேய்ந்து வந்தால் கால்நடைச் செல்வம் பூரித்து வளரும்.எருதுகளை மேய்ப்பதற்கு ஆள் வேண்டுமே? என்று இறைவன் கேட்டார். அதற்கு "நம்முடைய இளைய பிள்ளை கந்தன் காடுகளில் சுற்றுவதில் மிகவும் பிரியமுடையவன். அவன் மிகவும் இச்சையுடன் எருதுகளை மேய்த்து வருவான்" என்று உமை விடை பகன்றாள்.

இவ்வாறு தங்கள் வாழ்வில் மேற்கொள்ள வேண்டிய தொழில்முயற்சிகளைப் பற்றி இருவரும் சேர்ந்தே முடிவு செய்தனர்.

இறைவனின் வாக்கே நோக்கிய மங்கையாகிய உமையம்மை தன்னிடம் கூறுகின்ற புத்திமதிகளைத் தயக்கமின்றி ஏற்றுக்கொண்டார் நித்த மணாளர்.


உழைப்பதற்குச் சுணக்கம் காட்டாமல் தம்மிடம் இருப்பதை ஆராய்ந்து பார்ப்பதுடன் உறவினர் மற்றும் நண்பர்களிடம் பெற வேண்டிய பொருள்களைப் பயன்படுத்திக்கொள்வதில் தவறில்லை என்றும் கூறுகின்றாள்.

பிச்சை எடுத்து உண்பது இழிவு;

உழைத்து உண்பதே உயர்வு;

என்று மனைவி கூறும் அறிவுரையைக் கணவனும் ஏற்கிறார். இல்லற முடிவுகளில் மனையாளின் சிந்தனை பொருத்தமாக இருப்பின் அதை ஏற்பதில் தயக்கம் காட்ட வேண்டியதில்லை.

இப்பாடல் புராணச் செய்திகளின் அடியொற்றி எழுந்த அழகிய கற்பனையால் விளைந்தது என்றாலும் உலகியலில் இல் வாழ்வார்க்குத் தேவையான அறிவுரைகளைத் தருகின்றது. இறைவன் இறைவியை வேளாண் மாந்தர்களாகச் சிவப்பிரகாச சுவாமிகள் காட்டுவது திருப்பேரூர் திருத்தலத்தில் நடைபெறும் நாற்று நடவுத் திருவிழாவை நினைவூட்டிக் களிப்படைய வைக்கின்றது.



கோயிற் கட்டிடக்கலை

பாகம் - 4



விஜய்பட்
மென்பொறியாளர்
கோவில் கட்டிடக்கலை ஆய்வாளர்
சென்னை

விமான பேதத்தின் அத்தனை விதமான அமைப்புகளையும் எளிதாய் நாம் கண்டறிய வேண்டுமெனில் மாமல்லபுரம் வளாக கோவில்களில் நாம் பயணித்தால் அறிந்துணரலாம்.

விமான வடிவம் என்னும் விமான ஆகிருதி

விமான வடிவம் (ஆகிருதி) ஆறு வகைப்படும்

1. சதுரம் (சதுரம்)

2. வட்டம் (விருத்தம்)

3. நீண்ட சதுரம் (ஆயத சதுரம்)

4. நீண்ட வட்டம் (ஆயத விருத்தம்)

5. ஆறுவட்டம் (ஷடாச்சரம்)

6. எட்டுப்பட்டம் (அஷ்டாங்கம்)

என்று ஆறுவிதமான வடிவங்களை விமானத்தில் அமைக்கலாம்

1. சதுரம்

*ஒரு விமானம் அதிஷ்டானம் முதல் ஸ்துபி (கலசம்) சதுர வடிவில் இருந்தால் அது **"சுத்த நாகர"** (முழு சதுர) விமானம் என்று கருதப்படுகிறது.*




விசலூர்-சுத்த நாகர விமானம்

அல்லது அதிஷ்டானம் முதல் பிரஸ்தரம் வரை சதுரமாக அமைக்க பெறலாம்.



திருவேதிக்குடி




சதுர விமானத்தின் வரைபடம்

2. வட்டம் (விருத்தம்)

*விமானம் வட்டமாகவும் அல்லது நீண்ட வட்டமாகவும் அமையைப்பெறலாம் அத்தகைய விமான வடிவினை **"விருத்தம்"** அல்லது **"வேசரம்"** என்று அழைக்க படுகின்றது.*


*முழு வட்டமாக அமையப்பெறும் விமானத்தை “**கமலாகாரம்**” என்று அழைக்கப்ப்டுகின்றது.*



கமலாகாரம்

மாமல்லை கடற்கரை கோவில்






Vritta
(Circular)

3. நீண்ட சதுரம் (ஆயத சதுரம்)

*விமானம் நீண்ட சதுரமாகவும் (செவ்வகமாக) அமையப்பெறும் விமான வடிவினை “**ஆயத சதுரம்**” அல்லது “**சாலாகாரம்**” என்று அழைக்க படுகின்றது.*

பொதுவாகத் திருமாலுக்கும் மற்றும் அம்மனுக்கும் கருவறையை ஆயதாச்ரமாக - செவ்வகமாக அமைத்து மேலே சாலாகாரமான விமானத்தை அமைப்பர்.



Āyatāsra
(Rectangular)



தில்லை காளி அம்மன் கோவில்

4. நீண்ட வட்டம் (ஆயத விருத்தம்)

*நீள்வட்டமாக அமையப்பெறும் விமானத்தை **“ஆயத விருத்தம்”** என்று அழைக்கப்ப்டுகின்றது.*



ஆயத விருத்தம்



ஸ்ரீரங்கம் அரங்கநாதர்

5. ஆறுவட்டம் (ஷடாச்சரம்) &


6. எட்டுப்பட்டம் (அஷ்டாங்கம்)

*விமானம் எட்டுபட்டமாகவும் அல்லது ஆறுபட்டமாகவும் உள்ள விமானங்களுக்கு “**திராவிட விமானம்”** என்று அழைக்கப்படுகின்றன.*




தர்மராஜ இரதம்

எட்டுப்பட்டம்



ஆறுவட்டம்



சஹாதேவ இரதம்



சமணமும் அமணமும்

பாகம்–1





வெ.பாலமுரளி
தமிழர் தொன்மவியல் ஆய்வாளர்
மதுரை

"கிட்டத்தட்ட 6 வருடங்கள் புத்தர், மகாவீர் மற்றும் மற்கலி கோசாலர் மூவரும் ஒன்றாக இணைந்தே தவம் புரிந்து, தங்கள் பொதுக் கொள்கையான "வைதீக மத எதிர்ப்பையும், அஹிம்சை" கொள்கைகளையும் மக்களிடம் அதி தீவிரமாக பரப்பியதாக சமணர்களின் "பகவதி சூத்திரம்", புத்த மதத்தின் "லலித விஸ்தாரா" போன்ற நூல்கள் வாயிலாக நம்மால் அறிய முடிகிறது. "

(இது ஒரு நீண்ட கட்டுரை என்பதால் இதை இரண்டு அல்லது மூன்று பாகங்களாக பிரித்து எழுதுகிறேன்.)

சென்ற (2021) வருடம் தொல்லியலில் டிப்ளோமா கோர்ஸ் பண்ணும்போது, "மதுரையும் தமிழியும்" என்ற தலைப்பில் ஒரு ப்ராஜக்ட் பண்ணினேன்.

அதற்காக, மதுரையைச் சுற்றியிருக்கும் தமிழி கல்வெட்டுக்கள் உள்ள 15 இடங்களுக்குச் செல்ல நேர்ந்தது.

ஒவ்வொரு இடத்திற்குச் செல்லும்போதும் திரும்பத் திரும்ப எனக்கு இரண்டு கேள்விகளே முன் நின்றன.

1.நமது மத்திய தொல்லியல் துறை இதை எப்படி கர்நாடகாவிலிருந்து வந்த சமணத் துறைவிகளின் வாழ்விடம் என்று முடிவு செய்தது.?

2.எந்தவொரு அறியல் சார்ந்த சோதனைகளும் செய்யாமல், இந்தக் கல்வெட்டுக்களின் காலத்தை எப்படி கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கும், கி.பி.இரண்டாம் நூற்றாண்டிற்கும் இடையில் நிர்ணயித்தார்கள்.?

இதில் சில அரசியலும், சில உள்குத்துக்களும் இருந்தாலும், குழப்பம் ஆரம்பித்த இடம் நமது இலக்கியங்களே.

சரி...கொஞ்சம் ஃபிளாஷ் பேக்குக்குப் போவோம்.

வைதீக மதம் என்னும் பிராமணிய மதம் தழைத்திருந்த காலம் அது. ஜைன மற்றும் ஆசீவகக் கொள்கைகளும் அப்போது பரவலாக இருந்த போதிலும், அந்த மதங்களுக்கு அப்போது அந்தப் பெயர்கள் கிடையாது. ஜைன மதத்தைத் தோற்றுவித்த ஆதிநாதரின் காலம் இன்று வரை கண்டறியப் படவில்லை.

ஜைனர்களின் இலக்கியங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கால கட்டத்தைக் குறிப்பிடுகின்றன. எல்லாமே யுகக் கணக்குகளில் இருப்பதால் அறிவியல் சார்ந்த வரலாறு அவற்றை கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை.

ஆசீவகக் கொள்கைகளும் அப்போது இருந்தன என்று ஏ.எல்.பாஷம் போன்ற ஆய்வாளர்கள் கூறினாலும், அதைத் தோற்றுவித்தது யார், எப்போது என்ற கேள்விகளுக்கு யாரிடமும் பதிலில்லை.

கி.மு. 6 ம் நூற்றாண்டில் ஏறத்தாழ ஒரே சமயத்தில் கௌதம புத்தரால் பௌத்த மதமும், 24 ம் தீர்த்தங்கரரான மகாவீரால் ஜைன (சமண) மதமும், மற்கலி கோசாலரால் ஆசீவக (அமண) மதமும் பெரிய அளவில் பரப்பப்படுகின்றன.

கிட்டத்தட்ட 6 வருடங்கள் புத்தர், மகாவீர் மற்றும் மற்கலி கோசாலர் மூவரும் ஒன்றாக இணைந்தே தவம் புரிந்து, தங்கள் பொதுக் கொள்கையான " வைதீக மத எதிர்ப்பையும், அஹிம்சை" கொள்கைகளையும் மக்களிடம் அதி தீவிரமாக பரப்பியதாக சமணர்களின் ***"பகவதி சூத்திரம்"****, புத்த மதத்தின்* ***"லலித விஸ்தாரா"*** *போன்ற நூல்கள் வாயிலாக நம்மால் அறிய முடிகிறது.*

ஆசீவகம் பற்றி நமக்கு ஒரு நூலும் இது வரை கிடைக்கவில்லை. ஆனால், ஆசீவகம் பற்றி சமண, பௌத்த இலக்கியங்களிலும், நமது சங்க இலக்கியங்களிலும் நமக்கு நிறையவே குறிப்புகள் கிடைக்கின்றன.

அந்த 6 வருடங்களில் அவர்கள் மூவரும் இணைந்தே நிறைய பயணித்திருக்கிறார்கள். அவர்களின் நோக்கங்கள் ஒன்றாக இருந்தாலும், சில கருத்துக்கள் அவர்களைப் பிரிக்கின்றன.

ஆசீவகத்தின் பிதாகரான மற்கலியும், ஜைனத்தின் கடவுளரான/ குருவான ஆதி நாதரையும், 23ம் தீர்த்தங்கரரான பார்சுவநாதரையும் தங்கள் மதிப்பிற்குரிய குருக்களாகவும் கடவுளராகவும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

அது மட்டுமல்லாது, ஜைனர்களின் ஒரு பிரிவினரான ஸ்வேதாம்பரரும், ஆசீவகர்களும் வெள்ளை ஆடைகளையே உடுத்தியிருக்கின்றனர்.

இவையிரண்டும்தான் இடியாப்பச் சிக்கலின் தொடக்கம்.

என்னதான் இந்த மூன்று மக்களும் பிரிந்து விட்டிருந்தாலும், அவர்கள் கொள்கைகளினாலும், சில பொதுவான கடவுளர்களாலும் நிறைய தமிழ் இலக்கியங்கள் ஜைனர்களையும், ஆசீவகர்களையும் சமணர்கள் என்றே அழைத்தன.

நற்றிணை போன்ற மிகச் சில இலக்கியங்களே ஜைனர்களை சமணர்கள் என்றும் ஆசீவகர்களை அமணர்கள் என்றும் பிரித்து எழுதி வைத்தன.

உள்ள குழப்பங்கள் போதாது என்று, கி.பி. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ***திவாகர முனிவர்*** *என்பவரும் தன் பங்குக்கு*

"சாவகரும் அருகரும் சமணர் ஆகும்;
ஆசீ வகரும் அத்தவத் தோரே"

என்று தன்னுடைய திவாகர நிகண்டுவில் எழுதி வைத்து விட்டார்.

ஆசீவகத்தைப் பற்றி நிறைய ஆய்வு செய்பவரும், எழுதி வருபவருமான முனைவர். க. நெடுஞ்செழியன் என்பவர் மற்கலி கோசாலர் தமிழகத்தைச் சார்ந்தவர்தான், விராலி மலைக்கு அருகில் உள்ள திருப்பட்டூரைச் சார்ந்த ஒரு குறு நில மன்னராக இருந்து பின்னர் ஆசீவகத் துறவியாக மாறியவர் என்கிறார்.

இதற்கு தகுந்த ஆதாரங்கள் இல்லாமையால், அவருடைய இந்தக் கூற்றை கிட்டத்தட்ட அனைத்து வரலாற்று ஆசிரியர்களுமே மறுக்கின்றனர். அது வேறு கதை.

ஆனாலும், ஆசீவகத் துறவிகள் தமிழகத்தில் நிறைய பேர் இருந்து தொண்டு செய்தது என்னவோ உறுதி.

ஆரம்பத்தில் இவர்களைத்தான் நம் தமிழ் இலக்கியங்கள் சித்தர்கள் என அழைத்திருக்க வேண்டும். இவர்கள் மலைகளில் இருந்த குன்றுகளில் வாழ்ந்து மருத்துவச் சேவைகளும், ஏழைகளுக்குக் கல்வியும் போதித்திருக்கின்றனர்.

தேவாரத்தில் திருஞானசம்பந்தர் குறிப்பிட்டிருக்கும் ***"சமணர்கள் கழுவேற்றத்தில்"*** *சொல்லப்பட்டிருக்கும் (அ) கொல்லப்பட்டிருக்கும் சமணத் துறவிகள் இவர்களாக இருந்திருக்கவே வாய்ப்புகள் அதிகம். இந்தச் சித்தர்களை வதை செய்து கொன்றதினாலே* ***"சித்தர் வதை"*** *என்ற வார்த்தைப் பிரயோகம் உருவாகியிருக்கிறது. பின்னாளில் இது* ***"சித்திரவதை"*** *என்று மருவியிருக்க வேண்டும். சங்க இலக்கியங்கள் எதிலும் "சித்தர் வதை" அல்லது " சித்திரவதை" என்ற வார்த்தைப் பிரயோகம் கிடையாது. (அதேபோல் சம்பந்தர் குறிப்பிட்ட "எண்ணாயிரம் சமணர்கள்" என்பது எட்டாயிரம் என்ற எண்ணைக் குறிக்கவில்லை.* ***"எண்ணாயிரம் சமணர்கள்"*** *என்பது ஒரு குழு அல்லது ஒரு சமணப் பிரிவினரையே குறிக்கும் என்று சமீபத்தில் படித்தேன். ஆனால், சமபந்தர் பொய் சொல்லியிருக்க மாட்டார் என்பதை வைத்துப் பார்க்கையில் ஒரு சில நூறு சித்தர்களா (அமணர்களா) வது கொல்லப்பட்டிருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது).*


சரி...ஜைனர்களுக்கும், ஆசீவகர்களுக்கும் வேறென்ன வித்தியாசங்கள் என்று பார்ப்போம்...



*ஜைனர்கள் வசித்த இடங்களுக்கு **"பள்ளி"** என்று பெயர். ஆசீவகர்கள் வசித்த இடங்களுக்கு **"பாழி"** அல்லது **" பாளி"** என்று பெயர். நான் சென்ற **"தமிழிக் கல்வெட்டுகள்"** இருக்கும் நிறைய குகைகளில் **"பளீஇ"** அல்லது **"பாளீஇ"** என்ற சொல்லைப் பார்க்க முடிந்தது. அதை நமது தொல்லியல் துறை **"பள்ளி"** யைத்தான் அப்படி குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று ஒரு விளக்கம் சொல்லி (No more arguments என்று) ஃபைலை மூடி விட்டனர்.*



*ஜைனத்திலிருந்து வைதீக மதத்திற்கு மாறிய திருநாவுக்கரசர் கூட தனக்கு வயிற்று வலி வந்து அமணர்களின் **"பாழிக்கு"** சென்று (அறுவை) சிகிச்சை எடுத்து அது சரியாகி விட்டதாகக் குறிப்பிடுகின்றார். தான் முன்பு இருந்த மதம் சமணம் என்றும், வசித்த இடம் **"பள்ளி"** என்றும் அடிக்கடி குறிப்பிடும் நாவுக்கரசர், மருத்துவ சிகிச்சை எடுத்த இடத்தை மட்டும் **"அமணர்கள்"** என்றும், அவர்கள் வசித்த இடத்தை **"பாழி"** என்றும் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.*



ஜைனர்கள் தலையை மழித்துக் கொள்ளும் வழக்கம் உடையவர்கள். ஆசீவகர்கள் நீண்ட தலை முடியை வைத்திருப்பர். கழுவேற்றம் பற்றி குறிக்கும் அனைத்து சிற்பங்களிலும் கழுவேற்றப்படுபவருக்கு நீண்ட சிகை இருக்கும். அதன் ஒரு படத்தை இங்கு பதிவிடுகின்றேன்.

அது மட்டுமல்ல. சித்தன்ன வாசலில் உள்ள பழங்கால ஓவியங்களில் உள்ள துறவிகளுக்கும் நீண்ட சிகை இருப்பதை புறந்தள்ளி விட முடியாது. இது சமணர்கள் வரைந்த ஓவியங்கள் என்று நமது அரசாங்கம் சொல்லினாலும், இவை ஆசீவகர்களாகிய அமணர்கள் வரைந்திருப்பதற்கே வாய்ப்புகள் அதிகம் (அதன் படத்தையும் இங்கு பதிவிடுகிறேன்).


மதுரை ஆயிரங்கால் மண்டபத்தில் உள்ள ஓவியம்


சிதம்பரம் கோயில் சமணக் கழுவேற்றம்


30
சமணரைக் கழுவில் ஏற்றியது.
மதுரை ஆயிரங்கால் மண்டபத்தில் உள்ள ஓவியம்



நம் முன்னோர் உணவுகள்





வே.பார்த்திபன்
ஆற்றுப்படை
திருச்சிராப்பள்ளி

"மார்ச் மாதம் 30 உலக இட்லி நாள் என கடைபிடிக்கப்படுகிறது. நம் அன்றாட வாழ்வில் இன்றியமையாத உணவாகிவிட்ட இட்லியின் தொன்மை குறித்த சில தரவுகளையும், சங்காலம் முதல் மன்னர் காலம் வரையிலும் நம் முன்னோர் உண்ட சில உணவு வகைகளை இக்கட்டுரையில் காண்போம்."

மார்ச் மாதம் 30உலக இட்லி நாள் என கடைபிடிக்கப்படுகிறது.நம் அன்றாட. வாழ்வில் இன்றியமையாத உணவாகிவிட்ட இட்லியின் தொன்மை குறித்த சில தரவுகளை காண்போம்.

திருப்பதி கோவிந்தராசச் சுவாமிகோவில் இரண்டாம் பிரகாரம் தெற்குச் சுவரில் உள்ள கல்வெட்டு "திருவாராகளம் கண்டருளாம் போலே அமுது செய்தருளும் அப்பபப்படி1, இட்லிப்படி , சுசியன்படி1, அவல் படி 2, மரக்கால் - பொரியமுது 2 மரக்கால் எனக் கோவில் நைவைத்தியத்தைப் பட்டியல் இடுகிறது. இது கி.பி.1547 ஆம் ஆண்டுக் கல்வெட்டு. இங்கு இட்லிப்படி என்பது இட்லி நைவேத்தியத்தைக் குறிக்கும். இதனால் இட்லி கி.பி.16ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டு வழக்கில் இருந்தது என்று கொள்ளலாம்.




சிற்றுணவு:

ஆயிரம் வருடம் முன்பு நம் முன்னோர்கள் உண்டு களித்த சில சிற்றுணவுகளை இன்றும் நாம் உண்டு வருவது, அவ்வுணவின் தொடர்ச்சியான பாரம்பர்யத்தை காட்டுகிறது. அவ்வாறு தொடர்ச்சியாய் நம்முடன் அன்றாடம் புழங்கும் சில உணவுகளின் கல்வெட்டு ரீதியான சான்றுகளை காண்போம்.




இலக்கியத்தில் சைவஉணவுகள்
மெல்லடை
"நல்வரி இறாஅல் புரையும் மெல்லடை
அயிர் உருப்பு உற்ற ஆடமை விசயம்
கவவொடு பிடித்த வகையமை மோதகம்
தீஞ்சேற்றுக் கூவியர் தூங்குவனர் உறங்க"
(மதுரைக்காஞ்சி)
இரண்டாம் சாமத்தில் அரிசிமாவில் வெல்லம் கலந்து செய்த இனிப்பு அடை, மோதகம் விற்கும் வணிகர் பற்றிய தகவலுடன், இரவு நேரத்தில் மதுரை நகரில் உண்பதற்குப் பல சிற்றுண்டிக் கடைகள் இருந்தன என இப்பாடல் மூலம்அறிய முடிகின்றது.


சங்ககால சைவஉணவுகள்
இனிப்பு காய்கனிகலவை
"சேறு நாற்றமும், பலவின் சுளையும்,
வேறுபடக் கவினிய, தே மாங் கனியும்,
பல்வேறு உருவில், காயும் பழனும்,
கொண்டல் வளர்ப்பக், கொடி விடுபு கவினி"
(மதுரைக்காஞ்சி)
இனிய சுவையினையுடைய தேனை எடுத்து, அதனுள் நறுமணம் வீசும் பலாச்சுளையினை கலந்து, பழுத்த மாங்கனியையும், இன்னும் சில காய்கள், மற்றும் பொடியாக நறுக்கிய கீரைகளை, அதில் கொட்டி, அதற்கு சுவையூட்ட ஊடுபொருளாக பனைவெல்லத்தை கொட்டி, அதனை ஒரு கலவையாக பிசைந்து இன்றைய Fruit salad போன்றதொரு சுவைமிக்க உணவினை தயார்செய்து அதனை வறியோருக்கு கொடுத்து அறமாற்றியுள்ளனர்.


கல்வெட்டில் தோசை
தோசை
முதன்முதலாய் இதற்கு தோசை என பெயர்வைத்த பெருமை கிருஷ்ணதேவராயரையே சேரும், காஞ்சி வரதராஜபெருமாள் கோவிலில் தோசை குறித்த கல்வெட்டு கிடைக்கிறது.தோசைக்கு அரிசி, உளுந்து, எண்ணெய் நிவந்தமாய் கொடுத்ததை இக்கல்வெட்டு கூறுகிறது. மேலும் அச்சுதராயர் கல்வெட்டும் தோசை குறித்த தகவலை தருகிறது. இக்கல்வெட்டுகள் வைணவக் கோவில்களில் ஸ்ரீராமநவமியில் நைய்வேத்யம் அளிக்கப்பட்டதை கூறுகிறது. கன்னியாகுமரி பூதப்பாண்டி சிவன் கோவிலிலும் தோசை நைவேத்யமாய் அளிக்கப்படுகிது


இலக்கியத்தில் சைவஉணவுகள்
பயற்றுப்பால்
"கொள்ளொடு பயறு பால் விரைஇ, வெள்ளிக்
கோல் வரைந்தன்ன வால் அவிழ் மிதவை
வாங்கு கை தடுத்த பின்றை, ஓங்கிய
பருதிஅம் குப்பை சுற்றி, பகல் செல.."
(அகநானூறு)
சங்ககாலத்தில் கொள்ளு, பயறு, பால் இவற்றை ஒன்றாய் கலந்து அதனை கூழ்போல மாற்றி அருந்தினர் என்கிறது அகநானூறு

சங்ககால உணவுகள்



மாங்காய் ஊறுகாய்

"யார்க்கும் அணங்காதல் சான்றாள் என்றுகூடி பெண்டிர்
மாங்காய் நறுங்காடி கூட்டுவோம்"
(முல்லைக்கலி)

சங்ககாலத்தில் ஊறுகாயை காடி என்று அழைத்தனர். மோர்விற்க வரும் ஆயர்குல பெண்களின் அழகில் தம் கணவர் மயங்கிவிடாதிருக்க, தமக்கு மோர் வேண்டாம் மாங்காய் ஊறுகாயே போதும் என தலைவி கூறுவதாய் இப்பாடல் அமைந்துள்ளது.

சங்ககால சாறும்,ரசமும்



தேன்மாச்சாறு

"காலின் உதிர்ந்தன கரும் கனி நாவல்
மாறுகொள ஒழுகின ஊறு நீர் உயவை
நூறொடு குழீஇயின கூவை சேறு சிறந்து
உண்ணுநர் தடுத்தன தேமா புண் அரிந்து"
(மலைபடுகடாம்)

சதைப்பிடிப்பும், மனமும், இனிய சுவையும் கொண்டு மாம்பழங்கள் நிறைய பழுத்து கிடந்ததாம். அத்தகைய சிறப்புடைய மாம்பழத்தை சாறாக்கி(சேறு) அதனுடன் தேன் கலந்து நன்னனின் நாட்டின் அருந்தினர்.

இலக்கியத்தில் சைவஉணவுகள்



வேளைப்பூ மிதவை

"வேளை வெண்பூ வெண்தயிர்க் கொளீஇ,
ஆய்மகள் அட்ட அம்புளி மிதவை
அவரை கொய்யுநர் ஆர மாந்தும்"
(புறநானூறு)

வேளைக்கீரையை சிறிது முற்ற விட்டால் கிடைக்கும் வேளைப்பூவினை,ஆயர்மகள் கொய்து அதனுடன் கெட்டித்தயிரை கலந்து, நன்றாய் கரைத்து அதனை உண்டதாய் புறநானூறு கூறுகிறது.

சங்ககால சிற்றுண்டி



இனிப்பு பண்ணியம்

"நல்லநெடு பகடோம்பியும்
நான்மறையோர் புகழ்பரப்பியும்
பண்ணியம் அட்டியும் பசும்பதங் கொடுத்தும்
புண்ணிய முட்டாத் தண்ணிழல் வாழ்க்கை"
(பட்டினப்பாலை)

பண்ணியம் என்பது ஒருவகை இனிப்புபலகாரம், சங்க இலக்கியத்தில் பண்ணியம் என்பதனை இன்றைய பணியாரத்துடன் ஒப்பிடப்படுகிறது.


இலக்கியத்தில் சைவஉணவுகள்
அம்புளிசோறு
"கவைக் கதிர் வரகின் அவைப்புறு வாக்கல்
தாதொரு மறுகின் போதொடு பொதுளிய
வேளை வெண்பூ வெண்தயிர்க் கொளீஇ,
ஆய்மகள் அட்ட அம்புளி மிதவை"
(புறநானூறு)
குழைய குழைய வேகவைத்த அரிசியுடன்,
வேளைப்பூவை போல தோற்றமளிக்கும் வெண்மையான
கெட்டித்தயிர் கலந்து, சூழ்மாதிரி அரைத்து உண்ணும்
உணவை, அக்காலத்தில் "அம்புளி சோறு" என
அழைத்தனர். அதற்கு வெஞ்சனமாய்(Side dish)
வேளைக்கீரையை கூட்டு வைத்து உண்டனர்


சங்ககால சிற்றுண்டி
மோதகம்
"அயிர் உருப்புற்ற ஆடமை விசயம்
கவவொடு பிடித்த வகையமை மோதகம்"
(மதுரைக்காஞ்சி)
மோதகம் என்பது இன்றைய கொழுக்கட்டை.
கற்கண்டை இளக்கிப் பாகாக்கி, அதனைப் பூரணமாகக்
கொண்டு செய்த கொழுக்கட்டைகள்
மதுரைத் தெருக்களில் விற்கப்பட்டதை மதுரைக்
காஞ்சி கூறுகிறது.


சங்ககால சிற்றுண்டி
வள்ளிக்கிழங்கு வறுவல்
செய்யாப் பாவை வளர்ந்து கவின் முற்றிக்
காயம் கொண்டன இஞ்சி, மா இருந்து
வயவுப் பிடி முழந்தாள் கடுப்ப குழிதொறும்
விழுமிதின் வீழ்ந்தன கொழுங்கொடிக் கவலை
(மலைபடுகடாம்)
இப்பாடலில் வரும் கவலை என்பது
கவலைக்கிழங்கு, அதாவது சக்கரவள்ளிக்
கிழங்கினைக் குறிக்கும். பருத்த
வள்ளிக்கிழங்கை இஞ்சி சேர்த்த கலவையுடன்
உண்டனர்.


சங்ககால உணவு
பாயாசம்
ஊனும் ஊனும் முனையின், இனிதெனப்,
பாலிற் பெய்தவும், பாகிற் கொண்டவும்
அளவுபு கலந்து, மெல்லிது பருகி,
விருந்து உறுத்து, ஆற்ற இருந்தென மாகச்,
(புறநானூறு)
கரும்பனூர் கிழான் தம் நாட்டுக்கு
வருவோர்க்கு வயிறுமுட்ட ஊன் உணவு
கொடுத்துவிட்டு, பாலும் பாகும் கலந்த
உணவை(பாயாசம்) கொடுப்பானாம்


சங்ககால சிற்றுண்டி
தேன் அடை
"அவையா அரிசி அம்களித் துழவை
மலர்வாய்ப் பிழாவில் புலர ஆற்றிப்
பாம்பு உறை புற்றின் குரும்பி ஏய்க்கும்
பூம்புற நல் அடை அளைஇத் தேம்பட"
(பெரும்பாணாற்றுப்படை)
வலைஞர் வீட்டிற்கு சென்றால் களி,அடை,அவியல்,சுட்டமீன் உண்ண தருவார்கள்,அரிசியை வட்டிலில் ஆறவைத்து அடைபோன்ற உணவில் தேன் ஊற்றி உண்ண கொடுப்பார்கள்.


சங்ககால சாறும்,ரசமும்
மாதுளை ரசம்
"சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத்
துருப்புறு பசுங்காய்ப் போழொடு கறிகலந்து
கஞ்சக நறுமுறி யளை இப் பைந்துணர்
நெடுமரக் கொக்கின் னறுவடி விதிர்த்த
தகைமாண் காடியின் வகைபடப் பெறுகுவிர்"
(பெரும்பாணாற்றுப்படை)
கெட்டியான பசுவின் பாலை கடைந்து அதனை வெண்ணையாக்கி, அதனை சட்டியில் வதக்கி அதனுள் மிளகு, கருவேப்பிலை, சேர்த்து வதக்கி, மாதுளையின் முத்துபோன்ற பழங்களை எடுத்து அதனை கைகளால் சாறுபிழிந்து, அதனை ரசமாக செய்து, நெற்சோருடன் உண்டனர்


சங்ககால சிற்றுண்டி
இனிப்புதயிர்
"புலிக்குரல் மத்தம் ஒலிப்ப வாங்கி,
ஆம்பி வால்முகை அன்ன கூம்பு முகிழ்
உறை அமை தீம் தயிர் கலக்கி, நுரை தெரிந்து
புகர்வாய்க் குழிசி பூஞ்சுமட்டு இரீஇ,
நாள் மோர் மாறும் நன்மா மேனி"
(பெரும்பாணாற்றுப்படை)
கோவலர் குடிப்பெண்கள் புலிஉறுமும் குரலை ஒத்த ஒலியில் தயிரை கடந்து, அதில் தனியே வெண்ணெயை எடுத்து, மீதமுள்ள தயிரில் இனிப்பு கலந்து அதனை விற்பனை செய்வாள்.


சங்ககால உணவு
உளுந்து பொங்கல்
உழுந்து தலைப்பெய்த கொழுங் களி மிதவை
பெருஞ் சோற்று அமலை நிற்ப, நிரை கால்
தண் பெரும் பந்தர்த் தரு மணல் ஞெமிரி
(அகநானூறு)
தம் திருமண நிகழ்வினை நினைவுகூறும் தலைவன், தன் திருமணத்திற்கு வந்தவர்களுக்கு உளுந்துடன் அரிசிகூட்டிய பொங்கலை தந்ததாய் தெரிவிக்கிறான்.


சங்ககால உணவு
கரும்புச்சாறுபாகு அவல்
இருங் கதிர் அலமரும் கழனீக் கரும்பின்
விளை கழை பிழிந்த அம் தீம் சேற்றொடு,
பால் பெய் செந்நெற் பாசவல் பகுக்கும்
புனல் பொரு புதவின், உறந்தை எய்தினும்
(அகநானூறு)
முற்றிய கரும்பின் தண்டினை சாறாய்பிழிந்து
அதனை பாகாய் காய்ச்சி அதில் பாலுடன்
அவலை நன்றாய் இடித்து காய்ச்சி
வருவோர்க்கு உபசரித்தனர்.


இலக்கியத்தில் சைவஉணவுகள்
தயிர்க்குழம்பு
"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல் கழுவுறு கலிங்கம்
கழாஅது உடீஇக் குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்
தான்துழந்து அட்ட தீம்பு வரிப் பாகர் இனிதெனக் கணவன்
உண்டலின் நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே"
(குறுந்தொகை)
சோற்றுக்குரிய சிறந்த குழம்பாக சங்ககாலத்திலேயே
தயிர்க்குழம்பு இருந்துள்ளது. தலைவி தன்
மெல்லிய விரலால் கட்டியான முற்றிய தயிரைப்
பிசைந்து தன் குவளை மலரீபோன்ற கண்களில்
தாளிப்பு புகை கமழும்படி புளிப்புதயிர்க்குழம்பை
தானே ஆக்கினாள் என கீழ்க்கண்ட குறுந்தொகை
பாடல் கூறுகிறது,


சங்ககால சைவஉணவு
பாலுடை அடிசில்
"பல்கோட்டு அடுப்பில் பால்உலை இரீஇக்
கூழைக் கூந்தல் குறுந்தொடி மகளிர்
பெருஞ்செய் நெல்லின் வாங்குகதிர் முறித்துப்
பாசவல் இடிக்கும் இருங்காழ் உலக்கைக்
கடிதிட வெரீஇய கமஞ்சூல் வெண்குருகு
(அகநானூறு)
அரிசியை தண்ணீரில் கலந்து தண்ணீரில் வேகவைத்து
வடிப்பதுபோல், அக்கால தமிழர்கள் பாலினை கொதிக்க
வைத்து, அதனுள் அரிசியினை களைந்து, வேகவைத்து
அதனை வடித்து உண்டுள்ளனர். இதற்கு "பாலுடை அடிசில்"
எனப்பெயர். திருமணம் முடிந்து வந்த புதுமகள், தான் புகுந்த
வீட்டில் இச்சோற்றினை வடித்தாள்.

சங்ககாலத்தில் நம் தமிழ்மக்கள் உண்ட அசைவஉணவினை இலக்கியங்கள் காட்சிப்படுத்துகிறது. அதில் சில உணவுகளை காண்போம்.










சங்ககால அசைவஉணவு
தினைஇரத்த பொரியல்
"சிறுதினை மலரொடு விரைஇ மறிஅறுத்து
வாரணக்கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊர்ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்.."
(திருமுருகாற்றுப்படை)
குறிஞ்சிநில கடவுளரான முருகனுக்கு அத்திணை மக்கள் புலால் உணவு படைத்து மகிழ்ந்தனர். முருகனுக்கேற்ற இடத்தை தேர்ந்தெடுத்து, அங்கு சிறுதினையுடன் இளம் வெள்ளாட்டினை அறுத்து அந்த இரத்தத்தினை தினையுடன் கலந்து முருகனுக்கு படைத்தனர்.


சங்ககால அசைவஉணவு
பன்றிஇறைச்சி
"குறுந்தா ளேற்றைக் கொழுங்க ணல்விளர்
நறுநெய் யுருக்கி நாட்சோ றீயா
வல்ல னெந்தை பசிதீர்த் தீயா"
(புறநானூறு)
குறுகிய கால்களையுடைய பன்றியின் கொழுப்புள்ள ஊன் துண்டங்களை நறு நெய் உருக்கி அதனீற் பொறித்து சோற்றுடன் கொடுத்து எம்பசியை போக்குக என்கிறது இப்பாடல்.


சங்ககால அசைவஉணவு
உடும்புகறி
"களர் வளர் ஈந்தின் காழ் கண்டன்ன,
சுவல் விளை நெல்லின் செவ் அவிழ்ச் சொன்றி,
ஞமலி தந்த மனவுச்சூல் உடும்பின்
வறைகால் யாத்தது வயின்தொறும் பெருகுவிர்"
(பெரும்பாணாற்றுப்படை)
தம்வீடு தேடி வருவோரை சிறப்பிக்க மேட்டுநிலத்தில் விளையும் சிகப்பரிசியையும், தாம் வேட்டையாடிய உடும்பினையும் சமைத்து உயர்தரமாய் உபசரித்துள்ளனர் பாலைநில எயினர்.


சங்ககால அசைவஉணவு
அளகின்வாட்டு(நாட்டுக்கோழி)
"வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி மனை
வாழளகின் வாட்டொடடும் பெறுகுவீர்"
(பெரும்பாணாற்றுப்படை)
சங்க இலக்கியத்தில் கோழியை "அளகு" என அழைத்துள்ளனர். உழவர்கள் விருந்தினருக்கு வெண்சோற்றுடன் கோழிக்கறி வாட்டலை கொடுத்தனர் என மேன்கண்ட பாடல் கூறுகிறது.


சங்ககால அசைவஉணவு
பசுமாட்டுக்கறி
"கொழுப்பா தின்ற கூர்ம்படை மழவர்"
"தெய்வஞ் சேர்ந்த பராரை வேம்பின்
கொழுப்பா எறிந்து குருதி தூஉய்ப்
புலவுப் புழுக்குண்ட வாண்கண் அகலறை"
(அகநானூறு)
கூரிய படைகருவியை உடைய மழவர்கள் பசுவைகொன்று அதன் இறைச்சியை தின்றதையும்,மேலும் பசுவைகொன்று அதன் குருதியை தூவி வேப்பமரத்தின் அடியில் பலியிட்டு சமைத்து பாறையில் அமர்ந்து உண்டனர் என மேற்கண்ட பாடல் கூறுகிறது.


சங்ககால அசைவஉணவு
சுட்டகறி(Barbeque)
"காழில் சுட்ட கோல்ஊன் கொழும்குறை
ஊழின் ஊழின் வாய்வெய்து ஒற்றி"
(பொருநராற்றுப்படை)
கொழுத்தசெம்மறி ஆட்டின் இறைச்சியை இரும்புகம்பியில் கோர்த்து சுட்டு தன்னை நாடிவரும் புலவர்களுக்கு வற்புறுத்தி உண்ண கொடுத்துள்ளார் கரிகாலன், இறைச்சியின் சூட்டினை தணிக்க தம் வாயின் இருபக்கமும் ஊதி, அவற்றின் வெம்மையை தணித்து புலவர்கள் உண்டுள்ளனர். பற்களின் முனை மழுங்கும் அளவிற்கு சுடச்சுட விருந்தளித்துள்ளார் கரிகாலர்.


சங்ககால அசைவஉணவு
நெய்ச்சோரும் மட்டன்கிரேவியும்
"பொன் அறைந்து அன்ன நுண் நேர் அரிசி
வெண் எறிந்து இயற்றிய மா கண் அமலை
தண்ணென் நுண் இழுது உள்ளீடு ஆக
அசையினிர் சேப்பின் அல்கலும் பெறுகுவிர்"
(மலைபடுகடாம்)
முல்லைநில பெண்கள் தம்விடுதேடி வருவோர்க்கு நெய்ச்சோறை ஆக்கி, வெள்ளாட்டுத்துண்டை நறுக்கி, வதக்கி சுவைபட உண்ணத்தருவார்கள்

நாட்டு ரக மீன்கள் அறிமுகம்

பாகம்-4





இராமமூர்த்தி நாகராஜன்
சூழலியல் ஆர்வலர்
பூதலூர்

”விரால் மீனோடு மிக நெருக்கமான உறவு கொண்ட குறவை மீன் அதன் புறப்பகுதிகளில் இருக்கும் சிறுசிறு புள்ளிகள் காரணமாக "புள்ளி குறவை மீன்" என்று அழைக்கப்படுகிறது.”

#குறவை அல்லது குரவை மீன்

#கொரவா மீன்

#புள்ளி குரவை

#Spotted snakehead fish.

#channa punctata.

விரால் மீனோடு மிக நெருக்கமான உறவு கொண்ட குறவை மீன் அதன் புறப்பகுதிகளில் இருக்கும் சிறுசிறு புள்ளிகள் காரணமாக "புள்ளி குறவை மீன்" என்று அழைக்கப்படுகிறது.

ஆறு, குளம், ஏரிகள் என அனைத்து நீர் நிலைகளிலும் காணப்படும் முக்கிய மீன் இனம் இதுவாகும். உண்பதற்கு சுவையான மீன் இனம்.

எங்க அம்மா போற போக்குல சொல்லிட்டுப் போவாங்க, "தொடர் சளிக்கு இரண்டு, மூணு நாள் குறவை மீன் குழம்பு வைச்சு தின்னா சரியாயிடும்".

நீரின் அடியில் சேற்றுப் பகுதியில் காணப்படும் மீன். இம்மீனை உண்ணும் போது மண்ணின் சுவையையும் என்னால் உணர முடியும்.

மருத்துவக் குணங்கள் நிரம்பியது...

சித்தர் பாடலில் குரவை மீன் பற்றி இவ்வாறு சொல்லப்படுகிறது.

"முட்டு குடல்வலிபோம் மூடிருமல் ஏகுமலக்

கட்டுரக்கும் வாய் அருசி காணுங்கான் - முட்ட

துறவைப்பெற் றோருந் துதிக்கும் எழின் மாதே

குறவைமீனின் குணத்தைக் கூறு"

பொருள்:

நல்ல ருசியுள்ள குறவை மீனை உண்பவர்களுக்கு குடலில் ஓடிக் குத்துகின்ற வலியும் காசநோயும் நீங்குமென்று கூறுவார். மேலும், வாய் ருசியற்ற தன்மை அடைவதுடன் மலக்கட்டு ஏற்படும் என்று மேலுள்ள சித்தர் பாடல் குறவை மீன் பற்றிக் கூறுகிறது.

ஆதாரம்: மீன்கள் அன்றும் இன்றும் நூல், முனைவர் ச.பரிமளா.

அளவு மற்றும் எடை:

இதன் நீளம் அதிகபட்சமாக 30 செமீ அளவு இருக்கலாம். எடை அதிகபட்சமாக 200-250 கிராம் அளவில் இருக்கிறது. இம்மீன் ஒரூ அனைத்துண்ணி இனம் ஆகும். இது சிறு மீன்கள், பூச்சிகள், புழுக்கள், சிறு தாவரங்கள் உள்ளிட்ட அனைத்தையும் உண்கின்றன.

தோற்றம்:

சற்று மஞ்சள் நிறமான உடலில் கருப்பு நிற திட்டுக்களும், புள்ளிகளும் காணப்படுகின்றன. இம்மீனின் அடிப்படையில் மங்கிய வெள்ளை நிறமாகக் காணப்படும்.

இதன் தலை பாம்பின் தலை போல் இருப்பதால் இந்த குரவை மீனும், விரால் மீனும் பாம்புதலை மீன்கள் என அழைக்கப்படுகின்றன.

துடுப்பு:

மேல் பகுதியில் உள்ள துடுப்பு தலை அருகில் இருந்து வால் பகுதி வரை ஒரே தொடர்ச்சியாக நீண்டு இருக்கிறது. வால் துடுப்பு வளையமாக இருக்கிறது.

மருத்துவப் பயன்கள்:

இக்குறவை மீன் பல்வேறு மருத்துவப் பயன்களைக் கொண்டுள்ளதாக ஆய்விதழ்கள் கூறுகின்றன.

இதில் உடலுக்கு பல்வேறு நன்மைகள் தரும் ஒமேகா 3-கொழுப்பு அமிலங்களும், பல்வேறு அமினோ அமிலங்களும் மிகுந்துள்ளதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. இச்சத்துகள் இதயத்துக்கும், கல்லீரலுக்கும் பல்வேறு நன்மைகள் தருகின்றன. மேலும் இம்மீன்

உணவுகள் புண்களை ஆற்றுவதிலும், சொரியாசிஸ் உள்ளிட்ட தோல் நோய்களின் வீரியத்தை சற்று மட்டுப்படுத்துவதாகவும் ஆய்வுகள் சொல்கின்றன.

எது எப்படியோ இம்மீன் ஒரு சுவையான உணவு...

விலை:

எங்கள் தஞ்சைப் பகுதியில் இதன் வரத்தைப் பொறுத்து ரூபாய் 200 விருந்து 300 வரை விற்கப்படுகிறது.

வகைகள்:

குறவை மீனில் சிறுசிறு புறத்தோற்ற வேறுபாடுகளுடன்,

மணிக்குறவை அல்லது புள்ளிக் குறவை.

கட்டைக்குறவை.

மிட்டாய் குறவை.

தத்துவான் குறவை

என வகைகள் இருப்பதாக அறிகிறேன்.

இதில் இப்பதிவில் கூறப்பட்டுள்ளது புள்ளிக்குறவை எனப்படும் மணிக்குறவையே!

நன்றி!

நீந்துவோம்......

இராமமூர்த்தி நாகராஜன்.
































பறவைப் பொறியாளன்





சரவணமணியன்.ப.அ
பொறியாளர்
சூழலியலர், வரலாற்று ஆர்வலர்
காளையார்கோவில்

“பொது யுகத்திற்கு முன்னரான ஆறாம் நூற்றாண்டில் இருந்தே தென்னிந்தியாவில் இவர் இருந்ததற்கான சான்றுகள் கிடைக்கின்றன. பல சங்க இலக்கிய பாடல்களிலும் பாடப்பெற்ற இவரை தற்போது நகரங்களில் பார்ப்பது வெகு அரிது தான். ”

ராஜா சார் பாட்டுலயே பட்டித்தொட்டி லாம் பிரபலமான பறவைகள்ள இவரும் ஒருவர்ங்க. உடலின் மேற்பகுதி பசுமை தோய்ந்த மஞ்சள் நிறத்திலும், உடலின் கீழ்ப்பகுதி மங்கிய பழுப்புக்கீற்றுகள் நிறைந்து வெளுத்துக் காணப்படுவதால் இது மாங்குயில்(பெண்) என அறியமுடிகிறது(ஆண் மாங்குயிலுக்கு உடல் முழுவதும் பளபளப்பான மஞ்சள் நிறமாகவும், இறக்கைகளும் வாலும் கருப்பாகவும், கண்வழியே கருப்புப் பட்டையும் இருக்கும்ங்க).

பொது யுகத்திற்கு முன்னரான ஆறாம் நூற்றாண்டில் இருந்தே தென்னிந்தியாவில் இவர் இருந்ததற்கான சான்றுகள் கிடைக்கின்றன. பல சங்க இலக்கிய பாடல்களிலும் பாடப்பெற்ற இவரை தற்போது நகரங்களில் பார்ப்பது வெகு அரிது தான்.

ஆறு, ஏரி கரையோரமாவும், அரசமரத்திலும், இலையுதிர்க்காடுகளிலும் இதனை பெரும்பாலும் பார்க்க முடியுதுங்க. இந்த நிழற்படம் கூட ஏரிக்கரையோரமா இருந்த மரத்துல நிற்கும் போது படம்புடுச்சது தான். கரிச்சான் பஞ்சுருட்டான் மற்றும் அக்காகுருவிகளோட சேர்ந்த மாதிரி தான் சுத்திட்டு தன்னோட இரையை தேடுறாப்ள.

பழங்களையும் புழு பூச்சிகளையும் விரும்பி சாப்டுறத பார்க்க முடியுதுங்க. ஆனா தரைப்பக்கம் மட்டும் வர்றதே இல்ல.டேஞ்சரஸ் ஃபெல்லோஸ் இந்த மனிதர்கள் னு கரெக்ட்டா நெனச்சுடுச்சு போல.

அப்பப்ப லொ லொ, லொ ப்பி னு குரலிட்டு யாருக்கோ சிக்னல் கொடுக்குது.அந்த சிக்னல் மத்தவங்களுக்கு கேட்டுச்சோ இல்லையோ எனக்கு கேட்டதும், காலடி ஓசையின்றி மறஞ்சு மறஞ்சு என்னமோ தீவிரவாதிகள தேடி போய் மறைவிடத்துல இருந்து துப்பாக்கிய நீட்டி குறி வைக்குற ஆர்மி மேன் மாதிரி படவில குறி வைத்து கவர்ந்து வந்தாச்சுங்க.

வங்காக் கடந்த செங்காத் பேடை

எழாலுற வீழ்ந்தெனக் கணவற் காணாது

குழலிசைக் குரல குறும்பல வகவும்

குன்றுகெழு சிறுநெறி யரிய வென்னாது -

குறுந்தொகை

இவருக்கு வங்கா - மாங்குயில் - மாம்பழக்குருவி - பொன்குருவி - மஞ்சக்கிளி - மாங்காக்குருவி - மாம்பழத்தி - முசுக்கொட்டாம்பூச்சிக்குருவி என தமிழில் பல வட்டார வழக்கு பெயர்கள் உண்டுங்க.



காப்பு நிலை - தீவாய்ப்புக் கவலை குறைந்த இனம்

அன்பன்,

ப.அ.சரவண மணியன்


சிறகுகள் விரியும் 🥰

INDIAN GOLDEN ORIOLE - EURASIAN GOLDEN ORIOLE - ORIOLUS KUNDOO

CONSERVATION STATUS : LEAST CONCERN(POPULATION STABLE)







கன்னல் சுவை சங்கத்தமிழ்

பாகம் - 4





பௌசியா இக்பால்
ஆசிரியர்
சத்தியமங்கலம்

வைகையாற்றில் ஓடிவரும் வெள்ளத்தில் குரவம், வகுளம், கோங்கம், வேங்கை, மரவம், நாகம், திலகம், மருதம், சேடல், செருந்தி, செண்பகம், பாடலம் முதலான மலர்கள் மிதந்து வருகின்றன. இதனை வைகையின் பூந்துகில் என்று வருணிக்கின்றார் இளங்கோவடிகள்.

அனைவருக்கும் வணக்கம்!

விலங்குநிமிர்ந் தொழுகிய

கருங்கயல் நெடுங்கண் – இவளுக்கு!

விரைமலர் நீங்கா

அவிர்ஆறற் கூந்தல் – இவளுடையது!

உலகுபுரந் தூட்டும் உயர்பேர்

ஒழுக்கங்கொண்ட...

புலவர் நாவிற் பொருந்திய

பூங்கொடி – இவளே தான்!

யார் இவள்? என்ற கேள்வியுடன், 'கன்னல் சுவை சங்கத்தமிழ்' தலைப்பிலான கட்டுரையைத் தொடர்கிறேன்.

சென்ற மாதத்திற்கான பாடலை சிலப்பதிகாரத்திலிருந்து எடுத்திருந்தேன். அதன் முடிவில், கோவலனின் வாழ்விற்கும், பாண்டிய நாட்டில் வளம்கொழிக்கும் வைகையாற்றிற்கும் உள்ள தொடர்பை இளங்கோவடிகளின் பார்வையில் எவ்வாறெல்லாம் விவரித்துள்ளார் என்பதைப் பற்றித் தெரிந்துகொள்ளலாம் என்பதைக் குறிப்பிட்டிருந்தேன். அதனைத் தொடர்ந்து மேலே கூறியுள்ள வரிகள் யாரை சுட்டுகின்றன என்ற கேள்வியை மீண்டும் முன்வைக்கிறேன். இக்கேள்விக்கான பதிலைப் பகிரும்முன் இளங்கோவடிகளைப் பற்றிய சிறு விளக்கம்.

கண்ணகி, தன் கணவனைப் பிரிந்து பெருந்துயருக்கு ஆளாகி (எத்தகைய பெருந்துயர்? இவ்வலியை வார்த்தைகளால் விவரித்திட இயலாது. ஏனெனில், கணவன் தன் மனைவியை நீங்கிச் செல்வதை விட பெருந்துன்பம் இவ்வுலகில் பெண்களுக்கு வேறில்லை)

வருந்திய நிலை மாறி தற்சமயம் தங்கள் புதுவாழ்வை எதிர்நோக்கி தென்னவன் ஆளும் பழம்பெரும் பாண்டிய நாட்டை நோக்கி மேற்கொண்ட பயணத்தில் திருவரங்கத்தில் இவர்களுடன் இணைகிறார் தவத்திரு பிராட்டியார் கவுந்தியடிகள்.

இம்மூவருமாக மேற்கொண்ட பயணத்தில் அவர்கள் சந்திக்கும் ஒவ்வொன்றையும் வெகு அழகாக வர்ணித்திருப்பார் இளங்கோவடிகள். இதில் முக்கியமாக கண்ணகியைக் "கொங்கச் செல்வி" என்று தெய்வம் ஏறிய சாலினி கூறுவதாக குறிப்பிட்டிருப்பார், அவ்வாறு சாலினி கூறவும் கண்ணகி மிகுந்த நாணமுற்றவளாக தன் கணவன் கோவலனின் முதுக்குப்பின்னால் மறைந்துகொள்வாள்.

கண்ணகி, எவ்வளவு எளிமையானவள் என்பதற்கு இக்காப்பியத்தில் இருக்கும் எவ்வளவோ விளக்கங்களில், இப்பகுதி அவளின் குணத்தை மிக அழகாகச் சுட்டுகின்றது. காப்பியத்தின் ஆரம்ப காதை முதல் மெல்லிய நீரோடையாகவே வலம் வரும் கண்ணகியின் இயல்பு எரிமலையாக வெடித்தெழும் காட்சிகளில் வெகுசிறப்பு. இப்படியானதொரு வாழ்வியலை எப்படித்தான் இளங்கோவடிகளால் அக்காலத்திலேயே இயற்ற முடிந்ததோ?!

*மேலும், **"இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் என்ற இக்காப்பியத்தை, பெண்களைப் பெருமைப்படுத்தும்வண்ணம் எழுதியிருப்பார்"** என்றதொரு பொதுவான கருத்து நிலவுவதை நம்மில் பலர் அறிந்ததே. இக்கருத்திற்கு அடிப்படை, காப்பியம் முழுவதும் ஆங்காங்கே இயற்கையின் வர்ணனைகளில், உதாரணமாக நிலம், நீர் போன்றவற்றை பெண்ணாக பாவித்துக் கூறியிருப்பார். இத்தகையதொரு பாடல்தான் கோவலனும், மாதவியும் காவிரியைப் பாடிய பாடல்கள், அது சென்ற மாத பதிவு. இம்மாதமும் அவ்வாறானதொரு காட்சிதான். ஆனால், பாடுபொருள் சோழர்களின் செல்வி, காவிரியல்ல. பாண்டியர்களின் பேரன்னை வைகை!*

இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறியிருந்த வரிகளுக்கு உரியவள், இளங்கோவடிகள் பொய்யாக்குலக்கொடி என்று போற்றிய வைகையே. வைகையைப் பற்றிய வரிகள் சிலப்பதிகாரத்தில் மதுரைக் காண்டம், புறஞ்சேரியிறுத்த காதையில் வருகின்றது. இக்காதையில் மதுரையை நெருங்கும் மூவரும் வைகையாற்றை அடைகின்றனர். வைகையைக் கடந்துதான் அவர்கள் பாண்டியனின் தலைநகரை அடையமுடியும். இச்சூழலில் பொங்கிவரும் வைகையைக் கண்டு வணங்குகிறாள் கண்ணகி. அதற்கான காரணத்தைக் கூறும் இளங்கோவடிகள், வைகையை வர்ணிக்கவும் தயங்கவில்லை. இதோ, இளங்கோவடிகளின் பார்வையில் கண்ணகி வணங்கிய வைகை...

குரவமும், வகுளமும், கோங்கமும், வேங்கையும்,

மரவமும், நாகமும், திலகமும், மருதமும்,

சேடலும், செருந்தியும், செண்பக ஓங்கலும்,

பாடலம்-தன்னொடு பல் மலர் விரிந்து;

வைகையாற்றில் ஓடிவரும் வெள்ளத்தில் குரவம், வகுளம், கோங்கம், வேங்கை, மரவம், நாகம், திலகம், மருதம், சேடல், செருந்தி, செண்பகம், பாடலம் முதலான மலர்கள் மிதந்து வருகின்றன. இதனை வைகையின் பூந்துகில் என்று வருணிக்கின்றார் இளங்கோவடிகள்.

இதனுடன்,

குருகும், தளவமும், கொழுங்கொடி முசுண்டையும்,

விரி மலர் அதிரலும், வெண் கூதாளமும்,

குடசமும், வெதிரமும், கொழுங் கொடிப் பகன்றையும்,

பிடவமும், மயிலையும், பிணங்கு அரில் மணந்த

கொடுங் கரை மேகலைக் கோவை யாங்கணும்

மிடைந்து, சூழ்போகியஅகன்று ஏந்து அல்குல்:

மேலே கூறிய மலர்களுடன் இருகரைகளிலும் உட்பக்கமாக முளைத்திருந்த குருகு, தளவம், முசுண்டை, அதிரல், வெண்கூதளம், குடசம், வெதிரம், பகன்றை, பிடவம், மயிலை போன்ற மலர்ச்செடிகள் வைகைப் பெண் தன் அல்குலை மறைக்க மேகலைக்கோவை அணிந்து வருவது போலக் காணப்பட்டது என்கிறார் இளங்கோவடிகள்.

வாலுகம் குவைஇய மலர்ப் பூந் துருத்தி,

பால்புடைக் கொண்டு, பல் மலர் ஓங்கி,

எதிர் எதிர் விளங்கிய கதிர் இள வன முலை:

இவ்வாறாக மலராடையும், மேகலையுமாய் வலம்வரும் வைகையை மேலும் பெண்மைக்கேயுரியதாக கூற விரும்பும் இளங்கோவடிகள், வைகையின் இருகரைகளிலும் குவிந்திருக்கும் மணற்குவியலானது பெண்களின் கொங்கைகளாகக் காட்சியளிப்பதாகவும் கூறியுள்ளார்.

கரைநின்று உதிர்த்த கவிர் இதழ்ச் செவ் வாய்:

அருவி முல்லை அணி நகைஆட்டி-

வைகையின் அணிகலன்கள், பெண்மைக்கான அங்க அடையாளங்கள் என்று கூறியதோடு நில்லாமல் பெண்ணின் முகத்திலிருக்கும் வனப்பையும் வைகையில் கண்டுள்ளார். மேற்கண்ட வரிகளில் வைகையின் கரையோரங்களில் ஓங்கி வளர்ந்து நிற்கும் செக்கசிவந்த முருக்கம்பூ பெண்ணின் சிவந்த இதழ்களைப் போலவும், அருவியில் ஓடும் முல்லைப் பூ, பெண்கள் சிரிக்கும்போது அழகாய் வெளிப்படும் பற்களைப் போலவும் காணப்பட்டதாக கூறியுள்ளார். இத்துடன் வருணனை முடிந்ததா என்றால் அதுதான் இல்லை, பெண் என்று வர்ணித்தபின், அவள் கண்ணைப் பாடாத கவிஞர்கள் உண்டா? இளங்கோவடிகள் மட்டும் இதற்கு விதிவிலக்கா என்ன?

இதோ அடுத்தவரியில் வைகை நங்கையின் விழிகளையும் வர்ணிக்கின்றார் இளங்கோவடிகள்.

விலங்கு நிமிர்ந்து ஒழுகிய கருங் கயல் நெடுங் கண்:

விரை மலர் நீங்கா அவிர் அறல் கூந்தல்;

ஆற்றில் அங்குமிங்கும் நீந்தி ஓடும் கயல்மீன் வைகையின் கண்ணாகவும், வைகையாற்றின் கரையோரத்து மணல்படிவு வைகைப்பெண்ணின் கூந்தல் போலவும் விளங்கின என்பதே இவ்வரிகளின் விளக்கம். இவ்வாறாக அழகியலைக்கொண்ட வைகை,

உலகு புரந்து ஊட்டும் உயர் பேர் ஒழுக்கத்துப்

புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி-

வையை என்ற பொய்யாக் குலக்கொடி-

உலகையும் மக்களையும் காக்கும் மன்னர்களால் ஆதரிக்கப்படும், போற்றுதலுக்கும் பெருமைக்குமுரிய புலவர்கள் பலரால் போற்றப்படும் பூங்கொடி, வையை எனும் பொய்யாக் குலக்கொடி என்று புகழ்ந்திருப்பார்.

வைகையாறு! பொய்யாக் குலக்கொடி என்றதோடு மட்டுமில்லாமல், இனி கண்ணகிக்கு நேரப்போகும் நிலையை,

தையற்கு உறுவது தான் அறிந்தனள் போல்,

புண்ணிய நறு மலர் ஆடை போர்த்து,

கண் நிறை நெடு நீர் கரந்தனள், அடக்கி-

தன்னைக் கடந்து மதுரைக்குள் செல்லவிருக்கும் தையலாம் கண்ணகிக்கு நிகழப்போவதை அறிந்தவள் போல, வைகை எனும் பொய்யாக்குலக்கொடி தான் கொண்ட துயரத்தால் துளித்த கண்ணீரைப் பிறருக்குக் காட்டாவண்ணம் புண்ணிய நறுமலர்கள் பலவற்றை ஆடையாக அணிந்து வந்தாள் என்பதை ஒற்றைவரியில் அழகாய் கூறியிருப்பார்.

புனல் யாறு அன்று; இது பூம் புனல் யாறு! ஒ என,


அன நடை மாதரும் ஐயனும் தொழுது;

இளங்கோவடிகள் பலவாரும் புகழ்ந்த வைகையாறு நீர் ஒடும் ஆறு அல்ல, அது பூ ஒடும் ஆறு என்று கூறிக்கொண்டே அன்னநடை நடந்து வந்த கண்ணகி வைகையை வணங்கிட, அவளுடன் கோவலனும் வைகையை வணங்கினான்.

இவ்வாறாக, கானல்வரியில் காவிரியாறு பெண்ணின் மனநிலையுடன் ஒப்பிட்டு வர்ணிக்கப்பட்டது. புறஞ்சேரி இறுத்த காதையிலோ பெண்ணாகவே வர்ணிக்கப்பட்டு, அப்பெண் எதிர்காலத்தில் நிகழப்போகும் அசம்பாவிதத்தை உணர்ந்தவளாகவும் கூறப்பட்டது இளங்கோவடிகளின் எழுத்துத்திறமைக்கான தரவுகள். இதனாலேயே இக்காப்பியம் யுகங்கள் பல கடந்தும் மக்கள் மனதில் நீங்க இடம்பெற்றுள்ளது என்பதை உணரமுடிக்கின்றது.

நன்றி.

The Brave Heart





விஜய் பாண்டியன்
வழக்கறிஞர் மற்றும் வரலாற்று
சிறப்பு மிக்க புகைப்பட
சேகரிப்பாளர்.

17ம் நூற்றாண்டில், மேற்குலகமே வியந்த மாவீரன் ஜேம்ஸ் க்ரஹாம், இவரை "First Marquess of Montrose" எனவும் அழைப்பார்கள் (1621-1650). ஸ்காட்லாந்தை சேர்ந்த குறுநிலப்பிரபு வம்சத்தில் பிறந்த இவர், ஸ்காட்லாந்தின் வைஸ்ராய் மற்றும் கேப்டன் ஜெனரல் போன்ற உயர் பதவிகளை வகித்தவர் ஆவார். ஆரம்பத்தில், இங்கிலாந்து, அயர்லாந்து, ஸ்காட்லாந்துகுள்ளான போர்களில், தன் சொந்த நாட்டுக்கு ஆதரவான ஒரு உள்நாட்டு அணியில் இராணுவ சேவை செய்து, தனது விவேகத்தாலும், பராக்கிரமத்தாலும் பல போர்களில் வெற்றியை பெற்று தந்த நாயகனாக போற்றப்பட்டவர்.

வியாபாரம் எனும் பெயரில், கடல் கடந்து நாடு பிடித்தது, பிறநாட்டின் மீது ஆதிக்கம் செலுத்தவும், தங்கள் மதத்தை வளர்க்கவும், இங்குள்ள வளத்தை சூறையாடவும் தானே! வேறென்ன காரணம் இருந்திருக்க முடியும்? அடங்க மறுத்த பூர்வகுடிகள், எதிர்க்க துணிவிருந்தும், நவீன ஆயுதங்களின்றி அவர்களிடம் போராடி வீழ்ந்தனர். குறிப்பாக, நம் தென்பாண்டி சீமை வீரர்கள் வெள்ளையர்களின் ஆயுதங்களை, குதிரைகளை கவர்ந்து செல்வதுண்டு. இது அந்நிய அதிக்கத்தை எதிர்த்து, நம் மக்கள் அவர்களுக்கு கொடுத்த இடையூறு என்றே புரிந்து கொள்ள முடிகிறது. பாரத நாட்டின் வரலாற்று பொக்கிஷங்களை, பிரிட்டிஷ்காரர்கள் எடுத்து சென்றதை நாம் அறிந்திருப்போம்; அவர்கள் பாதுகாத்து வந்த வரலாற்று சிறப்புமிக்க பொக்கிஷம் ஒன்றை பறிகொடுத்த உண்மை சம்பவம் இது.

1750களில் இராபர்ட் கிளைவ், பிரெஞ்ச் கிழக்கிந்திய கம்பெனி ஆதிக்கத்தை எதிர்த்து, திருச்சி மற்றும் மதுரை பகுதிகளை முற்றுகை செய்திருந்த காலம். மதுரை அருகே பிரிட்டிஷ் இந்திய இராணுவத்தின் முன்னோடிகளான லாரன்ஸ் மற்றும் இராபர்ட் கிளைவ் தங்கியிருந்த முகாம் மீது, திடீரென தாக்குதல் நடத்திய தென்பாண்டி சீமை வீரர்கள், முகாமிலிருந்த வீரர்களை கொன்று, ஆயுதங்களையும் குதிரைகளையும் கவர்ந்து சென்றனர். இந்த சம்பவம், அந்த காலத்தில் கிழக்கிந்திய கம்பெனிக்காரர்களிடம் பெரிய அச்சத்தையும் தாக்கத்தையும் ஏற்படுத்தியது. ஆங்கிலேயர்கள், அன்றைய நவீன பீரங்கி, துப்பாக்கிகளை கொண்டு மோதுகிறவர்கள். வல்லயமோ, துப்பக்கியோ, பீரங்கியோ, நெஞ்சை விரித்து காட்டும் பயமரியாதவர்கள் தென்பாண்டி சீமை வீரர்கள். இது போன்ற திடீர் தாக்குதலிருந்து தங்களை காத்துக்கொள்ள, பாதுகாப்பை அதிகரிக்க முடிவு செய்து, முகாமின் காவலுக்கு பிரிட்டிஷ் வீரர்களின் எண்ணிக்கையை மட்டும் அதிகரித்தனர். 18ம் நூற்றாண்டின் பிற்பகுதியில்,

கிழக்கிந்திய கம்பெனி முகாம்கள் மண்ணின் மைந்தர்களால் அவ்வப்போது சூறையாடப்பட்டு வருவதை கேள்விப்படாத சாமுவேல் ஜான்ஸ்டன் எனும் கலெக்டர் புதிதாக பணியில் சேர தன் மனைவியுடன் ஒரு விலை மதிக்க முடியாத வரலாற்று பொக்கிஷத்துடன் இந்தியாவிற்கு கப்பலில் வந்து கொண்டிருந்தார். அந்த பொக்கிஷத்தின் சுவாரசியமான வரலாற்றை தெரிந்துகொள்ள, நாம் காலத்தில் இன்னும் பின்னோக்கி செல்ல வேண்டும். 17ம் நூற்றாண்டில், மேற்குலகமே வியந்த மாவீரன் ஜேம்ஸ் க்ரஹாம், இவரை ***"First Marquess of Montrose"*** எனவும் அழைப்பார்கள் (1621-1650). ஸ்காட்லாந்தை சேர்ந்த குறுநிலப்பிரபு வம்சத்தில் பிறந்த இவர், ஸ்காட்லாந்தின் வைஸ்ராய் மற்றும் கேப்டன் ஜெனரல் போன்ற உயர் பதவிகளை வகித்தவர் ஆவார். ஆரம்பத்தில், இங்கிலாந்து, அயர்லாந்து, ஸ்காட்லாந்துகுள்ளான போர்களில், தன் சொந்த நாட்டுக்கு ஆதரவான ஒரு உள்நாட்டு அணியில் இராணுவ சேவை செய்து, தனது விவேகத்தாலும், பராக்கிரமத்தாலும் பல போர்களில் வெற்றியை பெற்று தந்த நாயகனாக போற்றப்பட்டவர். பின்னாளில், 1644-1646 காலங்களில், ஆங்கில உள்நாட்டுப் போர் உச்சத்தில் இருந்த காலத்தில், முதலாம் கிங் சார்லஸ் அவர்களை ஆதரித்தார். மீண்டும் 1650ல், ஸ்காட்லாந்து மன்னரின் சார்பாக உள்நாட்டுப் போரில் கலந்து கொண்டு போராடியவர், முடிவில் உள்நாட்டு எதிரிகளால் கைது செய்யப்பட்டு தூக்கு தண்டனை பெற்று இறந்தார். இவரது வீரத்தையும், விவேகத்தையும் நினைவு கூறும் விதமாக, இவருக்கு வெகு விமரிசையாக இறுதி சடங்கு நடந்ததோடு, இவரது சகோதரி லேடி நேப்பியர் என்பவரது முயற்சியால், இவரது உடலில் இருந்த இதயத்தை மட்டும் வெட்டி எடுக்கப்பட்டு, அதை பதப்படுத்தி, அவரது உடைவாளை உருக்கி செய்த வெள்ளி பெட்டியில் வைத்து, மேலும் வெனிஸ் நாட்டு கைவினை கலைஞர்களை கொண்டு செய்யப்பட்ட தங்கப்பெட்டி ஒன்றில் வைத்து,


அவரது மனைவியிடம் ஒப்படைத்து பாதுகாக்கப்பட்டு வந்தது. அவர் மனைவியின் காலத்திற்கு பிறகு, அவர் சகோதரி லேடி நேப்பியர் வசம் வந்தது. அந்த மாவீரனின் இதயத்தை நூறு வருடங்களுக்கு மேலாக பாதுகாத்து வந்தனர். அந்த காலங்களில், இப்பொக்கிஷம் **"ஹார்ட் ஆஃப் மான்ட்ரோஸ்" (Heart of Montrose)** என வரலாற்றில் மிகவும் பிரபலமானதொரு பொக்கிஷம், பல மாளிகைகளில் காட்சி பொருளாகவும் இருந்திருக்கிறது. லேடி நேப்பியர் குடும்பத்தினர், இதை தங்கள் வம்சத்தின் பொக்கிஷமாகவே பாதுகாத்து பராமரித்து வந்தனர். லேடி நேப்பியர் காலத்திற்கு பின்னாளில், இப்பொக்கிஷம் அவரது பெண் வாரிசுகளில் ஒருவரான ஏழாம் லேடி நேப்பியர் சாமுவேல் ஜான்ஸ்டன் தம்பதிகள் வசம் இருந்தது. 100 வருடங்களுக்கு மேலாக இப்பொக்கிஷத்தை பராமரித்து பாதுகாத்து வந்த குடும்பத்தினர்களுக்கு பெரும் அதிர்ச்சி ஒன்று மதுரையில் காத்திருந்ததை அவர்கள் அறிந்திருக்கவில்லை. மதுரை வந்து சேர்ந்த சாமுவேல் ஜான்ஸ்டன் தம்பதிகள் மதுரை தமுக்கம் மாளிகையில் தன் குடும்பத்துடன் தங்கி, தனது பொறுப்பை ஏற்றுக்கொண்டு வேலை செய்து வந்தார். நீண்ட பிரயாணத்தில் அந்த தங்க பெட்டி மிகவும் சேதமாகி இருப்பதை அறிந்த அவரது மனைவி, மதுரையில் மிகவும் பிரபலமான தங்க ஆசாரி ஒருவரை வரவழைத்து, அதே பெட்டியை மீண்டும் செய்ய சொல்கிறார். அச்சு அசலாக, அதே கலை நயம், நேர்த்தியுடன் ஒரு புதிய தங்கபெட்டி தயார் செய்து, பெட்டியின் வெளிப்புறம் தமிழ் மற்றும் தெலுங்கில் அதன் வரலாறு சுருக்கமாக பொறிக்கப்பட்டு, விருந்தினர்களை உபசரிக்கும் அறையின் நடுவே, கருங்காலி மேசையின் மேல் "ஹார்ட் ஆஃப் மான்ட்ரோஸ்" வைக்கப்பட்டு இருந்தது. லேடி நேப்பியர், தன் பரம்பரை பொக்கிஷத்தை கண்ணும் கருத்துமாக பார்த்து கொள்வதை கண்ட அங்குள்ள மக்கள், அதை ஒரு விசித்திர தாயத்து என நம்பினார்கள்.

அதை கைபற்றி வைத்திருப்பவர்களுக்கு போரில் தோல்வியோ, கைதாகும் வாய்ப்புகளோ இல்லை என நம்பப்பட்டது. இந்த கதை தென்பாண்டி சீமை முழுக்க காட்டு தீ போல வேகமாக பரவியது. 1787ல் தென்பாண்டி சீமை வீரர்கள் தமுக்கம் அருகேயிருந்த வெள்ளையர் முகாமிற்குள் புகுந்தனர். கைகளில் 18 அடி நீளம் கொண்ட வல்லயம் எனும் நீண்ட ஈட்டிகளை வைத்திருந்தனர்; அவர்கள் வல்லயம் வீசுவதில் அபார திறமையுடன் இருந்ததால், அதனை கொண்டு மிகவும் மூர்க்கமாக தாக்கினர். இம்முறை அவர்களால் ஏற்பட்ட இழப்பும் சேதமும், வழக்கத்தை விட அதிகம்; அத்தனை பாதுகாப்பையும் வீழ்த்தி, நவீன ஆயுதங்கள், குதிரைகள் கவர்ந்து செல்லப்பட்டன. அதனோடு, தமுக்கம் மாளிகையில் கருங்காலி மேசையில்



இருந்த "ஹார்ட் ஆஃப் மான்ட்ரோஸ்" கவர்ந்து வரப்பட்டது. லேடி நேப்பியர் குடும்பம் மட்டுமின்றி, ஒட்டுமொத்த உலகமும் மதுரையில் நடந்த சம்பவத்தை பேசிய காலம் அது. இந்த பொக்கிஷத்தின் வரலாற்று பின்னணி எதுவும் தெரியாமல், அதை குறித்து பரவிய கதைகளை கேள்விப்பட்ட சிவகங்கை சீமையின் ராணி வேலு நாச்சியாரின் பிரதானிகளில் சிறந்த விளங்கிய வெள்ளை மருது (எ) பெரிய மருது, அதை அதிக விலை கொடுத்து வாங்கி கொண்டார். சாமுவேல்

ஜான்ஸ்டன், லேடி நேப்பியர் தம்பதியின் மகனான அலெக்சாண்டர் ஜான்ஸ்டன், காளையார்கோவில் காடுகளில் வேட்டைக்கு சென்றிருந்த போது, பிரதானி வெள்ளை மருதுவுடன் அறிமுகமாகிக் கொண்டார். தன் குடும்பத்தின் பொக்கிஷம் மருதுவிடம் இருப்பதாக அவர் ஏற்கனவே கேள்விப்பட்டிருந்தாலும், அது குறித்து அவர் எதுவும் கேட்க விரும்பவில்லை. காட்டில் திடிரென பெரிய காட்டு பன்றி ஜான்ஸ்டனின் குதிரையை தாக்கிய போது, அவரும் சுதாரித்து கொண்டு, தன்னிடம் இருந்த ஈட்டியை வைத்து பன்றியை கடுமையாக தாக்கினார். இருப்பினும் அது அடங்கவில்லை.



சற்றும் எதிர்பாராத நேரத்தில், வெள்ளை மருது அவரை காப்பாற்றியதோடு மட்டுமில்லாமல், அதை கொன்று தூக்கி வீசினார். இந்த சம்பவத்தின் மூலம், ஒருவருக்கொருவர் மரியாதை செய்து நட்பு பாராட்டிய போது, அலெக்சாண்டர் ஜான்ஸ்டன் "ஹார்ட் ஆஃப் மான்ட்ரோஸ்" தங்களிடம் இருக்கிறது என தான் கேள்வி பட்டது உண்மையா? என கேட்டு கொண்டதோடு, அதன் வரலாற்று பின்னணியை எடுத்து கூறி, அதை திருப்பி ஒப்படைக்குமாறு கேட்டுக்கொண்டார். உண்மையை அறிந்த பின், அதன் முழு பின்னணி தனக்கு தெரியாது என்றும், அதை ஒரு அதிர்ஷ்ட தாயத்து போல வைத்திருப்பவர்களுக்கு போரில் தோல்வியே கிடையாது என தான் நம்பி அதிக விலை கொடுத்து வாங்கியது உண்மை எனவும் ஒப்புக்கொண்டார். "நமது மதமும், நாடும் வேறு தான் இருப்பினும், ஒரு மாவீரனின் ஆசையை நிறைவேற்றுவதே தனது கடமை என்றும், மேலும் 'ஹார்ட் ஆஃப் மான்ட்ரோஸ்' அதன் சந்ததிகளுக்கு தானே சொந்தம்" என கூறி, அதை திருப்பி தர சம்மதித்தார். சொன்னது போலவே, அடுத்த நாளே




NATIONAL GALLERIES SCOTLAND

James Graham, 1st Marquess of Montrose, 1612 - 1650. Royalist, 1636, Sir Anthony van Dyck
Photography by Antonia Reeve



சில பரிசுகளோடு லேடி நேப்பியரை நேரில் சந்தித்து, பொக்கிஷத்தை திருப்பி கொடுத்து, வருத்தமும் தெரிவித்ததோடு,



JAMES GRAHAM, MARQUIS OF MONTROSE

To face page 16

அலெக்சாண்டர் ஜான்ஸ்டனுக்கும் தன்னிடமிருப்பதில் சிறந்த ஆறு வேட்டை நாய்களை பரிசாக கொடுத்தார், மருது. பொக்கிஷத்தை பெற்றுக்கொண்ட சாமுவேல் ஜான்ஸ்டன் தம்பதிகள், 1792ல் ஐரோப்பாவுக்கு திரும்பினார்கள். அங்கு பிரெஞ்ச் நாட்டில் தங்கியிருந்த போது, அங்கு நிலவிய போர் சூழலில், மக்களிடம் உள்ள தங்கம், வெள்ளியை அரசிடம் ஒப்படைக்க சொல்லி கட்டளையிடப்பட்டிருந்தது. அதன் காரணமாக, பொக்கிஷத்தை பத்திரமாக வைத்திருக்கும் படி நௌலஸ் என்ற பெண்மணியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. எதிர்பாராத விதமாக அவர் இறந்து போது, "ஹார்ட் ஆஃப் மான்ட்ரோஸ்" இருக்குமிடம் அதன்பிறகு உலகிற்கு தெரியாமலே போனது. ஆங்கிலேயர்களுக்கு எதிரான கிளர்ச்சியின் முடிவில், பெரிய மருது தூக்கிலிடப்பட்ட பிறகு, 1807ல் அலெக்சாண்டர் ஜான்ஸ்டன் சிராவயல் பகுதிக்கு சென்றார். அங்கு வேட்டை நாய்களை பராமரித்து வந்த மருதுவின் வேலைக்காரர்கள் சிலரிடம் பேசிய போது, அவர்கள் சொன்ன தகவலின் படி, பெரிய மருது இறப்பதற்கு முன்பு, மாவீரன் மான்ட்ரோஸ் போலவே தனது இதயத்தை பாதுகாக்க வேண்டும் என சில விசுவாசகளிடம் கூறியதாக கேட்டறிந்து கொண்டு, நண்பனையும், பரம்பரை பொக்கிஷமான "ஹார்ட் ஆஃப் மான்ட்ரோஸை"யும் இழந்ததை நினைத்து, வருத்தத்துடன் விடை பெற்று சென்றார் அலெக்சாண்டர் ஜான்ஸ்டன்.

தாமுழான் கொற்றணங்கி





முனைவர் ப. காளீஸ்வரன்
இளநிலை அறிவியல் அலுவலர்,
தடய அறிவியல் துறை,
மயிலாப்பூர்,
சென்னை

“திருவாமாத்தூர் திருத்தலத்திற்கு ஸ்ரீகாரியம் செய்வதற்கு ராஜராஜ சோழனால் நியமிக்கப்பட்டவர் தான் இந்த தாமுழான் கொற்றணங்கி என்பவர் ஆவார். இவர் பணியாற்றிய காலத்தில் திருவாமாத்தூரில் மிகச் சிறப்பாக செயல்பட்டு உள்ளார் என்பதை அறிய முடிகிறது.”

முன்னுரை:

தமிழகத்திலே எண்ணற்ற அரசியல் மாற்றங்கள் சங்க காலம் தொட்டு நிகழ்ந்து வந்துள்ளன. அரசுகள் மாறினாலும், அரசு அதிகாரிகள் பெரும்பாலும் அந்த நிலப்பரப்பைச் சேர்ந்தவர்களே நியமிக்கப்படுகிறார்கள். ஒரு அரசின் வெற்றி அந்த அரசின் கீழ் செயல்படக்கூடிய ஒவ்வொரு அரசு அதிகாரி மற்றும் குடிமக்களையும் சார்ந்து அமைகிறது. குடிமக்கள் புறமிருந்து எதிர்ப்புகள் வந்தால் ஒரு அரசால் நிலையாக இருக்க இயலாது. அரசின் மீது கொண்ட அதிருப்தியினால் அரசு அதிகாரிகள் அரசுடன் ஒருங்கிணைந்து செயல்படவில்லை என்றாலும் அந்த அரசு நிலைபெற்று இருக்காது.

தமிழகத்திலே சோழர் ஆட்சி கட்டுக்கோப்பாக சிறப்பாக நடைபெற்ற ஒரு ஆட்சி. அதிகார வர்க்கத்தில் மன்னரிடமிருந்து குடிமக்களை சந்திக்கும் அதிகாரிகள் வரை பொறுப்புடன் தங்கள் பணியினை உணர்ந்து நடந்துள்ளனர். அதனால்தான் சோழப்பேரரசு பல ஆண்டுகாலம் பட்டொளி வீசி நிலைபெற்று இருந்தது. இன்றும் நாம் சோழ அரசை எல்லா இடங்களிலும் முன்னுதாரணமாகக் காட்டும் அளவு நிறைய ஆச்சரியங்களைத் தன்னகத்தே புதைத்து வைத்துள்ளது. அப்படி ஒரு மிகச்சிறந்த சோழ நாட்டு அதிகாரியினைப் பற்றியே இந்தக் கட்டுரை அமைந்துள்ளது.

திருவாமாத்தூர் :

விழுப்புரம் அருகில் இருக்கக்கூடிய பெருமை மிகுந்த ,சிறப்பு வாய்ந்த பெரிய திருக்கோயில். உலகில் உள்ள பசுக்கள் எல்லாம் ஒரு காலத்தில் கொம்புகள் இல்லாமல் இருந்ததாம், பிற துன்புறுத்தக்கூடிய விலங்கினங்களில் இருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ள வேண்டும் என்று இறைவனை வேண்டி இந்த தலத்தில்தான் கொம்புகள் பெற்றனவாம். அதனால்தான் இந்த திருத்தலம் ஆமாத்தூர் என்று பெயர் பெற்று, திரு என்றும் அடைமொழி சேர்ந்து திருவாமாத்தூர் என்று அழைக்கப்படலாயிற்று. இந்த திருவாமாத்தூர் திருத்தலத்து பெருமை எல்லையற்றது. இந்த திருத்தலத்தில் இருக்கக்கூடிய பல்வேறு கல்வெட்டுகள் இத்திருத்தலத்தின் பெருமையை பறைசாற்றி நிற்கின்றன. தேவாரம் பாடிய மூவராலும் இந்த திருத்தலம் பாடல் பெற்றுள்ளது. இந்த திருத்தலத்து கல்வெட்டுகளை தமிழ்நாட்டு கல்வெட்டுக்கள் தொகுதி XX, விழுப்புரம் மாவட்ட கல்வெட்டுக்கள் தொகுதி 3 எனும் புத்தகம் மூலம் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வெளியிட்டுள்ளது.

இந்த புத்தகத்தில் இத்திருக்கோவிலில் இருந்து படி எடுக்கப்பட்ட நூற்று ஆறு கல்வெட்டுகள் இடம்பெற்றுள்ளன. இந்த நூற்றாறு கல்வெட்டுகளிலும் சோழர்கள் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் தான் அதிகமாக காணப்படுகின்றன. இந்த திருக்கோவில் சோழர்களால் சிறப்பாகப் போற்றி பராமரிக்கப்பட்டு வந்துள்ளது என கல்வெட்டுகள் வாயிலாக அறியலாம். இந்த திருக்கோயிலில் காணப்படும் நூற்றாறு கல்வெட்டுகளில் சோழர் காலத்திய கல்வெட்டுக்கள் 59 ஆகும். பாண்டியர்கள் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் ஆறும், சம்புவரையர்கள் கல்வெட்டு ஒன்பதும், காடவரையர்கள் கல்வெட்டு ஆறும், விஜயநகர சாம்ராஜ்யத்தை சேர்ந்த கல்வெட்டுக்கள் பதினேழும், தேவ நாகரி எழுத்தில் ஒரு கல்வெட்டும், பிற சோழர், பாண்டிய காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகள் பதினைந்துமாக மொத்தம் நூற்று ஆறு கல்வெட்டுகள் இத்திருக் கோயிலில் உள்ளன.

ராஜராஜர் காலத்தில் இந்த திருக்கோவில் போற்றி பராமரிக்கப்பட்டுள்ளது. இத்திருக்கோவிலுக்கு நியமிக்கப்பட்ட அதிகாரி மிகச் சிறப்பாக செயல்பட்டுள்ளார். கோவில்கள் பெரும்பாலும் அரசின் கட்டுப்பாட்டில் தான் இருந்தன. கோவில்கள் தான் அந்த காலத்தில் நீதிமன்றங்களாகவும்,

பல்வேறு தர்ம காரியங்களுக்கு உறைவிடமாகவும் இருந்தன. அவ்வகையில் கோவிலானது ஊர் சபை மூலம் நேரடியாக நிர்வாகம் செய்யப்பட்டு வந்ததை பல திருக்கோவில்களில் காணப்படும் கல்வெட்டுகள் வாயிலாக நாம் அறிகிறோம். இந்த திருவாமாத்தூர் திருத்தலமானது ஜெயங்கொண்ட சோழமண்டலத்தில் அமைந்துள்ளது.

மன்னர்கள் நேரடியாக கோவிலுக்கு வரும் பொழுது நிவந்தங்கள் மற்றும் கோவிலுக்கு வழங்கப்பட வேண்டிய கொடைகள் பற்றி ஊர் சபையோரிடம் வினவி கோவிலுக்கு அளிப்பார்கள் அல்லது அரச குடும்பத்தினர்கள் யாருக்காவது பிறந்தநாள் மற்றும் சிறப்பு விழா ஏதேனும் அரசாங்கத்தில் நடைபெற்றால் அதற்கு கோவிலுக்கு கொடை அளிப்பார்கள். போரில் வெற்றி பெற்றால் கொடை அளிப்பார்கள். பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு மன்னர்களும், பல்வேறு நல்ல நிகழ்ச்சிகளுக்காகவும் கொடை அளித்துள்ளதை கல்வெட்டுக்கள் பறைசாற்றி நிற்கின்றன. தங்கள் குடும்பத்தில் நடந்த ஒரு நல்ல நிகழ்ச்சிக்கு இறைவனுக்கு நன்றி செலுத்தும் விதமாக கோவிலுக்கு கொடைகள் அளித்துள்ளனர். மன்னர்கள் அளித்த கொடைகள் மட்டுமல்லாது அரசியராலும் பல திருக்கோவில்களுக்கு கொடை அளிக்கப்பட்டுள்ளது. அரசிகள் மட்டுமின்றி அரசு அதிகாரிகளும் பல்வேறு விதமான கொடைகளை கோவில்களுக்கு அளித்த செய்தியை நாம் கல்வெட்டுகள் வாயிலாக அறிகிறோம்.

பெரும்பாலும் அரசு அதிகாரிகள் மூலமாகவே கோவிலுக்கான நிர்வாகம் மன்னரின் மேற்பார்வையில் இருந்துள்ளது. ஊர் சபையோர்கள் கோவிலை நிர்வாகம் செய்தாலும், மன்னரால் கோவிலுக்கு என்று காரியம் செய்வதற்கு ஒப்பளிக்கப்பட்ட அதிகாரியானவர் அந்த திருக்கோவிலுக்கான முழு பொறுப்பையும் ஏற்று திருக்கோவிலை அவ்வப்பொழுது கண்காணித்து வருவார்கள்.

அக்கோவிலில் இருக்கக்கூடிய கணக்கு வழக்குகளை எல்லாம் அவ்வப்போது சரி பார்ப்பார்கள். சில இடங்களில் மன்னரே நேரடியாக பார்ப்பதும் உண்டு.

திருவாமாத்தூர் திருத்தலத்திற்கு ஸ்ரீகாரியம் செய்வதற்கு ராஜராஜ சோழனால் நியமிக்கப்பட்டவர் தான் இந்த தாமுழான் கொற்றணங்கி என்பவர் ஆவார். இவர் பணியாற்றிய காலத்தில் திருவாமாத்தூரில் மிகச் சிறப்பாக செயல்பட்டு உள்ளார் என்பதை அறிய முடிகிறது.

இன்றைக்கு 1000 ஆண்டுகளுக்கு முன்பே திருக்கோவிலில் திட்டமிட்டு ஓர் பணியினை செய்தார்கள் என்ற செய்தி இந்த தாமுழான் கொற்றணங்கி என்னும் சிறந்த அதிகாரி மூலம் வெளிப்படுகிறது. பொதுவாக அந்தந்த ஊர் பகுதிகளில் இருக்கக்கூடிய அதிகாரிகளே பல கோவில்களில் நிர்வாகம் செய்வதற்கு அரசினரால் அனுப்பப்படுகின்றனர். இந்த தாமுழான் கொற்றணங்கி என்பவர் வேசாலிப்பாடி நாட்டைச் சேர்ந்த அதிகாரி ஆவார். இவர் இராசராச சோழனின் 20 ஆவது ஆட்சி ஆண்டிற்கு பிறகு நிர்வாகத்திற்கு அனுப்பப்படுகிறார். ஏனெனில் இங்கு காணப்படும் 12 இஇராசராசசோழன் கல்வெட்டுகளில் 20 ஆவது ஆட்சி ஆண்டு கல்வெட்டிற்குப் பிறகு தான் தாமுழான் கொற்றணங்கி என்பவருடைய பெயர் கல்வெட்டுகளில் காணப்படுகிறது. இவர் கோவில் கணக்கு வழக்குகளை சரியாக நிர்வகித்தேதோடு மட்டுமன்றி அவரும் இத்திருக்கோவிலுக்கு நிறைய கொடைகளை வழங்கியுள்ளார்.

கல்வெட்டு செய்திகள்:

முதலாம் ராஜராஜ சோழனின் 12 கல்வெட்டுகளில் அவருடைய மூன்றாம் ஆட்சியாண்டை (கிபி 988) சேர்ந்த கல்வெட்டு ஒன்றும், நான்காம் ஆட்சியாண்டு (கிபி 989) சார்ந்த கல்வெட்டு ஒன்றும், 13 ஆம் ஆட்சி ஆண்டினைச் (கிபி 998) சார்ந்த கல்வெட்டு ஒன்றும்,

23ஆம் ஆட்சியாண்டினைச் (கிபி 1008) சார்ந்த கல்வெட்டு ஒன்றும், 24-ஆம் ஆட்சி ஆண்டைச் (கிபி 1009) சார்ந்த கல்வெட்டுக்கள் இரண்டும், 25 ஆம் ஆட்சியாண்டைச் (கிபி 1010) சார்ந்த கல்வெட்டுகள் இரண்டும், 26 ஆம் ஆட்சியாண்டைச் (கிபி 1011) சார்ந்த கல்வெட்டுக்கள் இரண்டும், 28 ஆம் ஆட்சியாண்டைச் (கிபி 1013) சார்ந்த கல்வெட்டுக்கள் ஒன்றுமாக மொத்தம் 12 கல்வெட்டுக்கள் இத்திருக் கோவிலில் உள்ளன.

இந்த கல்வெட்டுகளில் தாமுழான் கொற்றணங்கி என்பவருடைய பெயர் 23ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டுகளில் இருந்து காணப்படுகிறது. அதற்குப் பிறகு காணப்படக்கூடிய முதலாம் இராசராசர் கல்வெட்டுகளில் இந்த அதிகாரியினுடைய பெயர் காணப்படுகிறது. இந்த அதிகாரி திருக்கோவிலுக்கு சிறப்புற நிவந்தங்களை செய்வதற்கு ஏற்பாடு செய்துள்ளார் என்ற செய்தியையும் அறிய முடிகிறது.

முதலாம் இராசராசசோழனின் மூன்றாம் ஆட்சி ஆண்டு கல்வெட்டுக்கள் இரண்டிலும் மெய் கீர்த்தி காணப்படவில்லை. ராஜகேஸரி என்று இந்த கல்வெட்டுகள் தொடங்குகின்றன. இந்த கல்வெட்டுகளில் திருவாமாத்தூர் ஊரானது அருவா நாட்டு மீய்வழி வாவலூர் தேவதானமாக இருந்துள்ளது. இத்திருக்கோவிலில் உறையும் இறைவனானவர் திருவாமாத்தூருடைய பரம சுவாமிகள் என்று அழைக்கப்பட்டிருக்கிறார். மூன்றாம் ஆட்சி ஆண்டில் காணப்படும் கல்வெட்டுக்கள் இரண்டும் இத்திருக்கோவில் பரமசாமிகளுக்கு நந்தா விளக்கு அளித்த செய்தியையே கூறுகிறது. இத்திருக்கோவிலுக்கு நந்தா விளக்கு வழங்கியவர்கள் சோழ நாட்டைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகள் ஆவர். ஒரு கல்வெட்டில் நந்தா விளக்கு ஒன்று எரிப்பதற்காக 96 ஆடுகளை அம்பலன் பழூவூர் நக்கியன் விக்கிரம சோழமாராயன் என்பவர் கொடுத்துள்ளார்.

இன்னொரு கல்வெட்டில் நந்தா விளக்கு ஒன்று எரிப்பதற்காக 96 ஆடுகளை ராமன் சித்தவடவன் என்னும் விக்கிரமச் சோழ மிலாடுடையான் கொடுத்துள்ளார். இவ்வாறு இஇராசராசன் காலத்தில் முதல் கொடையையே சோழ நாட்டைச் சேர்ந்த அதிகாரிகள் தான் கொடுத்து துவக்கி வைத்துள்ளனர்.

இராசராசரின் நான்காம் ஆட்சியாண்டு (கிபி 989) சார்ந்த ஒரு கல்வெட்டு மிகவும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சுவையான ஒரு செய்தியை தாங்கி நிற்கின்றது. இந்த கல்வெட்டிலும் ராஜராஜ சோழனின் மெய்க்கீர்த்தி இடம் பெறவில்லை. வாவலூர் நாட்டு தேவதானமாகவே இந்த திருவாமாத்தாருடைய பரம சுவாமிகள் திருக்கோவில் வருகிறது. தென்னாட்டுத் தென்னவன் மாதிரி ஊரைச் சார்ந்த காளி என்னும் மீனவன் மாராயன் மகன் சந்திராசன் என்பவர் ஆவார் . இவரின் நினைவாக சிறிய மாராயன் மற்றும் இவனது தம்பிகள் இணைந்து இத் திருக்கோவிலுக்கு ஒரு நந்தா விளக்கு வைத்துள்ளனர். இந்த நந்தா விளக்கு அவர்களுக்கு செய்த தீங்கிற்கு பரிகாரமாக நந்தா விளக்கு அளித்துள்ளனர் என்ற செய்தியை இந்த கல்வெட்டு தாங்கி நிற்கின்றது.

இஇராசராச சோழரின் 24 ஆவது ஆட்சியாண்டில் (கிபி 1009) இல் தாமுழான் கொற்றணங்கி என்னும் அதிகாரி இத்திருக்கோவில் இறைவனுக்கு அமுது செய்தருள வெள்ளிப் பாத்திரங்களை வழங்கி உள்ளார். மெய்க்கீர்த்தி இன்றி தொடங்கும் இந்த கல்வெட்டு வெள்ளி மண்டை செய்வதற்கு (அதாவது வெள்ளி பாத்திரம் செய்வதற்கு) தாமுழான் கொற்றணங்கி என்பவர் 1506 கழஞ்சு வெள்ளியையும், வெள்ளித் தட்டு ஒன்று செய்வதற்கு எட்டு கழஞ்சு முக்காலே 2 மஞ்சாடி வெள்ளியும் அளித்துள்ளார். இந்த அதிகாரி கோவில் கணக்கு வழக்குகளை விசாரித்தது மட்டுமின்றி,

பிற தானத்தார்களை கோவிலுக்கு தானம் வழங்க செய்ததோடு தானும் இறைவனுக்குத் தொண்டு செய்வதற்காக தன் பங்கிற்கும் வெள்ளியினால் இறைவனுக்கு கொடை அளித்துள்ளார்.

ராஜராஜ சோழனின் 24-ஆம் ஆட்சி ஆண்டில் திருவாமாத்தூரில் இரண்டு கல்வெட்டுகள் காணக் கிடைத்தாலும், ஒரு கல்வெட்டில் மட்டுமே தாமுழான் கொற்றணங்கி எனும் அதிகாரியின் பெயர் இடம் பெற்றுள்ளது. இன்னொரு கல்வெட்டில் அவ் அதிகாரியின் பெயர் இடம்பெறவில்லை. இதில் இருவகையான கருதுகோள்களை நம்மால் எடுத்துக் கொள்ள இயலும். இராஜராஜ சோழனின் 24 வது ஆட்சி ஆண்டில் இந்த அதிகாரி இக் கோவிலுக்கு நியமிக்கப்பட்டிருக்கலாம் அல்லது கொடுக்கப்பட்ட கொடையானது அதிகாரியின் நேரடி பார்வையில் இல்லாமல் மன்னரின் நேரடி பார்வையில் கொடுக்கப் பெற்றிருக்கலாம்.

இஇராசராச சோழரின் 25 ஆம் ஆட்சியாண்டில் (கிபி 1010) திருவாமாத்தூர் கோவிலில் காணப்படும் கல்வெட்டில் தாமுழான் கொற்றணங்கி, கோயில் அதிகாரிகளிடம் கோவில் பற்றி விசாரணையை மேற்கொள்கிறார். இவர் வேசாலி பாடி வடகரை பாகூர் நாட்டு சிறுதாமநல்லூர் என்னும் ஊரைச் சேர்ந்தவர் என்று கல்வெட்டில் இவரைப் பற்றிய அறிமுகம் வருகின்றது. இக்கல்வெட்டு மெய்க்கீர்த்தியுடன் துவங்குகிறது.

திருவாமாத்தூர் திருக்கோவிலில் மூன்று சந்தியிலும் சந்திரசேகரப் பெருமானை எழுந்தருளிவித்து திருப்பலி நிகழ்வினை நடத்த ஏற்பாடு செய்துள்ளார். இந்த திருப்பலி நிகழ்வில் மத்தளம் கொட்ட உவச்சர்களையும் ஏற்பாடு செய்துள்ளார். உவச்சர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு படி நெல் வழங்கிடவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மூன்று வேளையும் சந்திரசேகரப் பெருமாளை வைத்து திருப்பலி எழுந்தருளுவிப்பதற்கு இத்திருக்கோவில் திரு உண்ணாழிகை உடைய சிவப்பிராமணர்கள் ஒத்துக் கொண்டுள்ளனர். மேலும் இவ்வூரார், இவ்வூரில் உள்ள பள்ளிகளுக்கு அளிக்க வேண்டிய நெல் கால் அளவு கொடுத்திருந்தனர். அதனை முழுமையாக அளித்து திருப்பலி நிகழ்வு சிறப்பாக நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்துள்ளார். இந்த திருக்கோவிலில் காணப்படும் கல்வெட்டுகளில் திருப்பலி நிகழ்வு தொடர்பாக பல கல்வெட்டுகள் காணப்படுவதில் இருந்து இத்திரு கோவிலில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருப்பலி நிகழ்வு சிறப்பாக நடந்துள்ளது என்பதை நம்மால் அறிய முடிகிறது.

இராசராச சோழரின் 26 வது ஆட்சியாண்டில் தாமுழான் கொற்றணங்கி என்பவரின் ஊரைச் சேர்ந்த இன்னொரு மனிதர், வேசாலி பாடி வடகரை மேற்கூர் நாட்டு சிறுதாமநல்லூர் ஊரைச் சார்ந்த தாமுழான் குணசேகரன் என்பவர் திருவாமாத்தூர் உடைய ஆடல் வல்லாருக்கு கொடை அளித்துள்ளார். 26 ஆம் ஆட்சியாண்டில் காணப்படும் கல்வெட்டில் ஊரானது ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து பனையூர் நாட்டு வாவலூர் நாட்டு தேவதானமான திருவாமாத்தூர் என்று அழைக்கப்பட்டிருக்கின்றது. இதற்கு முன்னால் காணப்பட்ட கல்வெட்டுகளில் ஜெயங்கொண்ட சோழ மண்டலம் என்ற வார்த்தை இடம்பெறவில்லை. நிர்வாக வசதிக்காக 26 ஆம் ஆட்சி ஆண்டில் இவ்வகையான மாற்றம் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம். இக்கல்வெட்டு மூலம் கிபி 1011 ஆம் ஆண்டிலேயே இத்திருக்கோவிலில் நடராசமூர்த்தி இருந்ததை அறிய முடிகிறது. திருவாமாத்தூர் உடைய கோயில் ஆடல் வல்லாருக்கு அபிஷேகம் செய்வதற்கு துளைபொன் 39 கழஞ்சு முக்கால் மஞ்சாடி தாமுழான் குணசேகரன் என்பவரால் வழங்கப்பட்டுள்ளது.

பொன்னால் ஆன கைக்காறையில் பளிங்கு கற்கள் 58-ம், வைரக் கற்கள் 50-ம், பச்சை கற்கள் 20ம், முத்துக்கற்கள் 190 -ம் பொதிப்பதற்காக பொன் 39 கழஞ்சு கொடையாக வழங்கப்பட்டுள்ளது. பளிங்கு

கற்கள், வைரம், பச்சை, முத்து கற்கள் பதிக்கப்பட்ட கைக்காறை (பிரேஸ்லெட்) அணிகலன் செய்வதற்காக பொன் தானமாக வழங்கிய இவர் தாமுழான் கொற்றணங்கி என்பவரின் ஊரைச் சேர்ந்தவராக இருப்பதால் இந்த கோயில் கொடையானது அவர் மூலம் பெறப்பட்டிருக்கலாம் என்று கருதுவதற்கு இடம் உள்ளது.

இராசராச சோழரின் 26 ஆம் ஆட்சியாண்டு (கிபி 1011) தொண்டை மண்டலமான ஜெயங்கொண்ட சோழமண்டலத்து திருவாமாத்தூர் உடைய பரம சுவாமிகளுக்கு ஸ்ரீ காரியம் செய்கின்ற உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவரின் பணிமகன் வேசாலிப்பாடி வடகரை மேற்கூர் நாட்டு சிறுதாமநல்லூர் தாமுழான் கொற்றணங்கி என்பவர் இவ்வூர் சபையாரையும், ஊராரையும் அழைத்து கோவிலுக்குச் செய்து வரக்கூடிய நிவந்தங்கள் பற்றி கேட்கின்றார். இக்கல்வெட்டில் தான் தாமுழான் கொற்றணங்கி என்பவர் தாம் ராஜராஜ தேவரின் பணிமகன் என்று தம்மை அறிமுகம் செய்கின்றார். மேலும் திருக்கோவிலுக்கு ஸ்ரீகாரியம் செய்வதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரி என்பதை இக்கல்வெட்டில் ஸ்ரீ காரியம் செய்கின்ற என்ற வார்த்தையின் மூலம் நாம் அறிய முடிகிறது. இத்திருக் கோவிலுக்கு இவ்ஊரார்கள் செலுத்தும் வரியான நெல்லானது ராஜகேசரி என்னும் மரக்காலால் அளக்கப்படாமல் வீதி விடங்கன் என்னும் மரக்காலால் அளக்கப்பட்டு வந்தது. வீதி விடங்கன் என்னும் மரக்காலால் அளக்கப்பட்டதால் உபரிநெல் நிறையவே கிடைத்தது. அந்த உபரி நெல்லைக் கொண்டு தினம்தோறும் நண்பகல் வழிபாட்டின் போது அக்கார அடிசில் செய்து இறைவனுக்குப் படையல் செய்ய வழிவகை செய்துள்ளார். 26 ஆம் ஆட்சியாண்டு 206 ஆவது நாள் முதல், ராஜகேசரி என்னும் மரக்காலால் நெல்லினை அளந்து வரியாக செலுத்தும் படி திருவாமாத்தூர் ஊராருக்கு அறிவிப்பினை செய்கின்றார்.

இதற்கு முன்னால் இவர்கள் வீதிவிடங்கன் என்னும் மரக்கால் கொண்டு அளந்ததால் நெல் உபரியாக இருந்தது. மேலும் திருக்கோவிலில் இருந்து வந்த நெல்லையும் கணக்கில் கொண்டு, தற்பொழுது இருக்கக்கூடிய நெல்லின் அளவு இருநூற்று ஒரு பத்து முக்கலனே இரு தூணி குறுணியாக இருந்தது. மேலும் திருக்கோவிலுக்கு வந்த பொன்னைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பற்றுப் பார்த்து இருந்த பொன் 14 கழஞ்சு அரையே அரைக்கால் என்று கண்டறியப்பட்டது. இவ்வாறு உபரியாக இருக்கக்கூடிய நெல் மற்றும் பொன் ஆகியவற்றை கொண்டு இத்திருவாமாத்தூருடைய பரம சுவாமிகளுக்கு தினம்தோறும் நண்பகல் பூசையின் போது ஜெயங்கொண்ட சோழன் என்னும் திருநாமத்தினால் அக்கார அடிசில் அமுது செய்து இறைவனுக்கு படைக்க வேண்டும் என்று தாமுழான் கொற்றணங்கி அங்கே ஆணையிடுகிறார். இத்திருக்கோவிலுக்கு இந்த கல்வெட்டு சிறப்பு சேர்க்கக்கூடிய ஒரு கல்வெட்டாகவே இருக்கிறது.

இக்கல்வெட்டு மூலம் நிறைய செய்திகளை நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது. இந்த திருக்கோவிலுக்கு ஜெயங்கொண்ட சோழன் என்னும் பெயரில் உச்சிகால பூசை நடத்தும் பொழுது, அக்காரவடிசில் அமுது இறைவனுக்கு செய்ய தேவைப்படும் பொருட்கள் பட்டியலிடப்படுகிறது. பழவரிசிக்கு செந்நெல் தினந்தோறும் குறுணி இரு நாழியாக கொடுக்கப்படுகிறது. அக்காரவடிசில் செய்யத் தேவைப்படும் சிறுபயிற்று பருப்பு நான்கு நாழிக்கு, பதக்கு நெல் வழங்கப்படுகிறது. நெய் நாழிக்கு, மூன்று குறுணி நாழி நெல்லானது வழங்கப்படுகிறது. ஆயிரம் பலம் என்னும் துலா கோலால் சர்க்கரை அளந்து கொடுக்கப்படுகிறது. 20 பலம் சர்க்கரைக்கு 5 மா பொன் வழங்கப்படுகிறது. வாழைப்பழம் 15க்கு ஒரு மா பொன் வழங்கப்படுகிறது. ஆக மொத்தம் ஒரு நாள் நண்பகல் பூசைக்கு ஆறுமா பொன் தேவைப்படுகிறது. ஒரு ஆண்டிற்கான தொகையாக 14 கழஞ்சரையே அரைக்கால் மா கணக்கிடப்பட்டு,

இந்த திருக்கோவிலில் உபரியாக இருந்த 14 கழஞ்சு அரையே அரைக்கால் பொன்னானது நண்பகல் பூசைக்கு நிவந்தமாகக் கொடுக்கப்படுகிறது. 5 அடைக்காய் அமுது, 20 வெற்றிலைக்கும் நெல் ஒரு நாழி கொடுக்கப்படுகிறது. நெல்லானது ஏழு குறுணி ஒரு நாளைக்கு என்று கணக்கிடப்படுகிறது. இந்த ஏழு குறுணி நெல்லை தினம்தோறும் பூசைக்கு எடுத்துக்கொண்டு ஒரு ஆண்டிற்கு 210 முக்கலனே இரு தூணி குறுணி என்று கணக்கிடப்பட்டு உபரியாக இருக்கக்கூடிய நெல் அனைத்தும் ஒரு ஆண்டு ஜெயங்கொண்ட சோழன் என்னும் திருநாமத்தால் நடைபெறும் உச்சிகால பூசைக்கு அக்காரவடிசில் அமுது செய்தருளுவதற்காக வழங்கப்படுகிறது.

அதிகமாக இருந்த பொன்னும், நெல்லும் இறைவனின் பூசைக்கு ஒரு ஆண்டிற்கு எந்தவிதமான குறைபாடும் இல்லாமல் நடைபெறுவதற்கு அருமையான ஒரு ஏற்பாட்டினை கொற்றணங்கி என்னும் அதிகாரி தம்முடைய திறமையான செய்கையினால் ஏற்படுத்தி உள்ள இந்த அற்புதமான நிகழ்வை ஆயிரம் ஆண்டுகள் கழித்து நாமும் படித்து அந்த அதிகாரியின் திறமையை வியந்து வியந்து எண்ண வேண்டும்.

இவற்றில் நாம் ஒப்பிட்டு நோக்க வேண்டியது இவர்களுடைய கணக்கீடு. இந்த கணக்கீடுகள் கணிப்பொறி, கணிப்பான் போன்றவை இல்லாத காலங்களில் எவ்வளவு துல்லியமாக கணக்கிட்டு, ஒரு ஆண்டிற்கு தேவையான பூசைக்குத் தேவையானவற்றை, இருக்கக்கூடிய உபரி நெல், உபரி பொன் கொண்டு ஒரு அதிகாரி நிறைவேற்றி இருக்கிறார் என்றால் இதுதான் சோழப்பேரரசின் மிகச்சிறந்த கட்டமைப்பு ஆகும். மன்னர் மட்டும் சிறப்பாக செயல்பட்டது மட்டுமின்றி, சோழப் பேரரசில் இருந்த பல அதிகாரிகளும் திறம்பட செயல்பட்டுள்ளனர் என்பதற்கு இதுபோன்ற கல்வெட்டுக்கள் இன்றும் நமக்கு உதாரணம் காட்டி நிற்கின்றன.

இக்கல்வெட்டு இன்னும் பல அதிசயங்களை தன்னகத்தை கொண்டுள்ளது. அதே கல்வெட்டில் மன்றாடிகளிடமும் சாவாமூவா பேராடு கொடுக்கப்பட்டு பால் பெறப்படுகிறது. காசானது நிறைக்கல்லால் அளக்கப்பட்டு துளை நிறை செம்பொன் 18 கழஞ்சு என கணக்கிடப்படுகின்றன. இந்த 18 கழஞ்சினாலும் ஒரு பொன் கழஞ்சிற்கு 10 செம்மலி ஆடு கைக்கொண்டு, 18 கழஞ்சுக்கு மொத்தம் 180 சாவா மூவா பேராடு மன்றாடிகளுக்கு கொடுக்கப்படுகிறது. அவர்கள் அந்த ஆட்டினை வைத்து இத்திருக்கோவிலில் தினந்தோறும் குருணி நாழி நீர் படாத தூய பாலினை வீதிவிடங்கன் என்னும் எண்நாழிக் காலால் அளந்து கொடுப்பதாக உறுதி அளிக்கிறார்கள். மேலும் இத்திருக்கோவில் தேவகன்மிகளிடம் சாவா மூவா பெரு மாடு 40 பெற்று இத் திருக்கோவில் இறைவனுக்கு சந்தி விளக்கு 8 அர்த்த சாம பூசை முடியும் வரை எரியும் அளவிற்கு, வீதிவிடங்கன் என்னும் மரக்காலோடு ஒத்த அளவினை உடைய ஒரு உழக்கினால் அளந்து தினமும் உழக்கு நெய் இத்திருக்கோவில் திருஉண்ணாழிகை உடைய சிவப்பிராமணர்கள் வசம் ஒப்படைப்பதாக இத்திருவாமாத்தூர் மன்றாடிகள் உடன் ஒரு ஒப்பந்தம் செய்யப்படுகிறது. தினந்தோறும் எட்டு விளக்கு, அர்த்த சாம பூஜை முடியும் வரை எரிப்பதற்காக இவ்வூர் மன்றாடிகள் வாக்களித்துள்ளனர்.

ஒரு சந்தி விளக்கு எரிப்பதற்கு 5 பசுக்கள் மூலம் 8 சந்தி விளக்கு எரிப்பதற்கு 40 பசுக்கள் மன்றாடிகளுக்கு தானமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த திருக்கோவில் அழகிய தேவர் ஒவ்வொரு வாரம் ஞாயிற்றுக்கிழமையும் சிறப்பு விழா கண்டுள்ளார். ஒவ்வொரு வாரமும் ஆதித்த வார நாள் கொண்டாடுவதற்கு நெல்லு ஏழு குறுணி ஐந்து நாழி உரியாக, ஆண்டு ஒன்றுக்கு 52 வாரங்கள் என கணக்கிடப்பட்டு, நெல்லானது முக்கலனே முக்குறுணி ஆறு நாழியாக இத்திருக்கோவில் பண்டாரத்தில் கொடுக்கப்படுகிறது.


திருக்கோவிலின் ஆதித்த வாரத் திருநாள் அதாவது ஞாயிற்றுக்கிழமை பூசை செய்யக்கூடிய திருஉண்ணாழிகை உடைய சிவப்பிராமணருக்கு நெல், கைவிளக்கு இரண்டிற்கு நெய் நான்கு உழக்கு தேவைப்படுவதால் அவற்றிற்கு நெல் ஒரு நாழியாகவும், பஞ்சகவியத்திற்கு தேவைப்படும் ஒரு நாழி நெய்க்கு நெல், அந்த நாளில் பால் மற்றும் தயிருக்காக நான்கு நாழி நெல்லும், கலசத்தின் கீழ் இடுவதற்கு ஒரு நாழி நெல்லும், திருவமுது செய்தருள திருஅமிர்து அரிசி நான்கு நாழிக்கு நெல்லு குருணி இரு நாழியும், அட்டி அமுது செய்தருள நெய் ஒரு நாழிக்கு உரி நெல்லும், கறியமுது இரண்டிற்கு கொடுக்கப்படும் நெல் நாழியும், தயிர் அமுதிற்கு நெல்லு இருநாழியும், அடைக்காய் அமுதுக்கும், வெற்றிலை அமுது இருபத்துக்கும் நெல் ஒரு நாழியும் ஆக மொத்தம் நெல்லு ஒவ்வொரு வார ஆதித்த வார திருநாளுக்கு ஏழு குறுணி 5 நாழி உரியாகக் கொடுக்கப்படுகிறது.

இத்திருக்கோவிலில் வரியாக வரக்கூடிய நெல்லிலும், பொன்னிலும் ஒவ்வொரு வாரமும் ஆதித்த வார திருவிழா நடைபெறுவதற்காக இத்திருக்கோவில் உடைய சிவபிராமணர்களிடம் நெல் ஒப்படைக்க வேண்டும் என்று ஒப்பந்தம் செய்யப்பட்டு கல்வெட்டாக தாமுழான் கொற்றணங்கி என்பவரால் சந்திர ஆதித்தர் இருக்கும் வரை தொடர்ந்து நடைபெற வேண்டும் என்று திருவாமாத்தூர் கோவிலில் இராசராச சோழரின் 26 ஆவது ஆட்சி ஆண்டில் வைக்கப்படுகிறது.

இத்தகைய சிறப்பும், பொறுப்பும், திறமையும் வாய்ந்த அதிகாரிகளால் சோழநாடு சிறந்து இருந்தது. இவ்வாறு சிறப்புற்று இருந்த சோழ நாட்டிற்கு ஒரு உதாரணமாக தாமுழான் கொற்றணங்கியைக் கண்டோம். இதுபோல் மேலும் பல அதிகாரிகள் அரசருக்கும், மக்களுக்கும், இறைவனுக்கும் உண்மையாக இருந்து சோழப் பேரரசு செம்மையாக நடைபெறுவதற்கு உதவி புரிந்தார்கள் என்பதில் ஐயமில்லை. இப்பேற்பட்ட அதிகாரிகள் தொடர்ந்து கோவில்களைக் கண்காணித்து பூசைகள் குறைவற நடைபெறுவதற்கு வழிவகை செய்ததால் தான் பல ஆயிரம் ஆண்டுகள் தாண்டியும் இன்றும் நாம் இக்கோவில்களைக் கண்ணாரக்கண்டு, இறைவனை வாயாரப் பாடி, மனமார நினைந்து கைதொழுகின்றோம். இப்பேற்பட்ட வாய்ப்புகளை எல்லாம் நமக்கு ஏற்படுத்திக் கொடுத்தவர்கள் தாமுழான் பொற்றணங்கி போன்ற பல அதிகாரிகள் ஆவார்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.







திருக்குறள் என்னும் மெய்யியல்





சி,ஹாருன் பாஷா.
மெய்யியல் ஆய்வு,
8610780183,
மதுரை.

“தமிழர் தத்துவம் என்பதே திணைக்கொள்கை தான். திணைகளில் படைப்புத்தெய்வம் என்று எதுவும் இல்லை,கருப்பொருட்கள் பதிநான்கில் ஒன்றாகவே தெய்வம் வைக்கப்பட்டது. தமிழர் வாழ்வியல், அறிவையும் அறிவரையும் போற்றுவதே. வ உ சிதம்பரனார் கூட தன் திருக்குறள் நூலின் முன்னுரையில் திருக்குறளின் கடவுள் வாழ்த்தும், நீத்தார் பெருமையும்,வான் சிறப்பு அதிகாரமும் இடைச்செருகல் என்கிறார்.”

உலகப் பொதுமறையாக பல மொழிகளில் மொழிபெயர்த்து, வையகம் முழுவதும் தமிழர்களால் உயர்த்திப்பிடிக்கப்படுவது வள்ளுவம் என்னும் குறள் ஆகும். பரிமேலழகர் தொடங்கி மணக்குடவர்,மு.வரதராசன், கலைஞர் என இன்றளவும் பற்பல உரையாசிரியர்கள் தங்களின் உரைகளைத் தொகுத்தளித்தாலும், எண்ணிப்பார்ப்பதற்க்கும் இயலா அளவு கருத்துகளைத் தன்வயம் வைத்துள்ள நூல் குறளேயாம்.

உலகை நாம் பார்க்கும் விதமே தத்துவம் –[1] என்பார் ஆலன் உட்ஸ். மனிதனின் வாழ்வியல் முறைகளை நெறிப்படுத்துவதற்காகவே பற்பல மெய்யியல்கள் அந்ததந்த நிலத்தின்பால் வேர்விடத் தொடங்கும். இம்மெய்யியல்களின் கூட்டமைப்பு அந்நிலமக்களின் தத்துவமாக மாறும். இத்தத்ததுவங்களே ஒற்றைப் புள்ளியின் பால் குவிக்கப்பட்டு, நிறுவனப்படுத்தப்பட்டு சமயங்களாக உருக்கொள்ளும். பல்வேறு வாழ்வியல்கள் மற்றும் தத்துவங்களின் சாயலைக் கொண்டிருப்பதனால் திருக்குறளை அனைத்து சமயங்களும் தங்களுக்குரியவை என்று எடுத்துக் கொண்டாடுகின்றன.

பல்வேறு அறிஞர்கள் அதனை ஜெயின சமயத்தின் நூல் என்கிறார்கள். மேலும் 1932 -இல் எழுதப்பட்ட திருக்குறள் ஆராய்ச்சியும் ஜெயின சமய சித்தாந்த விளக்கமும் என்னும் நூல் அவரை முழுஜெயினராகவே காட்டுகிறது. மேலும் அவர் பாடலிபுத்திரத்தைச் சேர்ந்த குந்தகுந்தர் என்றும், அவர் கிமு 52-இல் பல வடமொழி நூட்களை அவர் அங்கு இயற்றியதாகவும் –[2] கூறுகிறார்கள். அகவாழ்வியல் பேணாது இல்லறம் விடுத்து வாழ்பவர்கள் திகம்பரர்கள். அப்படி இருக்கையில் இன்பத்துப்பாலை முன்னிறுத்தி எழுதிய வள்ளுவர் எப்படி ஜெயின வாழ்வியலைக் கூறுவார்.

மேலும் திருக்குறள் ஒரு பௌத்தநூல் என்றும் , அதன் உண்மையான பெயர் திரிகுறள் என்றும், அவை பௌத்தத்தின் திரிபீடகத்தையே குறிக்கிறது- [3]-என்றும் கூறினார் அயோத்திதாசர் அவர்கள்.

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும்.– [4]

எனும் குறளில் உள்ள வினைக்கோட்பாட்டின் சாயலைக் கொண்டே அவ்வாறு அதை கூறவிழைகிறார்கள். ஊழ் அதிகாரத்தில் உள்ள

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்.–[5]

- எனும் குறள் அனைத்தையும்விட நியதி, விதி என்னும் ஊழே முன்னிற்கும் என்று கூறுவதால் வினைப்பயன் அங்கு தோற்றுப்போகிறது. எனவே அது வினைக்கோட்பாட்டைப் பின்பற்றவில்லை எனத் தெரிகிறது. மேலும் அதை மறுத்துக்கூறும் அ.சக்கரவர்த்தி நாயினார் பௌத்தர்கள் விலைக்கு புலால் வாங்கி உண்பவர்கள், ஆனால் திருக்குறள் புலால்மறுப்பை முன்னிறுத்துகிறதே – [6] எனக்கூறி இது பௌத்தநூல் இல்லை எனத்துணிவார். இவை தவிர்த்து, குறள் வேதங்கள் கூறும் வாழ்வியலை உணர்த்துகிறது என்பார் ஓய்வு பெற்ற தொல்லியல் துறை இயக்குனர் திரு.ரா.நாகசாமிஅவர்கள்–[7]. வேதங்கள் (தருமாசாஸ்திரங்கள்) கூறும் மதுவர்க்கம் எனும் உணவு முறையில் மாடு ,பன்றி, குதிரை, காண்டாமிருகம், மான், போன்றவை வேள்வியில் இட்டுப்படைத்தது உண்ணும்

முறை உண்டு. யக்யங்களில் குறிப்பிட்டுச் சொல்லப்படுபவையான அசுவமேதயாகம் ,வாஜ்பேயம், ராஜசூயம் போன்றவற்றில் உயிர் பலி கட்டாயமானது ஆகும். வேள்வியில் இடப்படும் பலியைப் பற்றி டாக்டர். அம்பேத்கர் அவர்களும் தன் நூலில் தெளிவாய் உரைப்பார் –[8] இவ்வாறு வேத பண்பாடு இருக்கையில், திருவள்ளுவரோ

அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று - [9].

என்று அந்த வேள்வியில் கொடுக்கப்படும் பலியைக் கண்டிக்கிறார். அவ்வாறு பலிகொடுத்து உண்ணப்படும் ஊணினால் உண்டாகும் பாவத்தை எவ்வாறு போக்குவீர் ? என்னும் முறையில், அப்படி உண்ணாமல் இருப்பதே நன்று என்கிறார். இப்படி இருக்கையில் அது தருமசாஸ்திரங்கள் கூறும் வாழ்வியலை போதிப்பதாக எப்படிக் கூறமுடியும் ? –[10] எனக் கேள்வி எழுப்புவார் பேராசிரியர்.

க.நெடுஞ்செழியன் அவர்கள். அப்படியானால் வைணவ சமய நூலா திருக்குறள் ?

தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு- [11]

இக்குறளைவைத்து அதில் வரும் தாமரைக் கண்ணான் என்பது திருமாலைக் குறிக்கிறது என்பர் சிலர். இதில்வரும் கண் என்னும் சொல் தமிழ் இலக்கணமுறையில் ஏழாம் வேற்றுமை உருபு ஆகும். அதன் பொருளாய்ப் பார்த்தால் தாமரைமேல் இருக்கும் உலகு என்று பொருள். இன்பத்துறையில் தன் காதலியுடன் தோளோடு தோள் சேரும் நொடியை விடவா உன் அறிவுலகம் பெரிது என்று கேட்கும் வண்ணமாய் அமைந்த குறள் அது. எனவே அது திருமாலைக் குறித்தல்அ ன்று, அது வைணவ நூலும் அன்று. எனில் இது சைவ சமய நூலா ? என்ற ஆய்வை உட்படுத்திப் பார்த்தால் கல்லாடம் எழுதிய கல்லாடனார் தாம் ஒரு சைவராக இருந்தும் திருக்குறள் பற்றிக் கூறுகையில்

சமயக் கணக்கர் மதிவழி கூறா
துலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன் றனக்கு வளர்கவிப் புலவர்முன்
முதற்கவி பாடிய முக்கட் பெருமான்- [11]

என்று கூறித் தனது சைவப் பற்றை பின் தள்ளி வைத்துவிட்டு வள்ளுவத்தை முன் நிறுத்துகிறார். மேலும் கல்லாடனார் கூறும் பொழுது திருக்குறளை 49 புலவர்கள் கொண்ட அவையில் அரங்கேற்றிய பொழுது அனைவரையும் முந்திக்கொண்டு சிவன் பாராட்டினார் என விளிக்கிறார். இவைகளைப் பார்க்கும் பொழுது குறள் சைவநெறிக்கு உட்பட்டது அல்ல எனத் தெளிவாய்ப் புரிகிறது. எனவே தாம் 1940 இல் திருக்குறள் உட்பட்ட சங்க இலக்கியங்களைக் கட்டி வங்கக்கடலில் போடுவோம் என்று போராட்டம் நடத்தினர் சைவர்கள் - [13]. இவை ஒரு புறமிருக்க ஐயா.மு. தெய்வநாயகம் அவர்கள் தனது நூல் வாயிலாகத் திருக்குறள் உணர்த்துவது கிறித்துவ வாழ்வியலே எனக் கூறத்துணிகிறார். மேலும் அதில் வரும் அவி எனும் சொல் கூட கபாலமலையில் பலியான இயேசு கிறித்துவைக் குறிக்கிறது, அதன் நீட்சியாய் தோமையாரால் கட்டப்பட்டது தான் சென்னை கபாலீஸ்வரர் ஆலயம் என்கிறார்- [14].

இவை எல்லாம் எவ்வளவு அபத்தமானது. கிறித்துவுக்கு ஏறத்தாழ 800 – ஆண்டுகளுக்கும் முன்னர் பிறந்த வள்ளுவர், அவருக்குப் பின் வந்த கிறித்துவைப் பற்றியச் செய்தியை எப்படிக் கூறியிருக்க முடியும்? எனவே அந்நூல் அச்சமயத்தையும் சாராது.

முகமது நபி ஏசுவிற்கும் பின் வந்தமையால் நிச்சையமாக அது இஸ்லாமிய நூலாக இருக்கவாய்ப்பில்லை. இவ்வாறு எந்தச்சமயதையும் சாராமல் குறள் இருப்பதற்குக் காரணம் அது சமயங்கள் தோன்றாத புரட்சிக்காலத்தைச் சேர்ந்தமையால். மனு, அர்த்தசாஸ்திரம் 5 முக்கியத் தருமங்களை (வர்ண, ஆசிரம, வர்ணாசிரம, குண, விசேட) முன்னிறுத்துகையில் மக்கள் வாழ்வியலில் அதனை மறுத்தது திருக்குறள் ஆகும். வர்ண அடுக்கில் கீழ் உள்ளவர்கள் கீழோர் ஆக நிந்திக்கப்பட்ட நிலையில் திருக்குறளோ...

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை-[15]– என்று உழவை முன்னிறுத்தி அதுவே தலை என்கிறது. தருமசாஸ்திரங்களை முன்னிறுத்தி அரசன் நான்மறையோர்களின் கீழ் இயங்குதல் வேண்டும், அதன்படி அரசும் செல்லுதல் வேண்டும் என்னும் முறையை உருவாக்கியபோது திருக்குறளோ

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும். [16] என்று அரசனை ஒருபடி உயர்த்திக் கூறுகிறது. கீதையின் 18 – ஆவது அத்யாயத்தில் கூறப்படும் நான்கு வர்ணப்பிறப்பையும், நான்காவது வர்ணத்தார் செய்யும் வேலைக்கு பிரதிபலன் எதிர்பார்த்தல் கூடாது என்னும் கூற்றையும் அது முன்னிறுத்தும் பொழுது அதை உடைக்கும் வண்ணமாய்

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.–[17] என்றுக் கூறி பயனை முன்னிறுத்துகிறது நம் திருக்குறள் . பயனை அறியாது செயல் செய்யக்கூடாது என்று கண்டிக்கிறது. மேலும் மக்களின் ஏற்றதாழ்வுகள் கூடாது என்று தன்னுடைய குறளான

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா

செய்தொழில் வேற்றுமை யான். [18] - ஆல் பிறப்பால் அனைவரும் ஒன்று, அதில் பிரிவு ஏதும் இல்லை, மேலும் தொழிலினால் கூட சிறப்பு ஒவ்வாது என்று துணிந்து உரைக்கிறது. எனவே திருக்குறள் முன்னிறுத்தும் மிக முக்கிய வாழ்வியல் கூற்று தருக்கசாத்திரமே தவிர தருமாசாஸ்திரம் அல்ல. அதுவே தொல்காப்பியர் முன்னிறுத்தும் தந்திரஉத்திகள். – [19]. நூலின் கருத்திற்கு ஏற்றவாதமும்,ஒத்த காட்சிகளைக் கூறி பதியவைத்தலும், குற்றம் களைதலும், தன் கருத்து துணிதலும் எவ்வாறு அமையவேண்டும் என்ம்பதை திருக்குறள் பின்பற்றியுள்ளதே அதன் தனித்துவம். அவ்வாழ்வியல் சமயம் சாராதது என்பதற்கு இதுவும் ஒரு சான்று.

திருக்குறள் கூறும் மிக முக்கியமான வாழ்வியல் கொள்கை அறனே. எது அறம் ? என்னும் கேள்விக்கு –

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.–[20] என்று மனத்தின் தூய்மையே அறம் என்ற விடையைத் தருகிறார் வள்ளுவர்.

அந்த மாசை எப்படிப் போக்க வேண்டும் ? என்னும் கேள்விக்கு

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும் [21] என்ற விடையைத் தருகிறார்.

எனில் வாய்மை என்பது தான் என்ன என்னும் கேள்விக்கு

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்

தீமை இலாத சொலல்.[22] என்னும் விடையால் தீமை தராத சொற்களே வாய்மை என்கிறார்.

அப்படியானால் அந்தத் தீமை என்பது எப்படிப்பட்டது ? என்னும் கேள்விக்குத் தமிழர்களின் மிக முக்கியமான, தொல் கபிலரால் வளர்த்தெடுக்கப்பட்ட எண்ணியக் கொள்கையின் மூலம் விளக்கமளிக்கிறார் வள்ளுவர் ,அதுவே

தீயவை தீய பயத்தலால் தீயவை

தீயினும் அஞ்சப் படும். [23] என்னும் குறள் ஆகும். இப்படிப்பட்ட உயரிய மெய்யியலைக் கொண்ட வள்ளுவமே தமிழர் தத்துவம். தவத்தை

முன்னிறுத்தும் அவைதிக, சிரமண சங்கங்களுக்கு இடையே

அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்

பிறன்பழிப்ப தில்லாயின் நன்று. [24] என்று இல்லறத்தின் முக்கியத்துவத்தை, அதையும்விட முக்கியமாய் இன்பியலின் அடிப்படையை முன்நிறுத்துவார் வள்ளுவர் . நான்மறை முற்றியவர்கள், பலருக்கு கல்வியை மறுத்த பொழுது தமிழ் மரபின் திருக்குறளோ

கற்க கசடறக் கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக. [25] என கசடறக் கல்வியை கற்கவேண்டும் என்கிறது.

அதன் நீட்சியே தமிழ் மரபில் வந்த ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்.

வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும், கீழ்ப்பால் ஒருவன் கற்பின், மேற்பால் ஒருவனும் அவன் கண் படுமே [26] இப்பாடலில் உள்ள கல்வியின் சிறப்பு வள்ளுவம் தந்த நீட்சியே. கிட்டத்தட்ட ஆயிரம் ஆண்டுகள் கடந்தும் அதன் நீட்சியே ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனின் கூற்று தெளிவுபடுத்துமாயின் அது தமிழரின் வாழ்வியலில் எவ்வளவு பெரிய வேராய் ஊன்றியிருக்கும் என எண்ண வேண்டாவா...? அதன் நீட்சியாய் வந்த நாலடியாரும்

கல்வி கரையில கற்பவர் நாள்சில மெல்ல நினைக்கின் பிணிபல தெள்ளிதின் [27] என்று கல்வியின் தேவையை விரிந்துரைக்கிறது. மேலும் தமிழர் தத்துவம் என்பதே திணைக்கொள்கை தான். திணைகளில் படைப்புத்தெய்வம் என்று எதுவும் இல்லை,கருப்பொருட்கள் பதிநான்கில் ஒன்றாகவே தெய்வம் வைக்கப்பட்டது. தமிழர் வாழ்வியல், அறிவையும் அறிவரையும் போற்றுவதே. வ உ சிதம்பரனார் கூட தன் திருக்குறள் நூலின் முன்னுரையில் திருக்குறளின் கடவுள் வாழ்த்தும், நீத்தார் பெருமையும்,வான் சிறப்பு அதிகாரமும் இடைச்செருகல் என்கிறார் -[28] ஆனால் திருவள்ளுவரின் கடவுள் வாழ்த்தோ அறிவை பகுத்தளிக்கும் பகவனை முன்நிறுத்துகிறது. [29] . பலர் பகவனை பகலவனாக, இறைவனாக கூறுகையில் தமிழ் இலக்கண மரபோ

பகுபதம்,பகாப்பதம் என்று சொல்லை பிரிக்கும் முறையைக் கொண்டு பகு - பக - பகவன் - என்று பொருளளிக்கிறது. இதைக் குறிப்பால் உணர்த்தும் முறையாக மெய்ப்பொருள் காண்பது அறிவு - [30] - என்னும் குறட்பாவால் குறிக்கிறார் வள்ளுவர்.இவ்வாறு இன்பியல், மூல ஊழ், எண்ணியக் கோட்பாடுகளை உள்ளடக்கி ஆணை கூறல் என்னும் தருக்க உத்தி கொண்டு முற் காலத்தில் இருந்த பல்வேறு கோட்பாடுகளை பதிய வைத்ததுடன், அல்லன ஒதுக்கி நல்லன துணிந்து உரைத்திருக்கிறார் வள்ளுவர். அனைத்திலும் அவர் முன்நிறுத்துவது அறத்தையே. ஏனெனில் தமிழர் வாழ்வும், மெய்யியலும்

அறத்தின் பால் நிற்பதே. வள்ளுவனும் அறவோனே.

சான்றெண் விளக்க நூட்கள் :

1.தத்துவங்களின் அறிமுகம் – ஆலன் உட்ஸ்

2.திருக்குறள் ஆராய்ச்சியும் ஜெயின சமய சித்தாந்த விளக்கமும்.

3.க. அயோத்திதாசர் ஆய்வுகள் - ராஜ கௌதமன் –பக்.160

4.திருக்குறள் - 319

5. திருக்குறள் - 380

6. திருக்குறள் ஆராய்ச்சியும் ஜெயின சமய சித்தாந்த விளக்கமும் -அ.சக்கரவர்த்தி நாயனார்

7.Thirukural –an abridgement of sasthras – R.Nagaswami

8.பண்டைய இந்தியாவின் புரட்சியும் எதிர்ப்பும் – அம்பேத்கர்

9.திருக்குறள் - 259

10. தொல்காப்பியம்-திருக்குறள் காலமும் கருத்தும் – க.நெடுஞ்செழியன்.

11. திருக்குறள் - 1103

12. கல்லாடம் (20) – பெருமழைப் புலவர் பொ.வே.சோமசுந்தரனார்.

13.சங்க இலக்கிய கோட்பாடுகளும் சமய வடிவங்களும் – க.நெடுஞ்செழியன்.

14.விவிலியம் திருக்குறள் சைவ சித்தாந்த ஒப்பாய்வு –மு.தெய்வநாயகம்.

15.திருக்குறள் -1037

16. திருக்குறள் - 338

17. திருக்குறள் -45

18. திருக்குறள் -972

19.தொல்காப்பியம் மரபியல் சூத்திரம் – 112.

20. திருக்குறள் -34

21. திருக்குறள் -298

22. திருக்குறள் -291

23. திருக்குறள் -202

24. திருக்குறள் -49

25. திருக்குறள் -391

26.புறநானூறு -198

27.நாலடியார் – 135.

28. திருக்குறள் வ உ சி உரை

29. திருக்குறள் - 1

30. திருக்குறள் -423

இராஜகேசரி இராஜமகேந்திரன்





"இராஜமகேந்திர சோழரின் இந்த நடுகல் கல்வெட்டு மிக சிறப்பு வாய்ந்தது ஆகும் கிருஷ்ணகிரி பகுதி இவரது ஆட்சியில் இருந்ததை இக்கல்வெட்டு உறுதி செய்கிறது, மேலும் கர்நாடக பகுதியில் நடந்த போர் ஒன்றில் இராஜமகேந்திர் சோழர் இறந்திருக்கலாம் என்ற கருத்து வலு அடைகிறது."

ஸ்ரீநிவாஸ்
மென்பொறியாளர்
வேலூர்

கல்வெட்டுகள் உடைய நடுகற்கள் தனி சிறப்பு உடையவையாக திகழ்கிறது, பல முக்கியமான வரலாற்று தகவல்களையும், அக்காலத்தில் நிலவிய சூழ்நிலைகளை இந்த நடுகல் கல்வெட்டுகள் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

இராஜமகேந்திர சோழர் கிபி 1060-1063 மூன்று ஆண்டுகள் ஆட்சிபுரிந்த சோழ அரசர் ஆவார், இராஜமகேந்திர சோழர் பற்றி வரலாற்று அறிஞர்கள் பல்வேறு வீதமான கருத்துகளை கூறுகின்றனர், இராஜமகேந்திர சோழர் இரண்டாம் இராஜேந்திர சோழரின் மகன் அல்லது இளவல் இராஜேந்திர சோழரின் மூன்றாவது மகன் ஆக இருக்க கூடும் என்ற கருத்துக்கள் உண்டு மூன்று ஆண்டுகள் மட்டுமே ஆட்சியில் இருந்ததால் இராஜமகேந்திர சோழரின் கல்வெட்டுகள் மிக குறைவாக கிடைக்கிறது என்பதால் இராஜமகேந்திரர் யார் முடிவை எட்ட முடியவில்லை.

திருவரங்கம் கோவிலுக்கு இராஜமகேந்திர திருச்சுற்று அமைத்து திருப்பணிகள் மேற்கொண்டுள்ளார், திருவல்லம் வில்வநாதேஸ்வரர் கோவிலில் இராஜமகேந்திர சோழரின் கல்வெட்டும் ஒன்று காண கிடைக்கிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள பீமாண்டப்பள்ளி என்ற ஊரில் கிடைத்த இராஜமகேந்திர சோழர் கால நடுகல் ஒன்று தற்போது கிருஷ்ணகிரி அருங்காட்சியகத்தில் உள்ளது, இந்நடுகல் கூறும் செய்தி என்னவென்றால்.

வீற்றிருந்தருளினகோவி ராசகேசரி வன்மரான

உடையார் ஸரீ இராசமகேந்திர தேவர்க்கு யாண்டு இரண்டாவது


விஜயராஜேந்திர மண்டலத்து விரியூர் நாட்டு கூடுமுக்கி

நித்த விநோதக கங்கருடனிருக்குமறுகரை மல்லன் சேவகர்

சேரமகன் பன்மரசருடன் பல்லவாத்திதர் மகள் சேரமக்கன் தீ பாய்ஞ்சாள் இது செய்தேன் சாமுண்டாச்சாரியேன்”

இராஜமகேந்திர சோழரின் 2 ஆம் ஆட்சியாண்டில் விஜயராஜேந்திர மண்டலத்தில் உள்ள விரியூர் நாட்டு கூடுமுக்கி என்ற இடத்தில் நடந்த போரில் நித்த விநோதக கங்கர் உடன் இருக்கும் அறுகரை மல்லனின் சேவகர் சேரமகன் போரில் இறந்து போக, சேரமகனின் மனைவி பல்லவாத்திதர் மகள் சேரமக்கன் உடன் கட்டை ஏறுகிறார் தீயில் பாய்ந்து இறந்து விடுகிறார் இந்த இருவரின் நினைவாக சாமுண்டாச்சாரியேன் என்பவர் இந்த நடுகல் செய்துள்ளார்.

இராஜமகேந்திர சோழரின் இந்த நடுகல் கல்வெட்டு மிக சிறப்பு வாய்ந்தது ஆகும் கிருஷ்ணகிரி பகுதி இவரது ஆட்சியில் இருந்ததை இக்கல்வெட்டு உறுதி செய்கிறது, மேலும் கர்நாடக பகுதியில் நடந்த போர் ஒன்றில் இராஜமகேந்திர் சோழர் இறந்திருக்கலாம் என்ற கருத்து வலு அடைகிறது.



சைவ ஆகமங்கள்



மருத்துவர் மு.சுரேந்திரன்
நாளமில்லாச் சுரப்பியியல் நிபுணர்
வரலாற்று ஆர்வலர்

ஆகமங்கள் அடிப்படையில் கீழ்க்காணுமாறு வகைப் படுத்தப் பட்டுள்ளன.சைவ ஆகமங்களாக இருபத்தி எட்டும் ,வைணவ ஆகமங்களாக இரண்டும் ,சாக்த ஆகம மாக ஒன்றும் உள்ளன. இவற்றில் சைவ ஆகமங்களே “ஆகமங்கள் “ என்று அழைக்கப் படவேண்டும்.வைணவ ஆகமங்கள் “சம்ஹிதைகள்” என்றும்,சாக்த ஆகம பிரிவுகள்

“தந்திரங்கள்” என்றும் வழங்கப் படுகின்றன.

“ஆகம ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க !”

மாணிக்கவாசகர் இறைவனைப் போற்றியதற்கேற்ப

இறைவனே ஆகம வடிவில் தோன்றுகிறான் என்பதே சைவ சித்தாந்தம் சுட்டும் பொருள்.

பசு,பதி,பாசம் இவற்றிற்குடையான தொடர்பை முதலில் விளக்குவன ஆகமங்களே .

இந்தியத் துணைக்கண்டத்தில் மத்திய ஆசிய நாடோடிப் பழங்குடியினரான ஆரியர்கள் வருவதற்கு முன்பே இங்கே மூன்றாயிரம் ஆண்டுகளாக வளர்ந்து செழித்திருந்த நகர நாகரீக மக்களின் மெய்யியல் த்த்துவங்களின் அடிப்படையில் எழுந்தவையே ஆகமங்கள் .

.எனவே,இவை ஆரியரல்லாத மக்களின் மரபுவழி வந்தவை,வேதகால நாகரீகத்திற்கு முந்தியவை.பிற்காலத்தில் உபநிடதங்களிலும் ,பிராமணங்களிலுமே வைதீக மரபில் ஆகமங்களின் தாக்கம் தெரியத் தொடங்குகிறது.

வேள்வி அடிப்படையிலான வைதீக சமயத்தில் உருவ வழிபாடுகளோ , கோயில் வழிபாடுகளோ கிடையாது.பிற்காலத்தில் வைதீக மரபானது உருவ வழிபாட்டையும்,கோயில் வழிபாட்டையும் -ஆரியமல்லாத-திராவிட மரபிலிருந்து பெற்று வளர்ந்து வரும்போது அவற்றில் பல்வேறு மாற்றங்களும்,குறுக்கீடுகளையும் செய்து பொதுவானதாகத் தோற்றமளிக்கும் ஓர் சமய நெறிமுறையை உருவாக்க முயன்று ,அதில் பெருமளவு வெற்றியும் அடைந்துள்ளது.

வேதப்பிராமணர்களுக்கும்(ஸ்மார்த்தர்)கோயில்களுக்கும் எவ்வித தொடர்புமே இல்லை என்ற உண்மை வெகுமனித சமுதாயத்திற்குத் தெரியாமலேயே உள்ளது.

அது போன்றே ஆகமங்களுக்கும் வைதீக வேள்வி முறைகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை.ஆகமங்களில் எங்கும் வேள்வி பற்றிக் குறிப்பிடப் படவில்லை.

காலமாற்றத்தில் உருவான பல்வேறு சமயங்களுக்கும் தொகுக்கப்பட்ட ஆகமங்கள் ,அச்சமயங்களின் அடிப்படை நெறிமுறைகளாக மதிக்கப் படுகின்றன.அவ்வச்

சமயங்களில் காலந்தோறும் ஏற்படும் மாற்றங்களை

உள்வாங்கியே ஆகமங்கள் வளர்ந்து வந்துள்ளன.

ஆகமங்கள் அடிப்படையில் கீழ்க்காணுமாறு வகைப் படுத்தப் பட்டுள்ளன.சைவ ஆகமங்களாக இருபத்தி எட்டும் ,வைணவ ஆகமங்களாக இரண்டும் ,சாக்த ஆகம மாக ஒன்றும் உள்ளன. இவற்றில் சைவ ஆகமங்களே ‘‘ஆகமங்கள் ‘‘ என்று அழைக்கப் படவேண்டும்.வைணவ ஆகமங்கள் ‘‘சம்ஹிதைகள்’’ என்றும்,சாக்த ஆகம பிரிவுகள்

‘‘தந்திரங்கள்’’ என்றும் வழங்கப் படுகின்றன.

பரவலாக வழங்கப் படும் வழிபாடான பிள்ளையார் வழிபாட்டிற்கு ஆகமங்கள் இல்லை ,சில இடங்களில் சைவ ஆகம நெறிகள் கடைபிடிக்கப் படுகின்றன.முருகன் வழிபாட்டில் சாக்த ஆகமங்களான ‘‘தந்திரங்கள்’’ நடைமுறையில் உள்ளன.ஐயனார் மற்றும் கிராமதேவதைகளுக்கு ஆகம வழிபாடுகள் இல்லை.

இக் கட்டுரையில் நாம் விரிவாக பேசப்போவது

சைவ ஆகமங்கள் பற்றியே.

ஆகம்ம் என்பதன் பொருள்:

வேதங்களுக்கும் முற்பட்டதாகவே

சைவ வழிபாடு கருதப் படுவதால் ,அவ்வழிபாட்டின்

நெறிகளையும் நோக்கங்களையும் எடுத்தியம்பும்

ஆகமங்கள் வேதங்களுக்கும் முந்தியவையே.

பல்வேறு அறிஞர்கள் பலவாறான பொருளை ஆகமங்களுக்கு வழங்கியிருப்பினும் அவை எதுவும் பொருத்தமானதாகத் தோன்றவில்லை.ஆகமங்கள் திராவிட மரபு அல்லது தமிழ் மரபு சார்ந்தவை என்ற உண்மையை உணராத காரணத்தால் சமஸ்கிருத மொழியிலிருந்தே அதன் பொருளை அறிய முற்பட்டுள்ளனர்.தமிழ் வேர்ச்சொல் வழியாக யாரும் அதனை ஆராயவில்லை.

ஆகம்ம் என்பது "ஆகி வந்த இயம்ம் " என்ற தமிழ் வேர்ச்சொல்லடியாகப் பிறந்த வார்த்தையாகும் .இதன் பொருள் "வழிவழியாக கடைபிடிக்கப் பட்டு வரும்

நெறிமுறைகள்" என்பதே.

ஆகமங்களின் காலம்:

திருமூலர் தன்னுடைய திருமந்திரத்தில் ஒன்பது

ஆகமங்களை அடிப்படையாக கொண்டே திருமந்திரம் உருவானதாக குறிப்பிட்டுள்ளதால்

ஆகமங்கள் பொ.கா.ஐந்தாம் நூற்றாண்டுக்கு முந்தியவை என்பது அறியக்கிடைக்கும்.

"பெற்றநல் ஆகம்ம் காரணம் காமிகம்

உற்றநல் வீரம் உயர் சிந்தியம் வாதுளம்

மற்ற அவ் வியாமளம் ஆகும் காலோத்தரம்

துற்றநல் சுப்பிரம் சொல்லும் மகுடமே"...

மேலும் அவர் ஆகமங்கள் மொத்தம் இருபத்தெட்டு என்பதை ,

"அஞ்சனமேனி அரிவையோர் பாகத்தன்

அஞ்சோடு இருபத்து மூன்றுள ஆகம்ம்..."

என்று குறிப்பிடுகிறார்.

சைவ சமயம் சிந்துவெளி காலத்தில் பெருமளவு நிலைபெற்று இருந்தது என்பது சைவஆகமங்களின் காலகட்டத்தைச் மூன்றாயிரம் ஆண்டுகளுக்கு முன் கொண்டு செல்கின்றன.

வேதவிளக்கங்களான உபநிடதங்கள் ,கல்பசூத்திரங்கள் இவற்றில் ஆகம

விளக்கங்கள் இடம்பெறுவதால் ஆகமங்களின் காலம் பொ.கா.மு.ஐந்தாம் நூற்றாண்டுக்கு முன் செல்கிறது .வேதங்கள் மாற்றம் அடையாதவை,மாற்றக் கூடாதவை .ஆனால் வேதங்கள் போல் அல்லாது ஆகமங்கள் தொடர்ந்துமாற்றங்களை ஏற்று விரிவடைந்து வந்திருப்பதால் ,அவ்வக்காலங்களை

பிரதிபலிப்பதையும் ,அக்காலத்திற்கான புதுமைகளையும் தேவைகளையும் அவற்றில் காணமுடிகிறது.

சைவப்பெருவெளியில் ஆகமங்கள்:

சைவசமயத்தின் தோற்றம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது .அளவிட்டு உரைக்க முடியாதபடி மனிதகுலத்தின் பண்பாட்டு வளர்ச்சியோடு சேர்ந்து வளர்ந்து வந்தது .

சிவபெருமானாரின் அருவுருவ ரூபமான சாதாசிவ மூர்த்தம் ஆகமங்களின் த்த்துவரூபமாக கருதப் படுகிறது .த்த்புருஷம்,அகோரம்,சத்யோஜாதம்,வாம தேவம்,ஈசானம் என்ற ஐந்து சதாசிவ முகங்களிலிருந்து இருபத்தெட்டு ஆகமங்களும் சாஸ்த்திர்ரூபங்களாக வெளிவந்தன என்பது

சைவ சமய நம்பிக்கை.

இருபத்தெட்டு ஆகமங்களில் முதல் பத்து ஆகமங்களான காமிகம் முதல் சுப்ரபேதம் வரை சிவபேதாகமங்கள் எனப்படும் .இவை ,பிரணவசிவர் முதலான பத்து சிவர்களுக்கு உபதேசிக்கப்பட்டன. அனாதிருத்திர்ர் முதலான பதினெட்டு ருத்திர்ர் களுக்கும் உபதேசிக்கப்பட்ட விஜயம் முதல் வாதுளம் வரை பதினெட்டும் ருத்திரபேதாகமங்கள் எனப்படும்.

சைவ சமய வழிபாட்டில் ஆகமங்களின் இருப்பு முதன்மையானதாகும் .குறிப்பாக சிவலிங்கம் எனும் அருவுருவ வழிபாட்டில்

முக்கியமானதாகும்.சைவநெறியில் சிவன் முழுமுதற் கடவுளாக வழிபடப் படுகிறார்.அவரை உருவமாகவும்(சகள

ரூபம்), அருவமாகவும்(நிஷ்கள ரூபம்),அருவுருவமாகவும்(சகளநிஷ்கள ரூபம்) கொண்டு வழிபடுவது சைவ மரபு .இவற்றில் அருவுருவ ரூபமாகிய சிவலிங்கம் மூலவராக கொண்டுள்ள ஆலயங்களில் ஆகம விதிகளின்படியே கட்டுமானங்களும் பிரதிஷ்டையும்

வழிபாடுகளும் நடைபெறல் வேண்டும்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கல்ஹணர் எனும் காஷ்மீரத்துக் கவிஞரால் இயற்றப்பட்ட ராஜதரங்கிணி என்ற நூலில் குறிப்பிடப் படும் பஞ்சதிராவிட தேசங்களில் ஆகம வழிபாடு இருந்ததென்பது அறியக்கிடைக்கிறது.

தற்போது தென்னிந்தியாவிலும் ,காஷ்மீரத்திலும் மட்டுமே இன்று வரை ஆகமங்களும் பெருமளவில் சிவலிங்க வழிபாடும்

நிலைபெற்று உள்ளன,இப்பகுதிகளிலேயே சித்தாந்த சைவம் வழக்கிலிருப்பதும் உணரப் பாலது . வைதீக வழிவந்த வட இந்திய ருத்ர வழிபாடுகளில் ரூப வடிவங்களே உள்ளதும் ,ஆகம வழிமுறைகள் கூறுவதுபோல் அருவுருவ லிங்க வழிபாடு இல்லை .இதன் வழியாக

இவ்விரண்டின் ஆதிகால மூலங்கள் வெவ்வேறு பண்பாடுகளில் இருந்து வந்தவை என்பது அறியப் படும்.

பெரும்பாலான சைவத்தலங்கள் காரணம் மற்றும் காமிக ஆகம அடிப்படையிலேயே அமைந்தவை .சிதம்பரத்தில் மட்டும் மகுடாகம முறைப்படி நித்திய வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.குடைவரைக் கோயில்கள் பெரும்பான்மையானவை ஆகம விதிப்படி அமைக்கப் படவில்லை என்பதாலேயே தேவார மூவரால் பாடல் பெறவில்லை என்பது உணர்ந்தறியக் கூடும்.

மேலும்,ஆகமங்களின் படி அமையப் பெற்ற சைவத் திருத்தலங்களில் வைதீக முறையிலான வேள்விகளும் மந்திரங்களும் ,ருத்திரநாமாவளி ,அபஸ்தம்ப சூத்திரம் ,போதாயன சூத்திரம் இவற்றை ஓதுதல் என்பதும் ,ஸ்மார்த்த பிராமணர்கள் கொடிமரத்தை தாண்டி கருவறை செல்வதோ அல்லது மூலவர் சிவலிங்கத்தை தொட்டு பூசனைகள் செய்வதோ ஆகம்மங்களில் கடுமையான முறையில் கண்டிக்கப் பட்டுள்ளன.

ஆதிசைவ சிவாச்சாரியர்களுக்கு மட்டுமே அவ்வுரிமை உள்ளது .எனினும்,நடைமுறைகளில் அனைத்து கோயில்களிலிலும் இவை மீறப் படுகின்றன.

ஆகமத்தில் பாதங்கள்:

அனைத்து ஆகமங்களும் நான்கு பாதங்களைக் கொண்டுள்ளன.இவை ஒவ்வொன்றையும் தனித்தனியான இறை மார்க்கங்களாகவும் கொள்ளலாம்.

சரியா பாதம்: இறை வழிபாட்டின் ஒழுக்கநெறிகளையும் ,இறைவனுக்கும்(பதி),

அர்ப்பணிக்கப் படும் ஆன்மா(பசு) இவற்றைப் பற்றி

விளக்குவது .சுய ஒழுக்கமே இறைவனை அடையும்

வழி என்பதை வலியுறுத்துவதே இதன் நோக்கம்.

கிரியா பாதம்: ஆலய வழிபாட்டுச் சாதனங்கள்,

தீக்ஷை பெறுதல்,ஆலய அமைப்பு ,பிரதிஷ்டை பற்றிக் கூறுவது.வெகுஜன மக்களுக்கான எளிய வழிமுறைகளைக் கொண்டது இப் பாதம்.

யோக பாதம்:தியானம் பற்றி விளக்குவதும்,பதி பசு பாசம் இவற்றை யோகநிலையில் அணுகுவதும்

இதில் விளக்கப் படுகிறது.ஓகம் எனும் பழந்தமிழ் நெறியின் அடிப்படையிலானது யோக பாதம்.

ஞானபாதம் : பாதங்களில் முக்கியமானது இதுவே.சித்தாந்த சைவம் இதன் அடிப்படையிலேயே எழுகிறது.பதி பசு பாசம்

இவற்றிற்கிடையான தொடர்புகள் நன்கறிந்து உயிர்களின் ஆன்மா பதி எனும் இறைவனடி சேர்தல் இந்த ஞானபாதம் மூலம்

நிரூபணம் செய்யப் படுகிறது.

இப்போது நமக்கு கிடைத்துள்ள நிலையில்

கிரணாகம்ம் மற்றும் சுப்பிரபேதாகம் மட்டுமே நான்கு பாதங்களும் முழுமையாக கிடைத்துள்ளன.

வரலாற்றில் ஆகமங்கள்:

தமிழகத்தில் காலத்தால் முற்பட்டுக் கிடைக்கும் சிற்பங்கள் ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை,பாடல் பெற்ற தலங்களில் நாம் வழிபடக் காணும் சிவலிங்க வடிவங்கள்

சங்க காலத்திற்கும் முற்பட்டவை என்பதில் ஐயமில்லை .மேலும் பொ கா ஐந்தாம் நூற்றாண்டில் பெரும் மாடக்கோயில்கள் சோழ மன்னர் கோச்செங்கட் சோழனால் எடுக்கப் பட்டுள்ளன. தேவார மூவரில் சுந்தர்ருக்கு முன் வாழ்ந்த சிவனடியார்கள் பலர் வாழ்வில் கோயில்களும் அவற்றில் ஆகம வழியிலான நித்திய வழிபாடுகளும் நிகழ்ந்தமை உறுதியாகத் தெரிகிறது.களப்பிர அரசர்களின் கல்வெட்டுகளான பூலாங்குறிச்சிக் கல்வெட்டுகளும் தேவகுலம் என்றழைக்கப்பட்ட கோயில் வழிபாட்டிற்கான ஆவணமாகவே கிடைத்துள்ளதும் கருத்தில் கொள்ளத் தக்கது.

கலாரசிகரான இராஜசிம்மப் பல்லவர்

தாம் ஏற்ற விருதுப் பெயர்களில் "ஆகம ப்ரியன்"

என்பதும் ஒன்றாகும்.மாமல்லையில் பொ கா ஆறு மற்றும் ஏழாம் நூற்றாண்டுகளில் உருவான ஒருகல் தளிகள் அக்காலத்திற்கு முன்பு தமிழகத்தில் பல தலைமுறைகளாக வழக்கிலிருந்த கோயிற்கலை நெறிமுறைகளை நமக்கு இன்றும் எடுத்துக் கூறுகின்றன.உத்திரமேரூர் சுந்தர வரதப்

பெருமாள் கோயிலான பிரம்மிக்கத்தக்க அஷ்டாங்க விமானமும்,அக்கோயில் பிரகாரங்களும் ,அவ்வூரான உத்திரமேரூரும் மரீச்சி சம்ஹிதை எனும் வைணவ ஆகம அடிப்படையில் ,ஆகமங்களில் தேர்ந்த வல்லுநர்களால் எடுக்கப் பட்டது .அக்கால கட்டத்திலேயே பல ஆகமங்கள் அழிந்துபட்டன என்பதும் அக்கோயில் கல்வெட்டுகள் தரும் தகவல்கள் ஆகும்.

ஆகம ரூபமாய் விளங்கும் சதாசிவத் திருமேனி த்த்துவத்தை உள்வாங்கி அவ்வுருவின் பிரமாண்ட விமான வடிமாக எடுக்கப் பட்டது தஞ்சைப் பெரிய கோயில் ஸ்ரீதட்சிணமேரு விமானம் என்பது ஆகம்ம் அறிந்தோர் அறிவர்.

கோயிற்கலை நெறிமுறைகள்:

ஆகமங்களில் காமிகாகம்மும் ,காரணம்,சுப்பிரபேதம்,அஜிதம்

இவைகளில் கோயில் கட்டுமானத்திலும்,சிற்பக்கலையிலும் கற்க வேண்டிய நுணுக்கமான நெறிமுறைகள் உள்ளன.

வாஸ்து சாஸ்திரங்கள் பலவும் ஆகமநெறிகளையே தொழில்நுட்ப அடிப்படையில் பேசுகின்றன.

ஆலயங்களுக்கான நிலத்தேர்வு தொடங்கி பிம்ப பிரதிஷ்டை தொடர்ந்து நித்திய வழிபாடுகள் திருவிழாக்கள் வரை ஆகமங்கள் தெளிவுற விளக்குவன.

சுருக்கவுரை:

இன்னதென்று அறிய முடியாக் காலம் தொடங்கி இன்று வரை பல காலமாற்றங்களுக்கேற்ப மாறுதல்கள் பெற்று

இன்று வரை தொடர்பவை ஆகமங்கள்.வேதங்கள் போலன்றி மாற்றக்கூடாதவையல்ல ஆகமங்கள்,காலத்திற்கேற்ப மாற்றம் பெறுபவை.

எனவே,இன்று நடைமுறையில் உள்ள ஆகம முறைகள் பல்வேறு காலங்களில் பலவாறு மாற்றங்களுக்கு உட்பட்டே இன்று நம்மை வந்து அடைந்திருக்கின்றன.

மனிதன் அறவழி வாழவும் வீடுபேறு அடையவும்

அவரவர் நிலைகளுக்கு ஏற்றபடி பல வழிகளைக் காட்டுபவை ஆகமங்கள் . ஆகமங்கள் வைதீகம் சார்ந்தவை என்றும் வர்ணாசிரமத்தை வலியுறுத்துவன என்றும் பலரால் தவறாகப் எண்ணப் படுகின்றன.

தற்காலத்தில் திருமந்திரம் மற்றும் தேவாரப் பாடல்களில் பொருத்தமானவற்றைத் தேர்ந்தும்

ஏற்கெனவே வடமொழியாக்கமான ஆகம பத்ததிகளை தமிழாக்கம் செய்தும் "தமிழ் ஆகமங்கள்" என்ற பெயரில் ஓதப் படுகின்றன.

இவை மிக அண்மைக் காலத்திய நடைமுறை.



வேதாந்த கருத்துக்களுக்கு மாறாக உருவ வழிபாட்டையும் ஆலய வழிபாட்டையும் ,யோக ,ஞான மார்க்கத்தையும்

தெளிவுற வலியுறுத்தும் ஆகமங்கள் முழுக்க பாரதப் பரப்பில் வேதகாலத்திற்கு முன்பு வழி வழியாக வந்த நெறிமுறைகள் ஆகும் . ஆகவே,ஆகமங்கள்

"ஆகி வந்த இயமங்கள் ".



(c) LINGAM *in situ* IN TRENCH Ai.



விஜயாலயசோழீஸ்வரம்





தென்கொங்கு சதாசிவம்
பெருந்தச்சன்
உடுமலைப்பேட்டை

“இங்கு கட்டப்பட்ட இருந்த கோயில் மழையால் இடிந்து விட்டதாகவும் அதனை கிபி 850இல் விஜயாலய சோழன் புதுப்பித்தார் என்று எஸ் ஆர் பாலசுப்பிரமணியம் கூறுகின்றார்

முத்தரையர் பாணி என்பது பல்லவர்களின் பாண்டியன் கலைப்பாணியை ஒத்துள்ளதாக நீலகண்ட சாஸ்திரியார் கருதுகின்றார்.”

புதுக்கோட்டை

அஷ்ட பரிவார ஆலயம்

கற்றளிகள்

நார்த்தாமலை (தெலிங்கு குலகால புரம்)

நார்த்தாமலை விஜயாலய சோழீஸ்வரம்

தமிழக கலை வரலாற்றில் முத்தரையர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க ஒன்றாகும் பேரரசர் எனக் கருதப்படாத குறுநில மன்னர்கள் எனக் கூறப்படும் இந்த அரச மரபினர் கட்டடக் கலை மரபும் முக்கியத்துவம் வாய்ந்த கருத வேண்டும் இவர்கள் மரபு என்பது குடவரை தொழில்நுட்பம் கற்றளிகளின் தெழிழ்நுட்பம் இரண்டையும் கொண்ட தொடர்ச்சியான வரலாற்றைப் பெற்றுள்ளது முத்தரையர்களின் சமயம் சமயத்திற்கு ஆற்றிய பணி அவர்களுடைய ஈடுபாடு சைவ சமயமும் வைணவ சமயமும் வேறுபாடின்றி பின்பற்றிய சிறப்புகள் வெளிப்படுகின்றன இவர்களின் கட்டடக் கலை பாணியில் சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் குடைவரைகளும் கற்றளிகளும் எடுப்பித்துள்ளமை புலப்படுகின்றது முத்தரையரின் ஆட்சிப்பரப்பில் இடம் பெற்றுள்ள 18 குடைவரைகளின் கட்டிடக்கலைப் பாணியைத் குறித்து பல்வேறு கருத்துக்கள்ஆய்வாளர்களிடம் உள்ளன ஆயினும் திருமெய்யம் விஷ்ணு குடைவரை

நார்த்தாமலை பழியில் ஈஸ்வரம் மலையடிப்பட்டி வாகீஸ்வரர் குடைவரை

பூவாலைக்குடி பூஸ்பவனேஸ்வரர்

குடவரை களில்

இம் மன்னர்களின் நேரடி கல்வெட்டுகள் கல்வெட்டுச் சான்றுகள் கிடைக்கின்றன

நார்த்தமலை விஜயாலய சோழீஸ்வரம்

முத்தரையரின் கோயில் கட்டடக் கலை வரலாற்றை அறிய உதவும் சான்றுகளில்

முதன்மையாக கருதக்கூடிய கோயில் நார்த்தமலை விஜயாலய சோழீஸ்வரம் கட்டடக் கலை வரலாற்று ஆய்வாளர்களின் பார்வையில் இக்கோயிலின் வரலாறு பல்வேறு கருத்துக்களை முன்வைத்துள்ளார்கள்

இங்கு கட்டப்பட்ட இருந்த கோயில் மழையால் இடிந்து விட்டதாகவும் அதனை கிபி 850இல் விஜயாலய சோழன் புதுப்பித்தார் என்று எஸ் ஆர் பாலசுப்பிரமணியம் கூறுகின்றார்

முத்தரையர் பாணி என்பது பல்லவர்களின் பாண்டியன் கலைப்பாணியை ஒத்துள்ளதாக நீலகண்ட சாஸ்திரியார் கருதுகின்றார்

இங்கிருந்த கோயில்இப்பகுதியில் எடுக்கப்பட்ட கோயிலுக்கு முன் மாதிரியான விஜயாலய சோழனுக்கு பிறகு தான் விஜயாலய சோழீஸ்வரம் என்று அழைக்கப்பட்டிருக்க வேண்டும் என கே ஆர் சீனிவாசன் கருதுகின்றார் ஆயினும்அடிப்படையில் முத்தரையர் கோயில் அமைப்பினைக் கொண்டது எனக் கூறும் கருத்தை முழுமையாக யாரும் இதுவரை மறுக்கவில்லை இக்கோயில் அக்கால கலை பணியாகவும் முத்தரையரின் தொழில்நுட்பத்தில் அமைந்ததாகவும் கருதலாம் ஒவ்வொரு காலத்திலும் ஏற்படும் பேரழிவுகள் பல்வேறு வகையான கட்டுமானங்கள் அழிந்திருக்கக் கூடும்

கல்வெட்டுக்களில் நார்த்தமலை

துவாரபாலகர் கீழ் உள்ள கல்வெட்டு

ஸ்வஸ்திரி சாத்தம் பூ தியான இளங்கோ வதி அரையன் எடுப்பித்த கற்றளி மழை

இடிந்தழிய மல்லன் விதுமன் ஆயின தென்னவன் தமிழ திரையன் புதுக்கு

மழையின் காரணத்தால் தொடக்கத்தில்இருந்த கோயில் அழிந்துவிட்டதாகவும்

தமிழதிரையின் புதுப்பித்த தாக கல்வெட்டு கூறுகிறது

கல்வெட்டில் நார்த்தாமலை யின் பழம்பெயர்

கேரளாந்தக வளநாட்டு கோனாட்டு

அண்ணல்வாயில் கூற்றத்து தெலிங்கு குலகால புரம்

தெலிங்க குலகால புரமான குலோத்துங்க சோழப்பட்டனம்

#கட்டிடக்கலை

கருவறை

கருவறையானது வட்டவடிவ கட்டுமானம் ஆகும் மூலவரின் அறையைச் சுற்றிலும் சுற்று வழியுடன் கூடிய திருச்சுற்று வடிவமைப்புடன் இருப்பதால் இக்கோயில் கருவரை கட்டுமானம் தொழில்நுட்பம் சாந்தார வடிவமைப்பு உடையதாகும்

#அதிட்டானம் (தாங்குதளம்)

உபானம் ஜகதி குமுதம் கால்களுடன் கூடிய கண்டம் பட்டிகை என பாதபந்த அதிஷ்டானத்தில் அமைந்துள்ளது

#பித்தி (சுவர்)

சுவர் பகுதியானது 7ஆக பிரிக்கப் பட்டு நான்கு பாகங்கள் உள்ளடக்கியதாகவும் உள்ளிழுத்த பத்தியில் காற்றோட்டத்திற்காக மூன்று பக்கங்களிலும் துவாரங்கள் அமைக்கப்பட்டுள்ளது முன் இழுத்த பத்தியில் பிரம்மதூண்கள் அமைக்கப்பட்டுள்ளது

இக்கோயிலில் தேவகோஷ்டங்கள் காணப்படவில்லை பிரஸ்தாரவலபியில் பூத கணங்கள் குறும்புகளுடன் அமைக்கப்பட்டுள்ளது

இக்கோயிலின் கட்டுமானம் மற்ற கோயில்களில் அதிகம் காணப்படாத ஒன்று

#கபோதம்

கபோதத்தில் கோடிப்பாளை என்றழைக்கப்படும் கருக்கணி வேலைபாடுகளும் கபோத கூடுகளின் மையத்தில் யானை நந்தி மனித தலை சிம்மம் போன்ற குறுஞ்சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன

கபோதத்தின் மேல் யாளிவரி எழிலுடன் அமைக்கப்பட்டுள்ளது

#ஹாரம்

யாளி வரிகளுக்கு மேல் ஹாரத்தில் கர்ணக்கூடு சாலை பஞ்சர பகுதிகளில் நடனமகளிர் சில குறுஞ் சிற்பங்கள் அமைக்கப்பட்டள்ளது

#அனற்பிதம்

ஹாரத்தில் இருந்து சுற்றிலும் வலம் வருவதற்கு இடைவெளி விட்டு விமான கட்டுமான ஆரம்பமாகிறது இந்த இடைவெளிக்கு அனற்பிதம் என்று சிற்ப நூல்கள் கூறுகின்றன

#விமானம்

பிரஸ்தாரத்தில் சுற்றுச்சுவர் அமைந்திருப்பதால் மூன்றடிக்கு உயர்த்தி விமானம் அமைக்கப்பட்டுள்ளது முதல் தளஹாரத்தின் மேல் இரண்டாவது தளம் பூமிதேசம் என்றழைக்கப்படும்

இரண்டாவது தளம் வட்ட வடிவில் அமைக்கப்பட்டுள்ளது வலபியில் பூதகணம் கபோதம் யாளிவரி மேல் நான்கு திசைகளிலும் அமர்ந்த நிலையில் நந்தி சிற்பம் இடம் பெற்றுள்ளன

#கிரீவம் (வட்டம்)விருத்த வடிவமாகும்

வட்ட வடிவம் கொண்ட நான்கு திசைகளிலும் பெரு நாசிகளும் அல்ப நாசிகளும் அமைக்கப்பட்டுள்ளது இந்த விமானத்தின் கட்டமைப்பு வேசரம் எனசிற்ப நூல்கள் கூறுகின்றன உச்சியில் உள்ள ஸ்தூபி பிற்காலத்தில் அமைக்கப்பட்டுள்ளது

இந்த வகையான விமானம் வணிகர்களுக்கு உரியதன்று மானசாரம் கூறுகின்றது புதுக்கோட்டை மாவட்டத்தில் கிடைக்கும் அதிக கல்வெட்டுகள் வணிகர்கள் உடைய கல்வெட்டுகளே புதுக்கோட்டை மாவட்டத்தில் பல கோயில்கள் வணிகர்களின் பெயர் தாங்கி உள்ளது இக்கோயிலுக்கு எதிரே உள்ள விஷ்ணு குடவரை பதினெண் பூமி விண்ணகரம் என்று அழைக்கப்படுகிறது இது ஐநூற்றுவர்கள் வாழ்ந்த பதினெட்டு நகரங்களை குறிக்கும் சொல்லாகும் வயலோகம் சிவன் கோயில் ஆயிரம் ஈஸ்வரம் உடைய நாயனார் என்றும் திருவப்பூரில் உள்ள விஷ்ணு கோயில் நாற்பத்தெண்ணாயிரம் விண்ணகர எம்பெருமான் என்றழைக்கப்படுகிறது

இக்கோயில் அஷ்ட பரிவார ஆலயமாகும்

பரிவார ஆலய கட்டுமானம்

பாதபந்த அதிஷ்டானம்


வலபி எழுதகம் கபோதம் யாளிவரி ஏகதளத்துடன் அமைக்கப்பட்டுள்ளது சில ஆலயங்கள் விமானம் இல்லாமல் இருக்கிறது

சில கோயில்களில் துவாரபாலகர் சிலைகள் கருவறை முன் காணப்படும் இங்கே அர்த்த மண்டபத்தின் முகப்பில் காணப்படுகிறது

துவாரபாலகர் சிற்பங்கள் பல்லவர் கலை பாணி ஒத்துள்ளது.

செப்பேடுகள் வழி சோழர் வரலாறு - 4







மா.மாரிராஜன்
சோழர் வரலாற்று ஆய்வுசங்கம்
காரைக்கால்

திருச்சிக்கு அருகே உள்ள அன்பில் என்னும் ஊர். இவ்வூரில் உள்ள ஒரு விவாசாயி தனது வீட்டின் பராமரிப்பு பணியின்போது அடித்தளத்தைத் தோண்ட இச்செப்பேடு கிடைத்தது. அவ்வூரில் உள்ள லெட்சுமணன் செட்டியாரிடம் செப்பேட்டை அந்த விவசாயி கொடுத்தார். செட்டியார் அவர்கள் தமிழ்தாத்தா உ.வே. சாமிநாதஐயரிடம் கொடுத்தார். அவர் கல்வெட்டாய்வாளார் திரு.கோபிநாதராவ் அவர்களிடம் ஒப்படைத்தார்.

அன்பில் செப்பேடு..

சுந்தரச்சோழன்.

கி.பி. 961.

(இச்செப்பேடு சுந்தரச் சோழரின் 4 ஆம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்டது. அவர் 957 ல் ஆட்சிக்கு வந்திருக்கலாம் என்னும் ஆய்வாளர்களின் கணிப்பின்படி இச் செப்பேட்டின் காலாம்)

கி.பி. 961

திருச்சிக்கு அருகே உள்ள அன்பில் என்னும் ஊர். இவ்வூரில் உள்ள ஒரு விவாசாயி தனது வீட்டின் பராமரிப்பு பணியின்போது அடித்தளத்தைத் தோண்ட இச்செப்பேடு கிடைத்தது. அவ்வூரில் உள்ள லெட்சுமணன் செட்டியாரிடம் செப்பேட்டை அந்த விவசாயி கொடுத்தார். செட்டியார் அவர்கள் தமிழ்தாத்தா உ.வே. சாமிநாதஐயரிடம் கொடுத்தார். அவர் கல்வெட்டாய்வாளார் திரு.கோபிநாதராவ் அவர்களிடம் ஒப்படைத்தார்.

திரு. T.a. கோபிநாதராவ் அவர்கள் இச்செப்பேட்டு விபரங்களை Epigraphy indica vol 15 ,,ல் Page no 4 - 72 வரை பதிப்பித்தார்..

இரண்டாம் பராந்தகன் என்றழைக்கப்படும் சுந்தரச்சோழனின்

4 ஆம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்டது.

தனது அமைச்சரான அன்பில் என்னும் ஊரைச் சேர்ந்த அநிருத்த பிரம்மாதிதாசருக்கு 10 வேலி நிலத்தை கருணாகரமங்கலம் என்று பெயர் சூட்டி சுந்தரச்சோழன் கொடையாக வழங்கினார். இதற்கான ஆவனமே இச்செப்பேடு.

மொத்தம் 11 பட்டைகள் உள்ளன. பட்டைகளின் இருபக்கமும் எழுத்துக்கள் உள்ளன.

கோர்க்கப்பட்ட வளையத்தின் முகப்பு இலச்சினையில் சோழர் முத்திரை உள்ளது. அமர்ந்துள்ள புலியின் முன் இரட்டை கயல். படுக்கைவசமாய் வில். இரு விளக்குதாங்கிகள், இரு சாமரங்கள், ஒரு குடை உள்ளன. இலச்சினையின் விளிம்பில் சாசன சுலோகம் உள்ளது.

" ஸஸ்வத் விஸ்வம்பரா நேத்ரம் லஷ்மீஜய ஸரோருஹம் சாஸநம் ஸ்ரீமத் ராஜ கேஸரி வர்ம்மண "

'உலகிற்கு கண் போன்றதும் இலட்சுமியின் கையில் உள்ள வெற்றித் தாமரை போன்றதுமான இந்த சாசனம் ராஜகேசரி வர்ம்மனுடையது "

என்பது சாசன சுலோகத்தின் பொருளாகும்.

திருமால் மற்றும் பரமேஷ்வரனின் காப்பு செய்யுளுடன் துவங்குகிறது.

செய்யுள் 1- 11

திருமகளின் கணவனான விஷ்ணுவின் திருவடித்தாமரைகள் உங்களுக்கு செல்வத்தை வழங்கட்டும். பிறைச் சந்திரனை சடையில் தரித்த பரமேச்வரனின் தோள்களாகிய தண்டங்கள் உங்களுக்கு பெரும் செல்வத்தை வழங்கட்டும்.சிறந்த சோழர் குலம் இவ்வுலகை காப்பாற்றட்டும். சோழமரபின் மூலமாக திகழ்வன் சூரியன். தாமரைக் கண்ணனான பெருமாளின் நாபியிலிருந்து பிரம்மா தோன்றினார்.

பிரம்மாவிடமிருந்து மரீசி தோன்றினார். மரீசியிடமிருந்து கச்யபர் தோன்றினார். அவரிடமிருந்து அர்யமா என்னும் பெயருடைய சூரியன் தோன்றினார். சூரியனிடமிருத்தது சிபியின் பரம்பரை தோன்றியது. அந்தக்குலத்தில் உபசத் என்னும் மகாவீரன் பிறந்தான். உருத்திரசித், சந்திரசித், உசீநரன் .. அவனுக்கு சிபி பிறந்தான். அவன் தனது உடல் சதையை வெட்டி தராசில் இட்டு புறாவைக் காத்தான்.

செய்யுள் 12 - 15

அந்தக்குலத்தில் சோழன் என்னும் மன்னன் பிறந்தான். அதன்பிறகு இம்மன்னனின் பெயரையே மற்றவர்களும் பெற்றனர். அவர்கள் ஆண்ட நாடும் சோழநாடு என்று பெயர் பெற்றது. இக்குலத்தில் சென்னி, கிள்ளி, முதலானவர்களைத் தொடர்ந்து கரிகாலன் ஆண்டான். இவர்கள் ஆண்டு சுவர்க்கம் சென்றபிறகு, எல்லா ஊர்களிலும் சிவனுக்கு கோவில் எழுப்பிய கோச்செங்கணான் பிறந்தார். இவனிடமிருந்து நல்லடிக்கோன் என்னும் மன்னன் பிறந்தான். அதன் பிறகு வளபன் தோன்றினான். அதன்பிறகு இந்திரனுக்கு சமமான ஸ்ரீகண்டன் தோன்றினான்.

செய்யுள் 16 - 20

இவனுக்கு அடுத்து வெற்றிகளின் உறைவிடமாகத் திகழ்ந்த விஜயாலயன் தோன்றினான். வீரமும் வலிமையும் உடைய விஜயாலனிடமிருந்து இராசகேசரி (ஆதித்தன்) தோன்றினான். அரசர்களில் நாரயணன் போன்றவன் அவன். காவிரியின் இரு கரைகளிலும் சிவனுக்கு கற்றளியாக பெருங்கோவில்கள் எடுத்தான். அவனிடமிருந்து வீரசோழன் (பராந்தகன்) தோன்றினான்.

வீரத்தின் எல்லையாகத் திகழ்ந்த அவனது புகழ் எல்லாத் திசைகளிலும் பரவியது.

செய்யுள் 21 - 24

அவன் வேரூன்றி நின்ற மன்னர்களை விளையாட்டாய் பிடுங்கி எறிந்தான். மதுரையை கைப்பற்றினான். பழுவேட்டரையர் என்னும் கேரள மன்னனின் மகளை மணந்தான். அவர்களுக்கு அரிஞ்சயன் பிறந்தான். அவன் வைதும்பக்குலத்தில் தோன்றிய கல்யாணியை மணந்தான்.

செய்யுள் 25 - 30

அந்த வைதும்ப மகளிடத்தில் தன் பாட்டனின்(பராந்தகன்) குணத்தையும் பெயரையும் கொண்ட அரசன் தோன்றினான். மன்மதனையொத்த அழகுடைய அவன் சுந்தரன் என அழைக்கப்பட்டான்.

உதயசூரியனின் அழகைப் பெற்றிருந்தான். அவனது நாடு பல்வேறு மரங்கள் சூழ வளமுடன் இருந்தது. எல்லைக் காடுகளில் அவனது போர் யானைகள் எதிரிகளற்று தத்தம் பெண் யானைகளோடு விளையாடின. அவனது ஆட்சியில் எந்த ஒரு மனிதனும் நோயினால் இறந்தது இல்லை.அனது படைகள் எழுப்பும் புழுதி வானுலகை அடையும் அளவிற்குப் பெரிது.

செய்யுள் 31 - 46

அவனுடைய அமைச்சராக அனிருத்தர் என்னும் பெயருடையவர் இருந்தார்.

அந்தணர்களில் சிறந்தவர். குணக்குவியல்களின் இருப்பிடமாகத் திகழ்ந்தார். ஸ்ரீரங்கநாதர் கோவிலில் பங்குனி உற்சவத்தில் பெரும் அமுது படைப்பார்.

அவருடைய தந்தை நாரயணன் என்னும் பெயருடையவர். அவருடைய பாட்டனார் பெயரும் அனிருத்தர் என்பதாகும். அவரும் ஸ்ரீரங்கநாதருக்கு பெரும் அமுது படைப்பார். அவருடைய கொள்ளுபாட்டனாரும் வேண்டி நிற்கும் அனைவருக்கும் தானிய மழை பொழிந்தவர். இவருக்கு அரசன் அன்பால் ஒரு கிராமத்தை அளித்தான். பத்துவேலி நிலத்தை கருணாகரமங்கலம் என்று பெயர் சூட்டி நிபந்தனைகளுடன் பெண் யானையால் எல்லை குறிக்கப்பட்டு வழங்கினான். பிரமாதிராசன் என்னும் பட்டம் வழங்கி சிறப்பித்தான். பல்லவமுத்திராதிராசன் என்போன் ஆணத்தியாக செயல்பட்டான். மாதவப்பட்டன் என்பவன் இந்த செப்பேட்டை யாத்தான்.

இத்துடன் வடமொழிப்பகுதி நிறைவுற்று, அடுத்தத் தமிழ் பகுதியில் நிலத்தின் எல்லைகள், பிடி சூழ்தல் ஆகியவை கூறப்பட்டுள்ளன.

இச்செப்பேட்டில் நமக்குக் கிடைக்கும் சில அவசிய வரலாற்று செய்திகள்..

சங்க இலக்கியங்களில் காணப்படும், இளஞ்சேட்சென்னி, நெடுமுடிக்கிள்ளி, குளமுற்றத்து துஞ்சிய கிள்ளி வளவன், போன்றவர்களின் பின்னொட்டு பெயர்கள் இச்செப்பேட்டில் காணப்படுகிறது.

இச்செப்பேட்டில் மட்டும் வரும் ஸ்ரீகண்டன் என்ற பெயருடைய சோழ மன்னனை தெலுங்குச் சோழர் என்று சிலர் கூறுவர். இது முற்றிலும் தவறு. வல்லம் தலபுராணத்தில் பழயாறையை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவர் ஸ்ரீகண்டச்சோழன்.

(அன்பில் செப்பேடு. ச.கிருஷ்ணமூர்த்தி)


முற்காலச் சோழர்களில் கோச்செங்கணானுக்குப் பிறகு தகவல் இல்லை என்று ஒரு கருத்து பொதுவாக நிலவினாலும், இச்செப்பேட்டில் கோச்செங்கணான் மகனாக நல்லடிக்கோன் என்பவர் இருக்கிறார்.

விஜயாலயனின் மகனான முதலாம் ஆதித்தன், காவிரியின் இரு கரைகளிலும் சிவனுக்கு பல பெருங்கோவில்கள் எடுத்த செய்தி சிறப்பான ஒன்று.

பழுவேட்டரையரின் மகளை பராந்தகன் மணந்தான். அவர்களுக்கு பிறந்தவனே அரிஞ்சயன்.

(பழுவேட்டரையரின் மகளும், பராந்தகனின் தேவியும், அரிஞ்சயரின் தாய். இவரின் பெயர் அருமொழிநங்கை.
திருச்சென்னம்பூண்டிக்கல்வெட்டு. S.i.i. vol 8 no 520.)

Anbil Plates of Sundara Chola : the 4th year.



F. W. THOMAS SCALE THREE-FIFTHS W. GRIGGS & SONS, LTD. PHOTO-LITH.

வைதும்பர் மகளான கல்யாணியை அரிஞ்சயன் மணந்தான். இவர்களுக்கு பிறந்தவரே சுந்தரச் சோழன்.சுந்தச் சோழரின் அமைச்சர் அனிருத்தரின் சிறப்பு. அவரது கொடையளிக்கும் குணம். அவரது முன்னோர்களின் பெருமையும் சிறப்பித்து கூறப்பட்டுள்ளது..

பொன்பரப்பின பெருமாள் ஜிநாலயமான நாற்பத்தெண்ணாயிரப் பெரும்பள்ளி





முனைவர். ம. செல்வபாண்டியன்
சமண பௌத்தவியல் ஆய்வாளர்,
பெரம்பலூர்.

சோழர்களின் குலதெய்வமான நிசும்பசூதனியின் அழகிய சிற்பம், பத்துக்கும் மேற்பட்ட நடுகற்கள், நவகண்டச் சிற்பங்கள், வாணகோவரையர்களின், எலிச்சின்னம் பொறிக்கப்பட்ட கல்வெட்டு, பெரும் வணிக மையம், மகதை மண்டலத்தின் தலைநகர் எனப் பல்வேறு சிறப்புகளைப் பெற்ற ஊர் ஆறகழூராகும்.

தமிழகத்தில் உள்ள அமர்ந்த நிலையிலான புத்தர் சிற்பங்களில் மிக உயரமான சிற்பம் (204 செ.மீ. / ஏழு அடி), வாணகோவரையர்களின் கட்டடக்கலைக்கு எடுத்துக் காட்டான காமநாதேஸ்வரர் திருக்கோவில், சோழர்களின் குலதெய்வமான நிசும்பசூதனியின் அழகிய சிற்பம், பத்துக்கும் மேற்பட்ட நடுகற்கள், நவகண்டச் சிற்பங்கள், வாணகோவரையர்களின், எலிச்சின்னம் பொறிக்கப்பட்ட கல்வெட்டு, பெரும் வணிக மையம், மகதை மண்டலத்தின் தலைநகர் எனப் பல்வேறு சிறப்புகளைப் பெற்ற ஊர் ஆறகழூராகும்.

ஆறகழூர் அமைவிடம்

சேலம் மாவட்டத்திலுள்ள ஆத்தூர் வட்டத்தில் தலைவாசல் அருகே ஆறகழூர் அமைந்துள்ளது. ஆறு அகழிகளால் சூழப்பட்ட ஊர் ஆறுகழூர் ஆயிற்று.

11–ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் பொன்பரப்பின வாண கோவரையன் எனும் குறுநில மன்னர், மகதை மண்டலம் எனும் மகதை நாட்டை ஆறகழூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்து வந்தார். சேலம் மாவட்டத்தின் கீழ்ப்பகுதி, தென்னார்க்காடு மாவட்டத்தின் மேற்பகுதி, பெரம்பலூர் மாவட்டத்தின் ஒரு பகுதி ஆகியவற்றை உள்ளடக்கியதாக மகதை நாடு அமைந்திருந்தது.

சோழ மன்னர் மூன்றாம் குலோத்துங்கனின் கீழ் குறுநில மன்னராகவும், அவரது படைத்தளபதியாகவும் வாணகோவரையர் விளங்கினர். இவரது கல்வெட்டுகள், ஆறகழூர், கூகையூர், திருவண்ணாமலை, சிதம்பரம் மற்றும் பழைய தென்னாற்காடு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளின் கிடைக்கின்றன.

இரண்டாம் குலோத்துங்கர், இரண்டாம் இராஜாதிராஜர் காலத்தில் மகதை நாடாளும் செம்பை நாயகர்களாக அறியப்பட்ட இவ் வாணகோவரையர்கள் மூன்றாம் குலோத்துங்கர், காலத்தில் சிற்றரசர் நிலையிலிருந்து விடுபட்டுப் பெரும் புகழெய்தி அவர் இறுதிக் காலத்தும் மூன்றாம் இராஜராஜர் காலத்தும் சோழப் பேரரசையே அசைத்துப் பார்க்கும் ஆற்றல் பெற்று விட்டமையை வரலாறு உணர்த்துகிறது என அறிஞர் இரா. கலைக்கோவன் குறிப்பிடுகிறார். (இரா. கலைக்கோவன் 2005 : 176)

ஆறகழூரில் உள்ள கோவில்கள்

1. அருள்மிகு திருக்காமேஸ்வரமுடைய நாயனார் திருக்கோவில்
2. அருள்மிகு தாயினும் நல்ல சோழீஸ்வரர் திருக்கோவில்
3. அருள்மிகு கரிவரதராஜப் பெருமாள் திருக்கோவில்

4. அருள்மிகு அம்பாயித்தம்மன் திருக்கோவில்
5. அருள்மிகு நிசும்பசூதனி திருக்கோவில்
6. புத்தர் திருக்கோவில் (அமர்ந்த நிலை) / தியாகனூர்
7. புத்தர் தியான மண்டபம் (அமர்ந்த நிலை) / தியாகனூர்

திருக்காமேஸ்வரமுடைய நாயனார் திருக்கோவிலின் பொருள் வைப்பறையில் தீர்த்தங்கரர் அம்பிகா யட்சி ஆகியோரின் செப்புத் திருமேனிகளும் ஒரு படிகக்கல்லால் ஆன தீர்த்தங்கரர் படிமமும் வைக்கப்பட்டுள்ளன. ஆறகழூரில் சமணப்பள்ளி இருந்ததற்கான எந்தத் தடயமும் இல்லாத சூழலில் சமணத் திருவுருவங்கள் இருப்பது வியப்பாகவே இருந்தது.

சேலம் மாவட்ட சமணத் தடயங்கள்

அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி தனது ‘சமணமும் தமிழும்’ நூலில் ‘சமணத் திருப்பதிகள்’ எனும் தலைப்பில் தமிழ்நாட்டில் உள்ள தடயங்களை எடுத்துரைக்கிறார். சேலம் மாவட்டத்தில் உள்ளவற்றைப் பட்டியலிடும்போது, ‘சேலம் : சேலம் மாவட்டத்தின் தலைநகரம். இவ்வூர் ஆற்றங்கரையில் ஒரு சமணத் திருவுருவம் கிடக்கிறது. இன்னொரு சமணத் திருவுருவம், கலெக்டர் வீட்டுக்கும் சர்ச்சுக்கும் இடையே உள்ள வழியில் இருக்கிறது’ (J.A.S.B. XIV, Page 76) எனக் குறிப்பிடுகிறார். (மயிலை சீனி. வேங்கடசாமி, சமணமும் தமிழும், 2010: 140–141) .

ஆற்றங்கரையில் கிடந்த சமணத்திருவுருவம் தற்போது எங்கிருக்கிறது எனத் தெரியவில்லை. கலெக்டர் வீட்டுக்கும் சர்ச்சுக்கும் இடையே உள்ள வழியில் இருந்த இன்னொரு சமணத் திருவுருவம் தலை சிதைந்த புத்தர் சிற்பமாக இருக்கக் கூடும். அச்சிற்பத்தில் மீசையுள்ள வேறொரு தலையைப் பொருத்தி ‘தலைவெட்டி முனியப்பர்’ என மக்கள் வழிபாடு வருகின்றனர். சேலத்தில் உள்ள அருங்காட்சியகத்தில் உள்ள தீர்த்தங்கரர் சிற்பம் திருச்செங்கோடு அருகே உள்ள பருத்திப் பள்ளி எனும் ஊரிலிருந்து எடுத்து வரப்பட்டதாகும் .

எனினும் ஆறகழூரில் உள்ள இரு தீர்த்தங்கரர்கள் மற்றும் அம்பிகா யட்சியின் திருமேனிகள் குறித்து அறிஞர் மயிலையார் தன் நூலில் குறிப்பிடவில்லை.

ஆறகழூரில் சமணத் தடயங்கள்

அ. சமணக் கல்வெட்டு

2014ம் ஆண்டில் ஆறகழூர் பொன். வெங்கடேசன் அவர்களால் 2 அடி மட்டுமே வெளித் தெரிந்த ஒரு வணிகக் கல்வெட்டு தாங்கிய கல் கண்டுபிடிக்கப்பட்டது. இதனை சித்தர மேழி வணிகக் கல்வெட்டு என கல்வெட்டு ஆய்வாளர் பேராசிரியர் இராஜகோபால் அடையாளப்படுத்தியுள்ளார்.

இக்கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ள சின்னங்கள்:

பூதேவி (அ) அம்பிகா யட்சியின் உருவம், தனது இருகரங்களிலும் வளமையைக் குறிக்கும் நெற்கதிர்களுடன் இலங்குகிறது. தாமரை இதழ்களில் அமர்ந்திருக்கும் இவ்வுருவின் இருபுறமும் கவரிச்சின்னங்கள் வலப்புறம் வட்ட வடிவக் கண்ணாடியும் இடப்புறம் முக்குடையும் பொறிக்கப்பட்டுள்ளன. கீழே முக்காலியின் மேல் வைக்கப்பட்டுள்ள பூரண கும்பம் உள்ளது. அதில் அம்புக்குறி போன்ற வடிவின் பின்னணியில் உள்ள நின்ற நிலையிலான தீர்த்தங்கரர் உருவிற்கு வலப்புறம் உரலும், அதன் கீழ் கலப்பையும் காட்டப்பட்டுள்ளன. இடப்புறத்தே குறடும் மேழியும் காட்டப்பட்டுள்ளன. இருபுறத்திலும் நீண்ட குத்து விளக்குகள் பொறிக்கப்பட்டுள்ளன.

இந்த வணிகக் கல்வெட்டின் புதைத்த பகுதியில் எழுத்துக்கள் இருக்கலாம் என்று எண்ணிய ஆறகழூர் பொன். வெங்கடேசன், 14.09.2015 அன்று, 'ஆறகழூர் மகதை மண்டலம்' நண்பர்கள் வே. சந்தோஷ், ஆர்.வேலு, ர. அரவிந்த் ஆகியோர் ஊர்ப்பொதுமக்கள் அடங்கிய குழுவினர், கல்வெட்டு ஆய்வாளர் விழுப்புரம் வீரராகவன், மங்கை வீரராகவன் ஆகியோர் முன்னிலையில் கல்வெட்டைத் முழுமையாகத் தோண்டி எடுத்தனர் (கல்வெட்டு பொறிக்கப்பட்ட கல்லின் உயரம்–8 அடி, அகலம்– 1 1/2 அடி கனம் – 1/2 அடி).

அக்கல்லில் 8 வரிகள் பொறிக்கப்பட்டிருந்தன. அவற்றைக் கல்வெட்டு ஆய்வாளர் விழுப்புரம் வீரராகவன் மற்றும் மங்கை வீரராகவன் ஆகியோர் படித்துப் படியெடுத்தனர். சென்னை கல்வெட்டு ஆய்வாளர்கள் பேராசிரியர் ராஜகோபால் சுப்பையா, மற்றும் பேராசிரியர் ஆ. பத்மாவதி ஆகியோர் படித்து உறுதி செய்தனர்.

கல்வெட்டு

இடம் : ஆறகழூர் கோட்டை கரையைத் தாண்டி அகழியின் அருகில் உள்ளது.

செய்தி : நாற்பத்தெண்ணாயிரவர் எனும் வணிகக் குழுவினரால் கல்வெட்டுள்ள இடத்தில் சமணப் பள்ளி (ஜிநாலயம்) ஏற்படுத்தப்பட்டது. அப்பள்ளி, மன்னன் பெயரிலும் வணிகர் பெயரிலும் இணைந்து **'பொன்பரப்பின பெருமாள் ஜிநாலயமான'** என அப்பள்ளி சுட்டப்படுகின்றது. ஜிநாலயம் என்பது பெரும் சமணப்பள்ளியைக் குறிக்கும். இக்கல்வெட்டு, ஆறகழூரை ஆண்ட பொன்பரப்பின மகதைப் பெருமாள் என்பவரால் பொறிக்கப்பட்டுள்ளது. சமணப்பள்ளி (ஜிநாலயம்) நாற்பத்தெண்ணாயிரவர் எனும் வணிகக் குழுவினரால் இச்சமணப்பள்ளி

கட்டப்பட்டுப் பராமரிக்கப்பட்டது என்பதை அறிய முடிகிறது.

காலம் : 12–ம் நூற்றாண்டு

1. ஸ்வஸ்தி ஸ்ரீ இந்த
2. ஸ்ரீ கோயில் பொன்
3. பரப்பின பெருமாள்
4. ஜிநாலயமான
5. நாற்பத்தெண்ணா
6. யிரப் பெரும்பள்ளி
7. நாற்பத்தெண்ணா
8. யிரவர் ரக்ஷை

இக்கல்வெட்டின் மூலமாக ஆறகழூரில் சமணப் பெரும்பள்ளி இருந்ததையும், அப்பள்ளியின் அழிவிற்குப் பிறகு அங்கிருந்த தீர்த்தங்கரர்கள் மற்றும் யட்சியின் திருமேனிகள் அருள்மிகு காமநாதேஸ்வரர் திருக்கோவிலுக்குக் கொண்டு வரப்பட்டதையும் அறிய முடிகிறது. இக்கல்வெட்டு இருக்கும் இடம் 12–ம் நூற்றாண்டில் இருந்த ‘மகதேசன் பெருவழி காஞ்சிபுரம்’ எனும் பெருவழிப்பாதையில் அமைந்துள்ளது. இதைக் குறித்து நின்ற ‘மகதேசன் பெருவழி காஞ்சிபுரம்’ எனும் மைல்கல் ஆறகழூர் அருள்மிகு காமநாதேஸ்வரர் திருக்கோயிலில் வைக்கப்பட்டிருந்தது. தற்போது அக்கல் சேலம் அரசு அருங்காட்சியகத்தில் உள்ளது.

கல்வெட்டு கண்டறியப்பட்ட இடத்துக்கு அருகே 6 அடி உயரமுள்ள புத்தரைப் போன்ற தோற்றமுடைய இரண்டு சிற்பங்கள் காணப்பட்டன என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். அச்சிற்பங்களின் தலைக்குமேல் ஒரு கூடையைக் கவிழ்த்தது போன்று தோற்றம் இருந்ததாகவும் அதை தோட்டி சிலை, தோட்டிச்சி சிலை எனவும் ஊர் மக்கள் அழைத்து வந்ததாகவும் ஊர்ப்பெரியவர்கள் கூறுகின்றனர். இவை அழிந்த சமணப் பெரும்பள்ளியில் இருந்த தீர்த்தங்கரர் சிற்பங்களாகலாம். கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்னர் அச்சிற்பங்கள் காணாமல் போய்விட்டதாக தெரிவித்தனர்.

ஆ. சமணத் திருவுருவங்கள்

i. அம்பிகாதேவி யட்சி (செப்புத்திருமேனி)

உயரம் : 45 செ.மீ, அகலம்: 21 செ.மீ

அருள்மிகு திருக்காமேஸ்வரமுடைய நாயனார் திருக்கோவில், ஆறகழூர்

காலம் : கி.பி. 8–9ம் நூற்றாண்டு

தாமரை மலர் மீது திரிபங்க நிலையில் (உடல் வளைத்து நிற்கும் படிமங்களின் நிலை) இருக்கும் அம்மை தன் வலது கரத்தில் மாங்கனிக் கொத்துக்களைப் பிடித்துள்ளார். இடது புறத்தில் நிற்கும் அம்மையின் ஒரு மகன் அவர் தரும் மாங்கனியைத் தன் வலது கரத்தை நீட்டிப் பெற முயல்கிறார். வலது புறத்தில் சிங்கத்தில் அமர்ந்துள்ள அய்யனாரைப் போல தோற்றமளிக்கும் மற்றொரு மகன் வலது கையில் அங்குசத்தை / சவுக்கைத்

தாங்கியுள்ளார். தலைக்கு மேலே இவரது தீர்த்தங்கரான நேமிநாதர் உருவம் முக்குடையுடன் அழகுற அமைக்கப்பட்டுள்ளது. அம்மை நிலை கொண்டிருக்கும் தாமரை மலர் செவ்வக வடிவிலான பீடத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

'பீடத்தின் வடிவமைப்பு பாணி மைசூர் பகுதியின் பண்புகளைக் கொண்டுள்ளன.. ..கிளிவ்லேண்ட் கலை அருங்காட்சியகம் மற்றும் அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள லாஸ் ஏஞ்சல்ஸ் நகர அருங்காட்சியகம் ஆகிய இடங்களிலுள்ள இரு செப்புத் திருமேனிகளோடு இத்திருமேனியின் அமைப்பு மற்றும் வேலைத்திறன் ஆகியவற்றின் ஒத்த தன்மைகளை ஒப்பிட்டுப் பார்க்க முடியும். வெளிநாடுகளில் உள்ள அம்பிகா யட்சியின் திருமேனிகள் மாமரத்துடன் உருவாக்கப்பட்டிருக்க ஆறகழூர் அம்பிகா யட்சியின் திருமேனியில் மாமரம் காட்டப்படவில்லை' (Dr. R. Kannan & K. LakshmiNarayanan, 2002:66).

ii. தீர்த்தங்கரர் (செப்புத் திருமேனி)

உயரம் : 56 செ.மீ, அகலம் : 17 செ.மீ.

அருள்மிகு திருக்காமேஸ்வரமுடைய நாயனார் திருக்கோவில் ஆறகழூர்

காலம் : கி..பி. 9–ம் நூற்றாண்டு

இத்தீர்த்தங்கரரின் செப்புத் திருமேனி காயோத்சர்க நிலையில் (நின்ற நிலை) அமைக்கப்பட்டுள்ளது. பாதங்கள் சம அளவினதாகவும் கைகள் உடலைத் தொடாமல் நேராகத் தொங்கிய நிலையிலும் இருத்தல், 'காயோத் சர்க நிலை' எனப்படும். நீள் செவிகளும் தலையில் சுருள்முடியும் காணப்படுகின்றன. தாமரை இதழ்களின் மீது நின்றுள்ள இத்திருமேனி பதினெட்டுப்பட்டை கொண்ட பீடத்தில் இருத்தப்பட்டுள்ளது.

'பீடத்தில் ஐரோப்பிய மரபிலான தாவு நிலையிலான சிங்கங்கள் (முன்கால் தூக்கி பின்கால் எழுந்து நிற்கும் நிலையுடைய சிங்கங்கள்) அழகுற வடிக்கப்பட்டுள்ளன. இவை ஐரோப்பிய மரபினை (கலைப்பாணி) நினைவுப்படுத்துகிறது. விரல்களின் இடுக்குகளும், இமைகளும் தலையிலுள்ள சுருள் முடிகளும், இத்திருமேனி தங்க முலாம் பூசப்பட்டிருந்ததைத் தெரிவிக்கின்றன' என (Dr.R. Kannan, K. Lakshminarayanan, 2002:66).

iii. தீர்த்தங்கரர் (வெள்ளைக்கல் படிமம்)

உயரம் : 42 செ.மீ, அகலம் : 35 செ.மீ

அருள்மிகு திருக்காமேஸ்வரமுடைய நாயனார் திருக்கோயில், ஆறகழூர்

காலம் : கி.பி. 13–14–ம் நூற்றாண்டு

இந்த தீர்த்தங்கரர் திருமேனி படிகக்கல்லால் செய்யப்பட்டதாகும். (Quartzite stone) ஆற்றுப்படுகைகளில் கிடைக்கும் இக்கல் ‘வெங்கச்சங்கல்’, சிக்கி முக்கிக்கல் எனவும் அழைக்கப்படுகிறது. நிறமற்ற அல்லது ஒளிக்கசிவு தரும் வெண்ணிறக் கல்லான இது பல நூற்றாண்டுகளுக்குப் பின் செம்பழுப்பு நிறமாக மாறிப் போயுள்ளது. இப்படிமத்தின் கழுத்துப் பகுதி உடைந்து, பின்னர் ஒட்ட வைக்கப்பட்டுள்ளது. தாமரை இதழ்களின் மீது பத்மாசனத்தில் உள்ள இவரது கைகள் தியான முத்திரையுடன் இலங்குகின்றன. தலை சுருள் முடியைக் கொண்டுள்ளது. நாசிப் பகுதியும் கைவிரல்களும் சிதைந்துள்ளன.

திருக்காமேஸ்வரமுடைய நாயனாரின் கருவறை அர்த்த மண்டபம் அருகே வைக்கப்பட்டு இத் தீர்த்தங்கரர் வழிபடப்பட்டு வந்தார் (Dr.R. Kannan, K. Lakshminarayanan, 2002:66).

தற்போது இம்மூன்று சமணத் திருமேனிகளும் கோவிலின் பொருள் பாதுகாப்பு அறையில் பிற செப்புத் திருமேனிகளோடு வைக்கப்பட்டுள்ளன.

நாற்பத்தெண்ணாயிரவர், பதினெண் விஷையத்து நாட்டு வாணிக நகரத்தார்கள், மலை மண்டலத்துத் தேசி (நானாதேசி திசை ஆயிரத்து ஐநூற்றுவர்) ஆகியோர் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்த வணிகக் குழுவினராவர். இவர்கள் பல்வேறு கோவில்களை புதிதாக எழுப்பியதையும், பழங்கோவில்களின் பராமரிப்பு செலவிற்காக கொடைகள் அளித்து வந்ததையும் கல்வெட்டுகளின் வாயிலாக அறிய வருகிறோம்.

வெண்பாவூர், வரதராஜப் பெருமாள் திருக்கோவில் வாயிலில் உள்ள பலகைக்கல் கல்வெட்டுச் செய்தியின் (கி.பி. 12–ம் நூற்றாண்டு/சோழர் காலம்) அடிப்படையில், அவ்வூரில் உள்ள ‘தாயிலும் நல்ல பெருமாள் விண்ணகர் என்றழைக்கப்படும் பெருமாள் கோயிலைச் சித்திர மேழி மலை மண்டலத் தேசிகள் எடுப்பித்ததாக கொள்ளலாம்’ என முனைவர் மு. நளினி குறிப்பிடுகிறார். (மு. நளினி, 1998 : 21)

திருமாந்துறை கல்யாண ஜோதீஸ்வரர் திருக்கோயிலில் உள்ள கல்வெட்டுகள், (பேராசிரியர் டாக்டர் இல.தியாகராஜன் அவர்களால் கண்டறியப்பட்டு படிக்கப்பட்ட புதிய கல்வெட்டு). அவ்வூரில் கட்டப் பெற்றுள்ள உம்பர் நாயகர் கோயில் பூசைக்கும், திருப்பணிக்கும் வெம்பாரில் (வெண்பாவூர்) உள்ள பதினெண் விஷையத்து நாட்டு வாணிக நகரத்தார்கள் தொகை கொடுத்தது பற்றிய செய்தி காணப்படுகிறது. (டாக்டர் இல. தியாகராஜன், 2004 : 58 – 59).

12–ம் நூற்றாண்டில் ஒரே கால கட்டத்தில் சைவம், வைணவம், பௌத்தம், சமணம் ஆகிய மதங்கள் ஆறகழூரில் சிறப்பாக இருந்ததை அறிய முடிகிறது என ஆறகழூர் பொன். வெங்கடேசன் குறிப்பிடுகிறார். (க.ஆ. 30.10.2015, ஆறகழூர் பொன். வெங்கடேசன், 53 ஆறகழூர்).

மகதை மண்டலத்தின் தலைநகராகவும் பெரும் வணிக மையமாகவும் விளங்கிய ஆறகழூரில் நாற்பத்தெண்ணாயிரவர் எனும் வணிகக் குழுவினரால் உருவாக்கப்பட்டு பராமரிக்கப்பட்ட சமணப்பெரும்பள்ளி அக்காலத்தில் பெரும் புகழுடன் விளங்கியிருக்க வேண்டும். சோழப் பேரரசர்களுக்கு இணையாகத் தன் பெயரில் அமைந்த அப்பள்ளியை பொன்பரப்பின வாணகோவரையர் போற்றிப்புரந்திருக்க வேண்டும். இன்று அப்பெரும்பள்ளியின் பகுதிகள் எதுவுமே எஞ்சியிருக்கவில்லை. நல்வாய்ப்பாக சிதிலமேதுமின்றி மண்ணுக்குள் மறைந்திருந்த கல்வெட்டின் உதவி கொண்டு பல நூறாண்டுகள் கழிந்த பின்னரும் பெரும் வரலாறு வெளிப்பட்டுள்ளது.

துணை நூல்கள்

1.சமணமும் தமிழும், மயிலை. சீனி. வேங்கடசாமி, ஸ்ரீசெண்பகா பதிப்பகம், சென்னை–17, 2010.

2. பெண் தெய்வ வழிபாடு, மு. நளினி, இரா. கலைக்கோவன், டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், திருச்சிராப்பள்ளி–17, 2005.

3. வெண்பாவூர் அருள்மிகு சொர்ணாம்பிகை உடனுறை சொர்ணபுரீஸ்வரர் திருக்கோவில் வரலாறு, டாக்டர் இல.தியாகராஜன், அ/மி. சொர்ணபுரீஸ்வரர் திருக்கோவில் கும்பாபிஷேக வெளியீடு, வெண்பாவூர், 2004.

4 Iconography of the Jain image in the districts of Tamilnadu, Dr. R. Kannan etal, The commissioner of Archeology and Museums, Government Museums, Chennai-8, 2002/

5 வெண்பாவூர்க்கல்வெட்டு, மு. நளினி, வரலாறு டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், திருச்சிராப்பள்ளி–17, 1998.

6 தினமணி நாளிதழ் (சேலம் பதிப்பு), நாள்.15.09.2015.

7 திரு. ஆறகழூர் பொன். வெங்கடேசன் அவர்களுடனான நேர்காணல், நாள். 30.10.2015.

ஆழ்வார் குறிச்சி யானைகுத்திபட்டான் நடுகல்





"சிவத்தமிழ்ச் செல்வர்"

பி.திருச்சிற்றம்பலம் M.Sc.,M.A.,DIAE.,DCT.,

திருவாவடுதுறை ஆதீனப்பேராசிரியர்,

சென்னை - 69

"பட்டான் என்றால் இறந்தான் என்று பொருள்படும். அதாவது யானை குத்தி பட்டான் என்றால் யானை தாக்கியதில், அவ்வீரன் உயிரிழந்து இறந்தான் என்று பொருள்படும். அவன் சார்பாக வைக்கப்படும் நடுகற்களுக்கு, யானைக்குத்தி பட்டான் என்று பெயரிடப்படும்."

நடுகல் வழிபாடு:

சங்க காலத்தில், போரில் வீரமரணம் அடையும் வீரர்கள் அல்லது ஊருக்காக மரணமடையும் வீரர்களுக்கு, அவர்கள் நினைவை, வீரத்தை போற்றும் வகையில் நடுகல் எடுத்து வழிபடுவர். இது பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் அகநானூறு புறநானூறு ஐங்குறுநூறு உள்ளிட்ட நூல்களில் காணப்படுகின்றன.

“நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்

பெயரும் படும் எழுதி அதர்தொறும்

பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்”

என்று நடுகல் எடுத்து வழிபட்டதை அகநானூறில் பாலை நோய்பாடியார் குறிப்பிடுகிறார்.

நடுகல் போரில் வீரமரணம் அடைந்தவர்களுக்கு மட்டுமில்லாது கொடிய விலங்குகளிடமிருந்து தம் ஊரையும் மக்களையும் காக்கும் பொருட்டு விலங்குகளோடு எதிர்த்து சண்டையிட்டு வீரமரணம் அடைந்தோருக்கும் நடுகல் எடுத்துள்ளனர். அவர்களின் உயிர்த்தியாகத்தை போற்றி வழிபடவும் செய்துள்ளனர். இவ்வகை நடுகற்களை யானைக் குத்திப்பட்டான், புலிக்குத்தி பட்டான், பன்றிகுத்தி பட்டான், காளைகுத்தி பட்டான் , மான்குத்தி பட்டான் கல் என வகைப்படுத்துவர்..

யானை குத்தி பட்டான் நடுகல் :

பட்டான் என்றால் இறந்தான் என்று பொருள்படும். அதாவது யானை குத்தி பட்டான் என்றால் யானை தாக்கியதில், அவ்வீரன் உயிரிழந்து இறந்தான் என்று பொருள்படும். அவன் சார்பாக வைக்கப்படும் நடுகற்களுக்கு, யானைக்குத்தி பட்டான் என்று பெயரிடப்படும்.

தமிழகத்தில் இதுவரை ஒரு சில யானை குத்திப்பட்டான் நடுகற்கள் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மலைப்பகுதிகளில் இருந்து ஊருக்குள் புகும் யானையைத் தடுத்து அவ்வூரில் உள்ள பயிர்கள், கால்நடைச் செல்வங்கள் மற்றும் மனித உயிர்களைக் காப்பதற்காகப் பண்டைய காலத்தில் வீரர்கள் நியமிக்கப்பட்டு இருந்தனர். யானையுடன் நடக்கும் போரில் வீரமரணம் அடையும் வீரனின் நினைவாகவும் வீரத்தின் அடையாளமாகவும் எடுக்கப்படும் நடுகற்கள் யானை குத்திப்பட்டான் நடுகற்கள் என அழைக்கப்படுகின்றன.

ஆழ்வார்குறிச்சி யானைகுத்தி பட்டான் நடுகல்:


தென்காசி மாவட்டம் ஆழ்வார்குறிச்சியில் இருந்து சிவசைலம் செல்லும் சாலையில் ஸ்ரீ பரமகல்யாணி கல்லூரியை அடுத்து வலப்புறம் சாலை ஓரத்திலேயே யானைகுத்திபட்டான் நடுகல் ஒன்று காணப்படுகிறது.

இந்நடுகல்லில், யானை ஒன்று வலது காலைத்தூக்கி வீரன் ஒருவனை மிதிக்க முற்படுவது போலவும், அவனது வலது கையில் வாளைத் தூக்கி பிடித்தவாறும் இடக்கையை இடுப்பில் ஊன்றியவாறும் காட்டப்பட்டுள்ளது. வீரனின் சிகையும் வாளின் நுனியும் சேதமாகியுள்ளது. இவ்வூர் மேற்குத் தொடர்ச்சி மலையினை ஒட்டிய கிராமப் பகுதி என்பதால், காட்டிலிருந்து ஊருக்குள் வந்த யானை, மக்களுக்குத் துன்பம் விளைவிக்கும் போது,

அவற்றை அடக்குவதற்காக சென்ற இவ்வீரன் யானை தாக்கி இறந்திருக்கக் கூடும். அல்லது இப்பகுதியில் குறுநில மன்னர்கள் இடையே ஏற்பட்ட போரில், யானை தாக்கியதால் வீரன் உயிரிழந்திருக்கக் கூடும். இதில் முதலில் கூறிய காரணமே மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். ஏனெனில் ஆழ்வார்குறிச்சி ஒட்டிய மலையடிவார கிராமங்களில் இன்றளவும் யானைகள் நுழைந்து பயிர்களை சேதப்படுத்தியும் மனிதர்களை தாக்கவும் முற்படுகின்றன.

மிகவும் அரிதான இவ்வகை யானைக்குத்தி பட்டான் நடுகற்கள் தமிழகத்தின் தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி மயிலாடும்பாறை அடுத்த தங்கமாள்புரம் , கோவை கிணத்துக்கடவு அடுத்த கல்லாபுரம் , கிருஷ்ணகிரி உள்ளிட்ட இடங்களுக்கு அடுத்து இப்பகுதியிலேயே காணப்படுகிறது.

இந்நடுகல்லின் காலம் 15 அல்லது 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாக இருக்கலாம்.







காலம் கரைக்காத சோழக்கறக்கள்





கோமகன்
கங்கை கொண்ட சோழபுர
மேம்பாட்டுக் கழகம்,
கங்கை கொண்ட சோழபுரம்.

“கொள்ளிடத்தின் தென்கரைப் பகுதி இயற்கையிலேயே ஆற்றுப்பாசனமாக அமைந்து விட்டது. அதன் வடகரை அவ்வாறாக அமையாத இயற்கை புவிமேற்பரப்பைப் பெற்றிருக்கிறது. இதைக் கவனத்தில் கொண்டு புவியீர்ப்புவிசையிலான பாசனக்கட்டமைப்பை நிறுவி கல்லணைக்கு கீழே வடகரை முழுக்க பேரேரிகள் மூலம் நீர் ஆதாரங்களை தோற்றுவித்தனர்.”

சோழர் காலத்தில் தமிழர் வேளாண்மை விரிவாக்கம் கண்டதோடு புதியப்பாய்ச்சலைக் தொட்டது. ஆற்றுப்பாசனத்தை விரிவாக்கி அது இல்லா இடங்களில் பேரேரிகளை உருவாக்கி ஏரிப் பாசனத்தைக் கட்டமைத்தனர். தமிழகத்தில் பல பேரேரிகள் சோழர்களால் வெட்டப்பட்டது. நெற்களஞ்சியமான காவேரிப் பாசனப்படுகையின் பல கிளை ஆறுகளும் பெரும் பாசன வாய்க்கால்கள் அவர்கள் காலத்தில் ஏற்படுத்தப்பட்டனவே கொள்ளிடத்தில் அணைகட்டியதோடு அதன் தென்கரையைக் கரிகாலன் பலப்படுத்தியதால் கடலின் கழிமுகத்துவாரம் வரை அது கரிகாலக்கரை என வழங்கப்பெற்றது.

கொள்ளிடத்தின் தென்கரைப் பகுதி இயற்கையிலேயே ஆற்றுப்பாசனமாக அமைந்து விட்டது. அதன் வடகரை அவ்வாறாக அமையாத இயற்கை புவிமேற்பரப்பைப் பெற்றிருக்கிறது. இதைக் கவனத்தில் கொண்டு புவியீர்ப்புவிசையிலான பாசனக்கட்டமைப்பை நிறுவி கல்லணைக்கு கீழே வடகரை முழுக்க பேரேரிகள் மூலம் நீர் ஆதாரங்களை தோற்றுவித்தனர்.

அரியலூர் மாவட்ட கண்டிராதித்தம் ஊரில் சோழப்பேரரசி செம்பியன்மாதேவிப் பெயரில் வெட்டப்பட்ட பேரேரியில் கொள்ளிட ஆற்று நீர் முதன் முதலில் உட்புகுந்து நிரப்பி அதிலிருந்து பெருகும் மிகுநீர் வடிவாய்க்கால் வழியாக அடுத்துள்ள ஏரிகளுக்கு செல்கிறது. மேலுள்ள ஏரியின் வடிவாய்க்கால் கீழுள்ள ஏரியின் வரத்து வாய்க்காலாகிறது.

ஒவ்வொருப் பேரேரியும் ஐநூறு ஏக்கர் பரப்பிற்கு குறையாதவை, பராந்தகச்சோழன் பெயரில் காமரசவல்லியில் வெட்டப்பட்ட நரதுங்கப்பேரேரி மிகப்பேரிய ஏரியாகும். பராந்தகப்பேரேரி, சுத்தமல்லிப்பேரேரி மனதானப்பேரேரி ராஜவிச்சாதிரப்பேரேரி, கோவத்தட்டைப்பேரேரி பழியஞ்சியப்பேரேரி போன்றப்பேரேரிகள் அடுத்து அடுத்து நிரம்பி இராசேந்திரச்சோழன் இந்திய வடபுலத்து கங்கையின் வெற்றியின் நினைவாக தீர்ந்துாணாக வெட்டிய சோழகங்கம் எனும் ஏரியை அடைகிறது. இதன் மிகுநீர் வளவன்பேரேரி, பாண்டியகுலாசனிபேரேரி வழியே இறுதியாக வீராணம் ஏரியை அடைகிறது.

இந்தப்பேரேரிகள் கோடியக்கரை பறவைகளின் வலசைத்தடத்தில் அமைந்துள்ளது. இந்த பேரேரிகள் தன் பழையநிலையை எட்டினால் இதில் தேங்கும் நீரால் வீராணத்தின் வழியே சென்னைக்கு ஆண்டு முழுமைக்கும் தடையற்ற குடிநீரை வழங்க இயலும்.

மேலிருக்கும் ஏரியின் வடிவாய்க்கால் கீழிருக்கும் ஏரியின் நீர் வரத்து வாய்க்காலாகி நீர் ஆதாரத்தைப் பெருக்கும் வரமாக இருந்தாலும் வண்டலைச்சுமந்து வந்து ஏரியை தூர்த்து கொள்ளளவை குறைக்கும் சாபமாகவும் அமைந்துவிடுகிறது. இது இயற்கையின் வினையாடல் சோழர்கள் நீர்மேலாண்மை நுட்பத்தினால் இதை வியக்கத்தக்க வகையில் கையாண்டனர்.

தமிழர் நீர்மேலாண்மையில் ஏரியின் கீழ்கரையை பிறைவடிவில் அமைத்தனர். இவ் வடிவமைப்பு நீர்நிலையியலில் தோன்றும் நீரழுத்த உந்துவிசையைத் தாங்கும் திறங்கொண்டவை. இக்கரையில் நீர்வெளியேரும் கண்வாய் (Regulator) மிகுநீர் வழிந்தோடும் கலிங்கு (Surplus weir) போன்ற அமைப்புகள் ஆங்கிலேயர் காலத்தில் கரையை வெட்டி கட்டப்பட்டு அதில் கதவுகள் பொருத்தப்பட்டன. ஆனால் இவை சோழர்காலத்தில் கரையை வெட்டி பலகீனப்படுத்தாமல் அதைத் துளைத்து உருவாக்கப்பட்டன. கண்வாய் அமைப்பு கம்மாய் என வழங்கப்பட்டது. நீர் உட்புகும் பகுதி கண்ணாகவும் வெளியேறும் பாகம் வாயாகவும் அமையப்பெற்றது.


இருக்கட்டும் இதிலென்ன சிறப்பு. சாபத்தை அதன் வழியே கைக்கொண்டது தான் வியப்பு. நீர்வரத்து வாய்க்கால் சுமந்துவரும் (Sediment transportation) வண்டல் ஏரிக் கிடைமட்டத்தில் அடுக்கடுக்காய்ப் படிந்து கோடையில் இறுகி ஏரியை பாழாக்கி ஆக்கிரமிப்புக்கு வழி வகுக்கிறது. அப்படியாகாமல் நீரில் குழைந்து கிடக்கும் வண்டலை அதன் தொடக்க நிலையிலேயே அப்படியே ஏரியிலிருந்து வெளியெற்றுவது நுட்பமான கம்மாய் அமைப்பு சோழர்பாணி நீர்மேலாண்மை ஆகும். இந்த அமைப்பு செயல்பாட்டிலிருந்தால் பலப்பேரேரிகள் தூர்ந்து போயிருக்காது தூர்வாரும் அறப்பணி அரசியல்வாதிகளுக்கு வாய்த்திருக்காது.

கம்மாயில் ஏரியின் கிடைமட்டத்தில் சதுரவடிவிவான வண்டல் (சேறு) தொட்டி Sediment trap) அமைக்கப்பட்டு கரையைத்துளைத்து கட்டப்பட்ட சாளவத்தின் வழியாக (Silt Ejector) வாயோடு இணைக்கப்படுகிறது. வண்டல் தொட்டிக்கு மேல் குறந்தபட்ச நீர்த்தேக்க மட்டத்தில் நீர் வெளியேறும் தூம்பு வடிவமைந்து அதன் வழியே வெளியேறும் நீர் சாளவத்தில் திருகிக்கொண்டு (Vertex flow) விழுந்து வண்டலை உறிஞ்சிக்கொண்டு வாய்வழியே வாய்க்காவில் வெளியேறுகிறது. இதனால் ஏரிக்கு வந்தடையும் சந்தனக் குழம்பு போன்ற வண்டல் கண்வாய் வழியே உறிஞ்சப்பட்டு பாசனவாய்க்காலில் பாய்கின்றது. பாசனநீர் இந்த செழுமையான வண்டலை வயலில் சேர்த்து வளப்படுத்துகிறது. வாய்க்காலில் படியும் வண்டல் கோடைகாலத்தில் குடிமராமத்து முறையில் அகற்றப்படுகிறது. பேரேரிகளை அமைத்ததோடு அவற்றைக் வளர்த்தெடுத்தனர். காக்கும் நுட்பங்களையும் சோழர்கள்

இந்த அமைப்பு ஓரிடத்திலும் மட்டும் சிதைந்து கைவிடப்பட்ட நிலையில் உள்ளது. கங்கைகொண்டசோழபுரத்தில் அமைந்த சோழகங்கம் எனும் பொன்னேரியில் இராசேந்திரசோழன் அமைத்த கம்மாய் மிகுந்தப் போராட்டத்தினூடாக காப்பாற்றி வைத்துள்ளோம். இதுபோன்ற இன்னொன்று ஈழத்தில் உள்ளது. தமிழக அரசு இதை இன்னும் தொல்லியல் சின்னமாக அறிவிக்கவில்லை. இவ்வகைத் தொல்லெச்சங்கள் நான் நம் சமூகத்தை அடையாளம் காட்டும்.



இந்த மாத புதிய தொல்லியல் கண்டுபிடிப்புகள்



Potsherd with Chola period inscription found

TIMES NEWS NETWORK

Chennai: A red potsherd with a Chola period Tamil inscription from the 10th century CE has been found on the banks of the Thenpennai river in Villupuram district.

As it was broken, only a part of the name inscribed, which read 'ithan' could be deciphered. It has three Tamil letters and archaeologists believe it may have read 'saathan' or 'kiramavithan' which was used to refer to the leader of a village or a person of importance, he said.

Archaeologist C Immanuel said that he along with history professor D Ramesh from the Arignar Anna govt arts college had gone to the river bed and found the red potsherd, in Thalavanoor village in the district.

Immanuel said that though potsherds with inscriptions had been found in many parts of the stat, they had usually been in Tamil brahmi or 'vattezhuthu' but this was one of the first potsherds containing Tamil inscription pertaining to the Chola period. Senior archaeologist S Rajagopal, had confirmed that this potsherd contained inscriptions from the Chola era. "On a paleographic basis we may date it to the 11th-12th century, which is the Chola period," he said. "Ithan is the suffix of a male name. Medieval Tamil letters have not been found on pottery to the best of my knowledge, and this may be one of the first that it has been discovered," he added.

RARE FIND: The potsherd found near Thenpennai river in Villupuram



Archaeologists find megalithic burials on Jawadhu Hills

Rare discovery of over 100 megalithic burials in Tiruvannamalai's Jawadhu Hills prompts further archaeological exploration

Officials of the Tamil Nadu Archaeology Department during their inspection atop Jawadhu Hills in Tiruvannamalai. The team also found neolithic tools such as small hand axes and pottery.

The Hindu Bureau
TIRUVANNAMALAI

Tamil Nadu State Archaeology Department officials stumbled upon over 100 megalithic burials in Pattarakadu reserve forest on Jawadhu Hills in Tiruvannamalai a few days ago.

Archaeologists said that it was the first time they conducted a spatial survey on the hills following information received from forest officials about large-shaped granite structures vandalised by trespassers.

The archaeology team found a large number of megalithic burials and neolithic tools, including small hand axes. The burial sites were found in remotely inhabited tribal villages, namely Keel Cheppili and Mel Cheppili near Jamunamarathur.

Archaeologists said that it was the first time they conducted a spatial survey on the hills following information on large-shaped granite structures

Each village has around 20 families, who are mostly migrants from the plains. "Earlier, we never explored the hills due to less habitation sites. However, the findings of megalithic burials gave us an opportunity for further research in the area. The findings indicate that there should have been some native inhabitants on the hills many centuries ago," J. Ranjith, archaeological officer, Tiruvannamalai, told *The Hindu*.

Most of the megalithic burials were menhirs.

Each burial site, on an average, was 7.5 metres in diameter and 1.5 metres in height. Most burials, which are made of huge granite stones, are located in the south-west and north-east direction. Similar types of megalithic burials without remains were also found in Mallachandram (Krishnagiri) and Coimbatore region.

The team also found evidence for spatial surveys during British times as bench markings on some of the burials in English and Tamil were noticed.

The discovery has strengthened the resolve to conduct a full-fledged excavation at the hills.



தினமணி

மதுரை பதிப்பு

சனிக்கிழமை 9 மார்ச் 2024

களத்தூரில் கிடைத்த பழைமையான திருமால், வைஷ்ணவி சிற்பங்கள்

ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே களத்தூரில் கண்டறியப்பட்ட பழைமையான திருமால், வைஷ்ணவி, லிங்கம், நந்தி சிற்பங்கள், சிதறிக் கிடக்கும் செங்கற்கள், சிவப்பு பானை ஓடுகள், இரும்புத் தாதுக்கள், சுடுமண் ஓடுகள் உள்ளிட்டவை.

ஸ்ரீவில்லிபுத்தூர், மார்ச் 8: ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே உள்ள அம்மாபட்டி ஊராட்சிக்குள்பட்ட களத்தூர் அர்ச்சனா ஆற்றங்கரையில் 1,200 ஆண்டுகள் பழைமையான திருமால், வைஷ்ணவி, லிங்கம், நந்தி, காளி சிற்பங்கள் கண்டறியப்பட்டன.

களத்தூர் அர்ச்சனா ஆற்றங்கரையில் பழைமையான திருமால் சிற்பம் இருப்பதாகக் கிடைத்த தகவலின் பேரில், ராமநாதபுரம் தொல்லியல் ஆய்வுத் துறைத் தலைவர் வே.ராஜகுரு, நூர்சாகிபுரம் சிவகுமார் ஆகியோர் ஆய்வு செய்து, முற்காலப் பாண்டியர் காலத்தைச் சேர்ந்த சைவ, வைணவ தெய்வங்களின் சிற்பங்கள், இரும்புத் துகள்கள், சிகப்பு ஓடுகள் ஆகியவற்றைக் கண்டறிந்தனர்.

இதுகுறித்து வே.ராஜகுரு கூறியதாவது:

திருமால் பீடத்தின் மீது அமர்ந்த நிலையில், நான்கு கைகளுடன், கர்த்தரி முகமுத்திரையில், பின்னிரு கைகளில் சங்கு, சக்கரம் ஏந்தியும், முன்னிரு கைகளை தொடையில் வைத்து கிரீட மகுடத்துடனும் காட்சியளிக்கிறார். முகம் தேய்ந்த நிலையில் உள்ளது. திருமால் இடது காலை மடக்கி, வலது காலைத் தொங்கவிட்டு சுகாசனத்தில் அமர்ந்த நிலையில் உள்ளார். வலது மார்பில் ஸ்ரீவத்ஸமும், கிரீட மகுடத்தின் பின்பக்கம் சிரச் சக்கரமும் உள்ள இந்தச் சிற்பம் 109 செ.மீ உயரம் உடையது.

இந்தச் சிற்பத்தின் அருகில் பலகைக் கல்லில் திருமாலின் பெண் சக்தியான வைஷ்ணவியின் புடைப்புச் சிற்பம் உள்ளது. இந்தச் சிற்பம் பின்னிரு கைகளில் சங்கு, சக்கரம் ஏந்தி, முன்னிரு கைகளை தொடையில் வைத்த நிலையில் உள்ளது. இந்தச் சிற்பமும் சேதமடைந்த நிலையில் உள்ளது.

இதன் வடக்கில் நந்தியும், ஆவுடை இல்லாத லிங்கமும், 2 அடி உயரத்தில் எட்டுக்கை காளி சிற்பமும் உள்ளன.

திருமால் கையிலுள்ள பிரயோக சக்கர அமைப்பை வைத்துப் பார்க்கும் போது, இந்தச் சிற்பம் கி.பி.9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதலாம். அந்தக் காலக்கட்டத்தில் இந்தப் பகுதியில் சிவன், திருமால், காளி கோயில்கள் இருந்ததை அறிய முடிகிறது.

அருகிலுள்ள மேட்டில் பெரிய கருங்கற்கள் உள்ளன. இவை இரும்புக் காலத்தைச் சேர்ந்த கல்வட்டம், கல்திட்டையின் கற்களாக இருக்கலாம். மேலும், நுண்கற்காலக் கருவி, செங்கற்கள், சிவப்பு பானை ஓடுகள், இரும்புத் தாதுக்கள், இரும்புக் கசடுகள், சுடுமண் ஓடுகள் போன்றவையும் அங்கு சிதறிக் கிடந்தன.

ஒரு செங்கலின் அளவு 33 செ.மீ. நீளமும், 16.5 செ.மீ. அகலமும், 7 செ.மீ., உயரமும் உள்ளது. இவற்றை வைத்துப் பார்க்கும் போது இந்தப் பகுதிகளில் 2,000 ஆண்டுகளுக்கு முன்பே இரும்பு உருக்கு உலையும், மக்கள் குடியிருப்பும் இருந்துள்ளதை அறிய முடிகிறது.

எனவே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பகுதியை பாதுகாக்கப்பட்ட தொல்லியல் இடமாக அறிவித்து, தமிழக அரசு பாதுகாக்க வேண்டும் என்றார் அவர்.

ஆற்றுப்படையின் இம்மாத நிகழ்வுகள்

விழுந்தார். இவருடைய அலறல் சத்தம் கேட்டு அருகிலிருந்தவர்கள் விரைந்து வந்து கிணற்றில் விழுந்த சுரேஷை நீரில் குதித்து வெளியே எடுத்தனர். ஆனால் அவர் ஏற்கனவே மூச்சு திணறி இறந்து

தினகரன்
மார்ச் 19, 2024 செவ்வாய்க்கிழமை

திருவண்ணாமலை அருகே கொளக்கரவாடி கிராமத்தில்

1000 ஆண்டுகள் பழமை வாய்ந்த சோழர்கால கல்வெட்டு கண்டுபிடிப்பு

திருவண்ணாமலை மார்ச் 19: திருவண்ணாமலை அடுத்த நாயுடுமங்கலம் அருகில் உள்ள கொளக்கரவாடி கிராமத்தில் உள்ள பாறை ஒன்றில் கல்வெட்டு இருப்பதாக கிடைத்த தகவலின் பேரில், கல்வெட்டு ஆய்வாளர், ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் விஜயன் மற்றும் மேல் படூர் அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் அருணாச்சலம் உள்ளிட்டோர் நேரில் சென்று ஆய்வு நடத்தினர். பின்னர், அந்த கல்வெட்டைப் படி எடுத்து ஆய்வு செய்யப்பட்டது. இது குறித்து கல்வெட்டு ஆய்வாளர் விஜயன் மற்றும் கல்வெட்டு ஆய்வாளர் திருச்சி வே.பார்த்திபன் ஆகியோர் தெரிவித்ததாவது:



நாயுடுமங்கலம் அருகில் உள்ள கொளக்கரவாடி கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டை பார்வையிடும் ஆய்வாளர்.

கொளக்கரவாடி கிராமத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டு ராஜேந்திர சோழனின் மூன்றாம் மகனாகிய வீரராஜேந்திரன் காலத்தைச் சேர்ந்தது. திருமகள் அருளுடன் செங்கோல் ஏந்திய என்று தொடங்கும் சோழர்களது மெய்க்கீர்த்தி போலவே இக்கல்வெட்டும் எழுதப்பட்டிருக்கிறது. சோழ ஆட்சிப் பிரிவின் ஒரு அதிகாரியான ஜெயங்கொண்ட சோழ விழுப்பரையன் என்பவரால் இக்கல்வெட்டு செதுக்கப்பட்டுள்ளது. சோழநாட்டு மன்னன் வீரராஜேந்திரன் என்பவர், மேலை சாளுக்கிய அரசரான ஆகவமல்லனை கூடல் சங்கமம் என்ற இடத்தில் நடந்த பெரும்போரில் வென்றவர்.

மேலும், அப்போரில் ஆகவமல்லனை புறமுதுகிட்டு ஓடச் செய்ததோடு, அவரது படையின் ஆயுதங்களையும், விலை உயர்ந்த பொருட்களையும், மேலும் தேர் உள்ளிட்ட வாகனங்களையும் வீரராஜேந்திரன் கைப்பற்றினார் என்று இக்கல்வெட்டு புகழ்கிறது. ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து பெண்ணை நதிக்கு வடக்கில் உள்ள, வாணகோவரையர்களின் ஆட்சிப் பகுதியில் அமைந்தது குளம்பற்பாடி கிராமம். இந்த ஊரை பங்கள நாட்டில் இருந்த பதியூர் என்ற இடத்தின் அதிகாரியாக விளங்கிய ஜெயங்கொண்ட சோழ விழுப்பரையன் என்பவர் தானம் அளித்ததற்காக இக்கல்வெட்டினை செதுக்கியுள்ளார்.

இந்த கல்வெட்டானது, வீரராஜேந்திரன் ஆட்சியேற்ற ஆறாவது ஆண்டில், அதாவது கி.பி. 1063 ல் பொறிக்கப்பட்டுள்ளது. மேலும், இதில் இடம்பெறும் குளம்பற்பாடி என்ற இடமானது கொளக்கரைவாடி என திரிந்து விளங்குகிறது.

இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

Remains of 10th century Chola-era temple found in Trichy

Deepak.Karthik
@timesgroup.com

Trichy: Remains of a Shiva temple, claimed to be from the 10th century Chola-era, were found in Kumbakudi village near Trichy city. A Shivalingam was recovered from the remains. While the temple is in ruins, villagers cleared the space around the remains to celebrate Shivaratri festival on Friday.

Based on information by K Dhanasekar, a local, Trichy-based Aatrupadai heritage group inspected the remains. The temple was found on the outskirts of Kumbakudi village near Thiruverumbur. As the ruins are in a secluded spot and covered with weeds, locals said they had not explored the temple site.

R Baskar



FROM THE RUINS

The group on Thursday recovered three stones with Tamil inscriptions of which only one was readable. Based on the architectural style of the remains, the group claimed that the temple belonged to the 10th century. An inscription dating back to the reign of 12th century Chola king Vikramacholan was among the ruins. The inscription reads that the temple was situated in Pandiya Kulasaani valanadu (Chola's administrative division), on the southern banks of the Cauvery river.

"The name of the village was mentioned as Kumbakudi. The village has been bearing the same name for hundreds of years. One Kumbakudi Nattalvan, a local official had presided over the donation of land made to the temple," V Parthiban, founder of Aatrupadai said.

The name of the temple was not readable in the inscription but the names of a few individuals like Anbiloorudaiyar and Thiruvenkadudaiyar (both bearing the places of villages near Lalgudi and Sirkazhi respectively) were found. The sidewalls of the temple have vanished over a period. A 2.5-foot tall Shivalingam intact among the remains was recovered.

Locals headed by S Sridhar cleaned the space near the temple to resume worshipping practice. "There may be a few more stone inscriptions which could add some information about the missing temple and the deity's name. The state archaeology department may conduct a technical study," Parthiban added.

திருச்சியில் பழங்கால சிவாலயம் கண்டெடுப்பு

திருச்சி, மார்ச் 7: திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் அருகேயுள்ள கும்பக்குடி கிராமத்தில், 10 ஆம் நூற்றாண்டு சிவாலயம் கண்டறியப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் அருகேயுள்ள கும்பக்குடியில், சிவாலயம் சிதைந்த நிலையில் புதர் மண்டிக் கிடந்தது. கிராம மக்களுடன் சேர்ந்து, சிவ வழிபாட்டுக் குழுவினர் இடிபாடுகளை ஒழுங்குபடுத்தி, சிவாலயத்தை கண்டுபிடித்துள்ளனர்.

திருச்சியில் உள்ள மத்திய அரசின் (எச்.ஏ.பி.பி) எச் இபிஎப் தொழிற்சாலையில் பணிபுரியும் தனசேகர் என்பவர், கும்பக்குடியில் கண்டறியப்பட்ட பழமையான சிவாலயம் குறித்து, ஆற்றுப்படை வரலாற்று அமைப்பினருக்கு தகவல் தெரிவித்தார். அங்கு ஆய்வு நடத்திய ஆற்றுப்படை வரலாற்று அமைப்பைச் சேர்ந்த பார்த்திபன் கூறியதாவது:

கி.பி 10-ஆம் நூற்றாண்டு சோழர் காலத்தைச் சேர்ந்த இக்கோயிலின் கல்வெட்டுகள் ஆங்காங்கு சிதைவுற்று காணப்படுகின்றன. இக்கோயிலில் உள்ள விக்ரம சோழரின் கல்வெட்டு ஒன்றில், இந்த ஊர் குறித்த தகவல் உள்ளது. பாண்டிய குலாசனி வளநாட்டு தென்கரை பிரம்மதேயம் ஸ்ரீ சோழமாதேவி சதுர்வேதி மங்கலத்தின் உட்பிரிவாக இந்த ஊர் இருந்துள்ளது. கல்வெட்டுகளில் கும்பக்குடி என்றே உள்ளதால் ஆயிரம் ஆண்டுகள் கடந்தும், அதே பெயரிலேயே அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.



திருச்சி திருவெறும்பூர் அருகே கண்டெடுக்கப்பட்ட சிவாலயம்.

கும்பக்குடி நாடாழ்வான் என்ற அதிகாரியும், கவிர் நாட்டு வெள்ளாளரும், சோழமாதேவி சபையாரும் இணைந்து இக்கோயிலுக்கு நிலம் அளித்ததை இக்கோயில் கல்வெட்டு கூறுகிறது. மேலும், லால்குடி அருகே உள்ள அன்பிலுடையார், திருவெண்காடுடையார் போன்றோரின் பெயர்களும் மற்றொரு கல்வெட்டில் இடம்பெற்றுள்ளது. தொல்லியல் துறையினர், ஆங்காங்கு கிடக்கும் கோயில் கட்டுமான கற்களையும், இந்த ஊரிலும் ஆய்வு மேற்கொண்டால், சோழர் கால வாழ்வியல் குறித்து தகவல்கள் கிடைக்கும் என்றார்.

கும்பக்குடி கோவில் கண்டுபிடிப்பு









சிவகங்கை அரசுப்பள்ளி மாணவர்களுக்கு வரலாற்றைக் கூறும் நிகழ்வு
























ஆற்றுப்படையின் சிவராத்திரி பயண நிகழ்வு










மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்
www.aatrupadai.com
9790076772 / 9025516415


PKT
TRAVELS





ஏப்ரல் – 2024 இதழ் – 034 பங்குனி – சித்திரை



www.aatrupadai.com